# அவரவர் பாடு

க. நா. சுப்ரமண்யம்

மர்ம நாவல்

# அவரவர் பாடு

க. நா. சுப்ரமண்யம்

# பொருளடக்கம்

முன்னுரை

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

அத்தியாயம் 7

அத்தியாயம் 8

அத்தியாயம் 9

அத்தியாயம் 10

அத்தியாயம் 11

அத்தியாயம் 12

அத்தியாயம் 13

அத்தியாயம் 14

அத்தியாயம் 15

அத்தியாயம் 16

அத்தியாயம் 17

அத்தியாயம் 18

அத்தியாயம் 19

அத்தியாயம் 20

அத்தியாயம் 21

அத்தியாயம் 22

அத்தியாயம் 23

அத்தியாயம் 24

அத்தியாயம் 25

அத்தியாயம் 26

அத்தியாயம் 27

அத்தியாயம் 28

அத்தியாயம் 29

அத்தியாயம் 30

அத்தியாயம் 31

அத்தியாயம் 32

அத்தியாயம் 33

அத்தியாயம் 34

அத்தியாயம் 35

அத்தியாயம் 36

அத்தியாயம் 37

அத்தியாயம் 38

அத்தியாயம் 39

அத்தியாயம் 40

# முன்னுரை

எனக்கு மர்ம நாவல்கள் படிப்பதில் கனமான நாவல்கள் படிப்பதிலே போல ஈடுபாடு உண்டு. ஓரளவுக்கு மர்ம நாவல்களையும் இலக்கியத் தரமுள்ளதாகச் சமீப காலத்தில் ஃபிரெஞ்சு நாவலாசிரியர் ஜியார்ஜஸ் ஸிமனான் என்பவர் பண்ணுகியார் என்பதைக் கவனித்த போது ஏன் அம்மாதிரிச் சில நாவல்கள் எழுதக் கூடாது என்று தோன்றிற்று. நான் எழுதத் தொடங்கிய காலத்திலிருந்தே மர்ம நாவல்கள் எழுதி வந்திருக்கிறேன். சக்தி விலாசம், ஆயுள் தண்டனை, கந்தர்வ லோகத்தில் கொலை என்று பல தொடர்கதைகளாகப் பல பத்திரிகைகளில் வெளிவந்த பின் சிதம்பரத்தில் என் தகப்பனார் கண்முன் நடந்த ஒரு சம்பவத்தை வைத்து அதற்குக் கண், காது, மூக்கு, கால், மனம், காலம் என்று எல்லாம் சேர்த்து ‘அவரவர் பாடு’ என்கிற நாவலை எழுதினேன்.

வரலாறு எழுதுவது போல அறிவு பூர்வமான துப்பறியும் நாவல்களில் எல்லா விஷயங்களும் மிக மிகத் தெளிவாக முடியும்போது சொல்லப்பட்டு விட வேண்டும். மர்ம நாவல்களில் அப்படியில்லை; ஒரு மர்மம் துலங்கிய மாதிரியும் இருக்கவேண்டும் & முழுக்கத் துலங்கிவிடாமலும் இருக்க வேண்டும். சமஸ்கிருத இலக்கியத்தில் த்வனி என்று ஒரு சித்தாந்தம் சொல்லுகிறார்களே அது மர்ம நாவலில் அதிகமாக இடம் பெற வாய்ப்பு இருக்கிறது.

தமிழில் மர்ம நாவல்கள் எழுதுகிறவர்கள் மிகவும் குறைவு. எழுதுபவர்களும் பொது ஜன ஆதரவு நாடி ஸெக்ஸ், புரசை வாக்கத்தில் ரைஃபிளினால் சுடுவது, வக்கீல் சாதுர்யம், வாவ் வகையறாக்களை உபயோகித்து மர்மப் போக்கைக் கெடுத்து விடுகிறார்கள். டாஸ் டாவ்ஸ்கியில் பல நாவல்களில் மர்மம் என்பது மிகச் சிறப்பாக வந்திருக்கிறது. அதேபோல் சில ஜேம்ஸ் ஹாட்லி சேஸ் நாவல்களிலும் இருக்கிறது. பிரெஞ்சு வாசகர்கள் சேஸை நல்ல இலக்கி யாசிரியராகக் கருதுகிறார்கள் என்று கேள்விப்படும்போது ஓரளவு நியாயம் என்றே தோன்றுகிறது.

இன்னும் பல மர்ம நாவல்கள் எழுதிப் பார்க்க ஆசை யுண்டு செய்யவேண்டும்.

இதன் முதற்பதிப்பைக் குயிலன் வெளியிட்டார். இரண்டாவது பதிப்பை ஸ்டார் கண இராமநாதன் வெளி யிடுகிறார். அவர்களுக்கு என் நன்றி உரியதாகிறது.

**க. நா. சுப்ரமண்யம்**

# அத்தியாயம் 1

அந்த மாதத்துப் பத்திரிகையில் நான் எத்தனையோ நாட்களுக்கு முன் எழுதிய 'கொலை பாதகன்' என்கிற கதையை, "இதோ ஒரு நல்ல கதை" என்று பிரபலப்படுத்தித் திறம்படப் பிரசுரித்திருந் தார்கள். அதாவது மார்ச்சு மாதப் பத்திரிகையில். அந்தப் பத்திரிகை வெளிவந்து நாலைந்து நாட்களுக்குப் பிறகுதான் சின்னையா ஹோட்டலில் காபி சாப்பிடப் போனேன்.

சின்னையாவை எனக்கொரு பத்துப் பனிரண்டு வருஷங்களாக – ஏன் அதிகமாகவே கூடத் தெரியும். என்னைக் கண்டதுமே, பெட்டியிலிருந்தபடியே "வாங்க வாங்க" என்று சொல்லிவிட்டு, தன் பக்கத்தில் ஸில்க் ஜிப்பாவும், வைரப் பொத்தான் களுமாக, அமுத்தலாகக் கிராப்பை ஒருவாரு வாரி விட்டு ஒரு விசிறும் விசிறிவிட்டிருந்த மனிதனிடம் "அன்று படித்தீர்களே, அந்தக் கதையை எழுதியவர் இந்த ஐயாதான்" என்றான்.

எனக்கு எப்பொழுதுமே என் எழுத்தைப் பற்றிய விஷயங்களில் ஒரு பெருமிதம், பரவசம் உண்டு. ஆகவே முதலில் சரிவரக் கவனிக்காத அந்த ஸில்க் ஜிப்பா அமுத்தல் கிராப் ஆசாமியைச் சற்று நன்றாகக் கவனித்தேன். அந்த மனிதனின் முகத்திலே ஒரு தடித்தனம் இருந்தது – சிவப்பாகத் தான் இருந்தான் ஆசாமி என்றாலும் அத்தோல் ஒரு காண்டா மிருகத்தின் தோல் மாதிரி இருந்தது. மூக்கும் சற்றுக் கட்டையாக குட்டையாகத் தடியாகத்தான் இருந்தது. உதடுகளும் சொற சொறப்பாகத் தடித்து இருந்தன. அந்த முகவாய்க் கட்டையிலே ஒரு பிடிவாதமும், அழுத்தமும் த்வனித்தன. உதட்டுக்கு மூன்று விரல் முகவாய்க் கட்டை முன்வந்திருந்தது என்று கவனித்தேன். புருவத்து மயிரும் தலை மயிரும் சேர்த்துப் பின்னலாம் போல இருந்தது. அடர்த்தியான புருவமயிர். நெற்றியே இல்லை என்று சொல்லக்கூடிய நெற்றி. ஆனால் அந்தப் புருவங்களுக்கடியில் மின்னிய கண்கள்தான் எப்படிப்பட்ட கண்கள்! குரூரம் நிறைந்த கண்கள். காட்டு மிராண்டிக் காலத்தில் பிறந்திருந்தால் அந்த மனிதன் சித்திரவதை செய்யும் அதிகாரியாக யாராவது ஒரு கொடுங்கோல் மன்னனிடம் வேலை பார்த்திருப்பான் என்று தோன்றியது எனக்கு. யார் என்ன கெஞ்சினாலும் அசைந்து தரும் சுபாவமற்ற மனிதன் அவன், நெஞ்சில் ஈரமேயில்லாதவன் அவன் என்று எனக்கு அவனைப் பார்த்த மாத்திரத்தில் தோன்றியது.

அதே வினாடி அவன் ஒரு பெரிய கொலைகாரனாகவே இருக்கலாமோ என்றும் தோன்றிற்று எனக்கு. அப்படியானால் சின்னையா பாத்திரமறிந்துதான் என் கொலைபாதகன் கதையைப் பற்றிப் பேசினாரோ?

எனக்குச் சட்டென்று நினைவுக்கு வந்தது. சின்னையாவின் அண்ணா ஒருவர் – ஊரெல்லாம் அருவருக்குப் பெயர் சம்பந்தம் என்று சொன்னார்கள் – ஒரு கொலைக் கேஸில் அகப்பட்டுக் கொண்டு செஷன்ஸ் கோர்ட்டில் போதுமான ருஜுவில்லை என்று சென்ற மாதம்தான் விடுதலையானார் என்று கேள்விப் பட்டது எனக்குச் சட்டென்று நினைவுக்கு வந்தது.

# அத்தியாயம் 2

''நீயும் என்னோடு உன் ஓட்டல் காபியைச் சாப்பிட வாயேன். உன் அண்ணா – சம்பந்தம்தானே அது? – வரச் சொல்லேன்'' என்றேன் நான். எனக்கு எப்பவுமே என் எழுத்துப்பற்றித்தான் நினைவு. ஏதாவது விஷயம் கிடைக்காதா எழுதுவதற்கு என்று – கழுகுக்கு வியர்க்கிற மாதிரி எனக்கு வியர்த்துக் கொண்டிருந்தது. சத்தியாக்கிரஹ நண்பரைப் பார்க்கப் போன இடத்தில், ஜெயில் வாசலில் பத்தடி தூரத்தில் ஒரு கொலைகாரனைப் பார்த்தேன் – அப்போது – அது 1942இல் அதை எழுதினேன். இப்போது வேறு ஒரு தினுசான கொலைகாரனை – கோர்ட் அவன் மேல் போதுமான சாட்சியம் இல்லை என்று தள்ளி விட்டாலும் கூட அவன்தான் அந்த ராஜவேலுவைக் கொலை செய்தவன் அதில் சந்தேகம் இல்லை என்று ஊரார் சொல்லிக் கொண்டார்கள். எனக்கென்ன அதற்குமேல் தெரியும்? அந்தக் கொலைகாரனை நெருங்கிக் காபி சாப்பிடலாமே, அதை ஒரு புது அனுபவமாக எழுதலாமே என்று எனக்கு நினைப்பு.

''ஐயா அறிவாளி, கெட்டிக்காரர்னு நீ சொன்னது சரிதான் தம்பி'' என்றான் சம்பந்தம்.''உடனேயே நீ

ஒரு வார்த்தை அவரிடம் சொல்றத்துக்கு முன்னாடியே நான் யாருன்னு புரிஞ்சுக்கிட்டாரே. இப்படிப்பட்ட வங்ககிட்ட பேசறத்திலே ஒரு சொகம் இருக்குங்க. ஐயா தஞ்சாவூர்ப் பக்கமா?''

''திருவாலூரு'' என்றேன்.

''திருவாலூர் கமலத்தைத் தெரிஞ்சிருக்குமே?''

''யாரு? எனக்குக் கோயில்லே குடியிருக்கிற கமலத்தைத்தான் தெரியும்'' என்றேன் நான்.

''நான் சொல்ற கமலம் கோயில்லே குடியிருக்கிற கமலம் இல்லே. விஜயபுரத்திலே நாகப்பட்டினம் ரோட்டிலே யிருந்து ஓடம்போக்கி ஆத்துக்குப் போகிற வழியிலே இருக்கிற பொட்டுத் தெருவிலே குச்சிலே குடியிருக்கிற கமலம்தான் நான் சொல்ற கமலம்'' என்றான் சம்பந்தம்.

''நான் 1922 முதல் 1924 வரையில் திருவாலூரில் படிச்சேன் ஒரு மூணு வருஷம். அதற்குப் பிறகு இன்னும் அந்தப் பக்கம் போகக்கூட இல்லை. சொந்த ஊருன்னு யாராவது கேட்டா திருவாலூரு என்று சொல்றதைத்தவிர எனக்கு அதுபற்றி அதிகம் ஒன்றும் தெரியாது'' என்று அந்தக் கமலத்தைப் பற்றி என் அறியாமையை ஏற்றுக் கொண்டேன்.

அத்துடன் நிறுத்தாமல் “வாங்க. உட்கார்ந்து காபி சாப்பிட்டுக் கிட்டே பேசலாம்” என்று சம்பந்தத்தையும் உரிமையுடன் அழைத்தேன்.

ஹோட்டலிலே வியாபாரம் அதிகமாக ஆகிற சமயம் அது. கூட்டமாக இருந்தது. சின்னையாவுக்குக் கல்லாப் பெட்டியை விட்டு எழுந்துவரத் தைரியம் இல்லை. “மணி! அவங்க ரெண்டு பேருக்கும்....”

“மணிக்கு என்னைத் தெரியும்!” என்று சொல்லிக் கொண்டே திறந்த மாடியில் முல்லைக்கொடி படர்ந்திருந்த படலுக்குப் பக்கத்தில் இருந்த மேஜையில் போய் உட்கார்ந்தேன்.

# அத்தியாயம் 3

வழக்கமாக மாலையில் காபி சாப்பிடப் போனால் அந்த ஆஸனத்தில்தான் உட்காருவேன். அதே மணிதான் எனக்கு ஒரு ஸ்வீட், சூடாக ஏதாவது ஒரு காரம், ஸ்டிராங்காக சக்கரை தூக்கலாக ஒரு கப் காபி எல்லாம் கொணர்ந்து தருவான். மாமூல்படி எல்லாம் வந்தது. சம்பந்தத்துக்கும் சேர்ந்து வந்தது.

‘‘சின்னையாவை உங்களுக்கு நல்லாத் தெரியும் போலிருக்கு’’ என்றான் சம்பந்தம்.

‘‘பதினைந்து வருஷத்துப் பழக்கம்.’’

‘‘உங்களைப் பற்றி நேத்திப் பூராவும் சொல்லிக் கிட்டிருந்தான்.’’

‘‘நேத்தே வந்துட்டீங்களா நீங்க! நான் பார்க் கல்லியே. வழக்கமா இந்த நேரத்துக்குத் தினமும் வருவேன். ஊரில் இருந்தால் நான் இங்கு வராத நாளே கிடையாது. அப்படி ஒரு பழக்கம்.’’

‘‘நேத்து... நேத்து’’ என்று ஆரம்பித்துத் தயங்கிய சம்பந்தம் கடைசியில் தீர்மானத்துடன், ‘‘உங்கக்கிட்ட மறைப்பானேன்? போலீஸிலே ஒரு அவசர ஜோலியாகக்

கூப்பிட்டனுப்பினாக. போய்க் கையெழுத்துப் போட்டு விட்டு வந்தேன். இந்தவூர் இன்ஸ்பெக்டர் ஐயா....’’

‘‘யாரு ஃப்ரான்சிஸ்ஸா?’’ என்றேன்.

‘‘ஆமாம். ஐயாவுக்கும் தெரியுமா அவரை? அவர் நமக்கு ரொம்ப வேண்டியவருங்க. ரொம்ப ரொம்ப வேண்டியவருங்க’’ என்றான் சம்பந்தம்.

‘‘திருவாலூர் – அல்லது விஜயபுரத்து மேட்டுத் தெருக் கமலத்தைப் பத்தி ஏதோ ஆரம்பிச்சீங்களே!’’ என்றேன் நான். எனக்குக் கதை எங்காவது போய்விடப் போகிறதே என்று பயம்.

‘‘விட்டுத் தள்ளுங்க சவத்தை. அதைப்பத்திப் பேசினாலே பாவமுங்க!’’ என்றான் சம்பந்தம்.

அடேயப்பா! இந்தக் கொலைகாரனுக்கும் கூடப் பாவம் புண்ணியம் எல்லாம் உண்டா என்று மனத்திற்குள் வியந்து கொண்டே, ‘‘சின்னையா கடை

ஹல்வான்னா ஹல்வாதான். இந்த ஊரிலே இது மாதிரி வேறு எங்கேயும் கிடைக்காது.''

"இது சுமாரா யிருக்குங்க! ஆனாலும் அந்த நாளிலே தஞ்சாவூர் பரமேசுவரய்யரு ஹோட்டலிலே கிடைத்த அல்வா மாதிரி இப்போ இங்கெங்கே கிடைக்குது?'' என்று நாக்கைச் சப்புக் கொட்டினான் சம்பந்தம்.

எனக்கும் பரமேசுவரய்யர் கடை ஹல்வாவையும், அவர் கடை ரவாதோசை சாம்பாரையும் எண்ணி நாக்கைச் சப்புக் கொட்டவேண்டும் போலத்தான் இருந்தது. இந்த மனிதன் கொலைகாரன் மட்டும் அல்ல நல்ல ரஸிகனும் கூட என்று எண்ணிக் கொண்டேன். சாப்பிடுவதிலே இத்தனை ரஸனை யுள்ளவன் கொலை காரனாக இருப்பானா என்கிற சந்தேகம் கூட வந்தது எனக்கு. "நீ தஞ்சாவூரிலேயும் இருந்திருக்கிறாயா?'' என்றேன்.

"நான் எந்த ஊரிலே. இருந்ததில்லென்னு கேளுங்க?'' என்றான் சம்பந்தம் அடக்கமாக. "அந்தப் பரமேசுவரய்யருக்குக் குழந்தை குட்டியில்லை.''

"ஆமாம். எனக்குங்கூட அது நினைவிருக்கிறது'' என்றேன் நான்.

# அத்தியாயம் 4

பரமேசுவரய்யரைப் பற்றிய பேச்சிலும், வேறு பல சம்பந்த மில்லாத நினைவுகளிலும் பொழுதுபோய் விட்டால் கதை கிடைக்காது போய்விடப் போகிறதே என்று பயந்தான் எனக்கு. ஹல்வாவைப் பற்றிய நினைப்பு சுவைப்பதற்குப் போதாது. ஆகவே ஏதாவது கதைக்கான விஷயமாகப் பேச்சு வளரட்டும் என்று எண்ணியவனாக "உங்க கேசு நல்லபடியாக முடிந்துவிட்டது இல்லையா?" என்றேன்.

"ஜோசியர் ஐயா, பரமயோக்யர் அவர். கேசு ஆரம்பத் திலேயே இப்படித்தான் முடியும்னு சொன்னார்" என்றான் சம்பந்தம். "அதைச் சொல்லச் சொல்லத் தான் நான் என் வக்கீல் ஐயாவை வழக்காட ஒவ்வொரு தடவையும் தூண்டினேன்."

"யாரப்பா அவ்வளவு திடமாகச் சொன்ன ஜோசியன்?" என்றேன் நான்.

"அதான் கும்பகோணத்தில் பாலக்கரை ஜோசியரு. நீங்ககூடக் கேள்விப்பட்டிருப்பீங்க – ரொம்பப் பிரபல மானவருங்க அவரு. பட்டணத்திலே ரேசுக்குப் போறவங்கல்லாம் அவரைக் கேட்டிண்டுதான் போறாங்கன்னு சொல்றாங்க."

"நல்ல ஜோசியராகத்தான் அவர் இருக்கவேணும்" என்றேன் நான்.

"மேட்டுத் தெருக் கமலத்தைத் துரத்திக்கிட்டு போறப் போதான் நான் முதல்முதலாக அந்தப் பாலக்கரை ஜோசியரைச் சந்தித்தேனுங்க. அதுக்குப் பிறவு நான் அவரைக் கேட்டுக்காம எதுவுமே செய்யறதில்லை" என்றான் சம்பந்தம்.

கடவுள் பக்தி, ஜோசிய பக்தி, கமலம் பக்தி, காபி பக்தி – இப்படி எத்தனை பக்திகள் ஐயா இந்தக் கொலைகாரனுக்கு என்று எண்ணியவனாக நான் சொன்னேன்: "இதோ பார்: நீ இப்படித் தாறுமாறாகச் சொன்னாயானால் எனக்கு ஒன்றும் புரியாது. ஒரே குழப்பமாக இருக்கிறது. வரிசைப்படுத்திக் கிரமமாகச் சொல்லு...."

"வரிசைக் கிரமமாகச் சொல்றதானால் நான் கமலத்தின் தகப்பனைப் பத்திச் சொல்லணும். அந்த மீசைக்காரன் தஞ்சாவூர் ஹோட்டல் பரமேசுவரய்யர் கிட்டே க்ளீனராக இருந்தான்" என்றான் சம்பந்தன்.

"மீசைக்கார நடேசனா?" என்றேன் நான். எனக்கும் தெரிந்தவன்தான் அவன்.

“அவனே தானுங்க? அவனைக் கொன்னுட்டேன்னு தானே என் மேலே கேசு போட்டாங்க....?”

“அப்படியா? நீ ஏன் அவனைக் கொன்னாய்?”

“அவன் எங்கே செத்துப் போனானுங்க! அவன் தான் உயிரோடு கல்லாட்டமா இருக்கானுங்களே! அவனை என் வக்கீல் ஐயா கோர்ட்டிலே கொண்டுவந்து நிறுத்தினப்புறம் தானே நீதிபதி ஐயா ருஜுவில்லேன்னு என் கேஸைத் தள்ளிப் பிட்டாரு....” என்றான் சம்பந்தம்.

“ஆகவே மீசைக்கார நடேசன் சாகவில்லை. ஆனால் அவனைக் கொன்றதற்காக உன்னைக் கைது செய்து வரிகொடுப் போர் பணத்தையெல்லாம் வீணாக்கி, நாலைந்து வருஷம் கேசு நடத்தி, ருஜுவாகவில்லை என்று விட்டுவிட்டார்கள், இல்லையா! அப்படித் தானே?” என்று கேட்டேன்.

“மீசைக்கார நடேசன் சாகவில்லை. மீசைக்காரன்னு அவங்க முதல்லே நினைச்சாங்க. அப்புறம்தான் அது மீசையில்லாத நடேசன்னு தெரிய வந்துச்சுங்க...”

“எது மீசையில்லாத நடேசன்னு தெரிய வந்திச்சு...?”

“செத்துப்போனது....”

“அப்படியானால் யாரோ ஒருவன் கொலை செய்யப்பட்டு இறந்தது உண்மை. அவனை நீ கொல்ல வில்லையா?” என்றேன்.

“மீசைக்கார நடேசனைக் கொன்னதாகத்தானே என் மேல் கேஸ் எடுத்தாங்க? அவன்தான் சாகவில்லை என்று ருஜுவாகி விட்டதே! உடனே என்னை விட்டு விட்டாங்க.”

“செத்தவன்....?”

“அவன் செத்துப் போனான். மீசைக்காரன் மட்டும் உசிரோடு இருக்கான். கதையெல்லாம் எழுதுறீங்க இது புரியல்லை எங்கிறீறங்களே!” என்றான் சம்பந்தம். நான் புரிந்துகொள்ள வேண்டும் என்று சொன்னான்; கேலியாகச் சொல்லவில்லை.

# அத்தியாயம் 5

காபியை ருசி பார்த்து உறிஞ்சிக் கொண்டே நான் யோசித்தேன். இப்படியே போனால் அவிழ்க்க முடியாத முடிச்சுக்கள் தான் அதிகமாகுமே தவிர, எதுவும் விளங்காது என்று எனக்குத் தோன்றிற்று. இன்னொரு கப் காபி ஆர்டர் பண்ணினேன். சம்பந்தமும் சளைக்காமல் இன்னொரு கப் காபி ஆர்டர் செய்தான். அவனுக்கு என்ன, முதலாளியின் அண்ணன்; காசா செலவு?

எனக்கோ அவன் சொல்லக்கூடிய கதை தேவை. அவனோ சரிவரச் சொல்லமாட்டான் போல இருந்தது. என்ன செய்வது என்று மிகவும் தர்மசங்கடமாக இருந்தது.

திடீரென்று "அந்தக் கமலம் எப்படியிருப்பாள்?" என்றேன்.

"லட்டு மாதிரி இருப்பாள்" என்று சுருக்கமாகப் பதில் அளித்தான் சம்பந்தம். அவள் அவனுக்கு இன்னமும் இனித்துத்தான் கிடந்தாள் என்பது எனக்கு நன்கு புரிந்தது.

"இப்போது எங்கே அவள்?"

"அவள்தான் செத்துப் போய் விட்டாளே?"

"எப்போ? ஏன்? எப்படி?" என்று கேட்டேன்.

"உங்களுக்குப் புரியும்படியாக எனக்குச் சொல்லத் தெரியல்லைங்க" என்று ஒப்புக் கொண்டான் சம்பந்தம். "நான் என்ன கதை எழுதறவனா – கோர்வையாகக் கதையைச் சொல்ல? எப்படியோ ஆரம்பிச்சு எப்படியோ முடிக்கிறேனுங்க."

"ஆரம்பி. முடிவு நோக்கி நகர்ந்து முடி பார்க்கலாம்" என்றேன்.

"என்னைப்பத்தி ஒரு பெரிய பொஸ்தகமே எழுதலாமுங்க" என்றான் சம்பந்தம்.

"எழுதறேன்" என்றேன்.

"எனக்குச் சுமாராப் படிக்கவருமுங்க – அவ்வளவா பேசத் தான் வராதுங்க" என்றான். பின்னர் சட்டென்று "அந்தக் கமலத்தைப் பற்றி அவுங்க ஊர்க் கவிராயர் ஒரு பாட்டுக்கூடப் பாடினாருங்க. நீங்க பல புஸ்தகம் படிச்சிருப்பீங்களே, அதையும் படிச்சிருக்கீங்களா....?"

“பாத்ததா நினைவில்லை!” என்றேன்.

“ஜோராகப் பாடலாமுங்க. வாய்விட்டு கைத் தாளம் போட்டுக்கிட்டுப் பாடினா ரொம்ப நல்லா இருக்குமுங்க....”

“சரி. அவள் காவியத்து நாயகி. நீ வசன காவியத்து நாயகன்.”

“அப்டின்னா என்னங்க?” என்று விசாரித்தான் சம்பந்தம்.

“உன்னைப் பற்றி ஒரு நாவல் நான் எழுத ஆசைப்படறேன். விஷயத்தைச் சொல்லமாட்டேன் என்கிறாயே!” என்றேன்.

## அத்தியாயம் 6

“நம்ப சம்பந்தத்துக்கு எங்கே போனாலும் நல்ல காபி கிடைக்கிற இடம் தெரியும். இதோ... நம்மூர் கதாசிரியரோடு சிநேகம் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டானே! குட் ஈவினிங் ஸார்” என்று கூறிக் கொண்டே ஃப்ரான்சிஸ் என்கிற போலீஸ் இன்ஸ்பெக்டர் மூன்றாவது நாற்காலி ஒன்றை இழுத்துப் போட்டுக் கொண்டு எங்கள் மேஜையண்டை உட்கார்ந்தார். “பையா, காபி கொண்டு வா” என்று உத்தரவு தந்தார்.

“சம்பந்தம் இந்த ஹோட்டல் முதலாளி சின்னையாவின் அண்ணா வென்று உங்களுக்குத் தெரியாதோ?” என்று கேட்டேன் நான் .

“அப்படியா? சொந்த அண்ணாவா? தெரியவே தெரியாதே எனக்கு. நம்ப சின்னையாவுடைய புகழ் எல்லாம் இந்த நல்ல காபியோடு சரி என்று எண்ணி யிருந்தேன் நான். இப்படிப் பிரக்யாதி பெற்ற அண்ணன் ஒருவன் நமது சின்னையாவுக்கு இருப்பதே எனக்குத் தெரியாதே என்று உண்மையாகவோ, பொய்யாகவோ வற்புறுத்தி வற்புறுத்தி, ஒரு தடவைக் கிரண்டு தடவையாகச் சொன்னார் ஃபிரான்சிஸ்.

அவர் மஃப்டி யாயிருக்கும் போதும் இப்படிப் பொய் சொல்ல வேண்டியதில்லை என்று தான் எனக்குத் தோன்றிற்று. ஆனால் போலீஸ்காரர்களின் விரோதம் நமக்கெதற்கு என்று மனசில் இருந்ததை நான் அவரிடம் சொல்ல வில்லை.”

சம்பந்தம் எழுந்து போய்விட யத்தனித்தான். ஆனால் நானும் விடவில்லை. கதையை வாங்கிக் கொள்ளாமல் விட்டு விட்டால் எழுத்தாளன் என்கிற பெயர் எனக்கு எப்படித் தகும்? ஃபிரான்சிஸ்ஸும் ‘இரு அப்பேன், போகலாம்! இன்னொரு கப் காபி சாப்பிடு. உன் தம்பி ஹோட்டல்தானே? பில்லில் போட மாட்டான்’ என்றார்.

‘தம்பியில்லாத போலீஸ்காரர்களுக்கும் கூடச் சின்னையா அழ வேண்டியிருந்ததே!’ என்று எண்ணிக் கொண்டேன், சொல்ல வில்லை. ஆனால் வாய் திறந்து, “சம்பந்தம் மீசைக்கார நடேசனையும், மீசையில்லாத நடேசனையும், மேட்டுத்தெரு லட்டுப் போன்ற கமலத்தையும் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான். நீங்கள் வந்தீர்கள்” என்றேன்.

“அது புது அயிட்டம். ஆனால் சம்பந்தத்தின் கதையைப் புரிந்து கொள்ள நீங்கள் வார் டயத்துக்குப் போக வேண்டும். அதாவது 1941, 1942 வாக்கில்

... நீங்கள் திப்பிலியார் என்று ஒருவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களோ....?'' என்றார் இன்ஸ்பெக்டர்.

‘‘திப்பிலியார்... திப்பிலியார்.... இருங்கள்! இருங்கள். ஏதோ கேள்விப்பட்ட மாதிரித்தான் இருக்கிறது. அவர்தானே 1950லோ அதற்குச் சற்றுப் பின்னரோ ஏதோ ஒரு கொலைக் குற்றம் சாட்டப்பட்டுத் தூக்கிலிடப்பட்டதாக .... ஆமாம் செய்தித்தாளில் அந்தக் கேஸ் பற்றிப் பத்தி பத்தியாக வந்ததே!''

‘‘ஆமாம். அவரேதான்! அவருடன் சம்பந்தமும் கூட்டு. கொலையிலும் கூட்டு – அவர் அடித்த பணத்திலும் கூட்டு'' என்றார் ஃபிரான்சிஸ்.

‘‘அப்படி யெல்லாம் சொல்லாதே ஐயா – போதுமான ருஜு இல்லை என்று நீதிபதியே சொல்லி விட்டாரே!'' என்றான் சம்பந்தம்.

நீதிபதிகளைப் பற்றித் தன் மனசிலிருந்ததை யெல்லாம் சொல்லலாமா வேண்டாமா என்று ஒரு விநாடி தயங்கினார் ஃபிரான்சிஸ். சொல்லா திருப்பதே நல்லது என்று சொல்லா திருந்தார்.

‘‘கதையை நீங்கள் தான் சற்றுத் தெளிவாகச் சொல்லுங்களேன்'' என்றேன்.

‘‘துப்பறியும் கதை மாதிரித் தலைகீழாக இன்று ஆரம்பித்து 1941இல் முடிக்கட்டுமா? அல்லது 1941இல் ஆரம்பித்து இன்று வரை சொல்லட்டுமா?'' என்றார் ஃபிரான்சிஸ்.

‘‘எப்படிச் சொன்னாலும் சரிதான்'' என்றேன், கதையைக் கேட்கும் ஆவலில்.

# அத்தியாயம் 7

“உலகத்தோடு ஒட்டிவாழ மறுக்கிற உங்களுக்கும் கூடத் தியாகராஜ திப்பிலியாரைப் பற்றித் தெரியும். கேள்விப் பட்டிருக்கீங்க இல்லையா?” என்று என்னையே க்ராஸ் கேள்வி கேட்டார் இன்ஸ் பெக்டர்.

“அவருக்கும் இந்தக் கதைக்கும் என்ன சம்பந்தம்?” என்றேன் நான், புரியாமல்.

“இந்த சம்பந்தம்தான் அந்த சம்பந்தம்” என்றார் ஃப்ரான்சிஸ்.

“ஆமாம்” என்று கல்யாணப் பெண் போல வெட்கத் துடன் தலை குனிந்தார் சின்னையாவின் அண்ணா சம்பந்தம்.

“அந்தத் திப்பிலியாரைப் பற்றி பதினைந்து ஆண்டு களுக்கு முன் ஏதோ கேள்விப்பட்டது நினைவுக்கு வருகிறது” என்று முகத்தைச் சுளித்துக் கொண்டு, காபியை ருசி பார்த்துக் கொண்டே சொன்னேன். “ஆமாம். 1943, அல்லது 1944-இல் இருக்கும் - அவர் பட்டணத்திற்குப் போய் யாரோ ஒரு பெரிய சினிமா ஸ்டாரினுடைய பாகார்ட் காரை விலைக்கு வாங்கி

வந்து அதில் அந்த சினிமா ஸ்டார் உட்காருகிற பக்கத்திலே, அந்த இடத்திலேயே உட்கார்ந்து சவாரி செய்து கொண்டு ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தார் என்று இளவட்டங்கள் பலர் அந்த நாளில் அவரைக் கேலி செய்தது எனக்கு நினைவுக்கு வருகிறது” என்றேன். அப்போது எனக்குக் கல்லூரி மாணவர்கள் பலர் சிநேகமாக இருந்த காலம்.

“ஆமாம். ஒன்றுக் கிரண்டாக, அதாவது சற்றேறக் குறைய ஒரு லக்ஷம் ரூபாய் வரையில் விலை கொடுத்து அவர் மந்திரிகுமாரி என்கிற பிரபல சினிமா ஸ்டாரின் பாகார்ட் காரை விலைக்கு வாங்கி வந்தார். அதிலே அவர் வலது புறத்து மூலையிலேதான் உட்காருவார் - கூட யாராவது வந்தால் தவறிப் போயும் கூட அந்த வலது புறத்து மூலையில் உட்கார விட்டு விடமாட்டார் என்பதும் ஆறேழு மாதங்களில் ஊரெல்லாம் பிரசித்தியாகிவிட்டது” என்றார் ஃபிரான்சிஸ். “மந்திரிகுமாரி அங்கேதான் உட்காருவாள். அதே இடத்தில் தானும் உட்கார்ந்து சவாரி செய்வதால் ஒரு ஆனந்தம் ஏற்பட்டது என்பது அவரே கதை கட்டிவிட்ட ஒரு சமாசாரம். அவர் அந்த வலது பக்கத்தில் உட்கார்வதற்கு ஒரு காரணம் உண்டு” என்று அந்தக் காரணத்தைத் தான் சொல்லாமல் சம்பந்தம் சொல்ல வேண்டும் என்று எதிர் பார்ப்பவரைப் போல அவனைப் பார்த்தார்.

‘‘ஆமாமுங்க. காரணமுண்டுங்க’’ என்றான் சம்பந்தம். ‘‘அந்த வலது பக்கத்துக் கதவுக்குள்ளுற ரகசிய அறை ஒன்று இருந்த துங்க. அதிலே ஒரு சிறு கைத் துப்பாக்கி எப்பவும் தயாராக இருக்குமுங்க. ஆனால் தியாகராஜத் திப்பிலியாருக்குத் துப்பாக்கி சுடவும் தெரியாது. அவருக்கு எது முன் பக்கம், எது பின் பக்கம் என்று கூடத் தெரியாது. துப்பாக்கியைக் கண்டாலே அவருக்குக் கைகால் நடுக்க லெடுத்து விடுங்க...’’

‘‘நடுக்கலெடுக்காத ஆளுங்களாப் பின்னர் பத்துப் பேர் வந்து சேர்ந்தாங்க. அது பிற்காலத்தில். அப்போது அந்தப் பக்கம்தான் உட்காருவாரு அவர்.’’

‘‘எதிரி கையில் தன் துப்பாக்கி அகப்பட்டுக் கொள்ளா திருக்கட்டும் என்பதற்காகவா?’’ என்று கூறிச் சிரித்தேன் நான்.

‘‘அதுவும் சரிதானுங்களே!’’ என்றான் சம்பந்தம்.

‘‘அது எப்படியோ! அவர் வலது பக்கத்தில் வருகிற வரைக்கும் அவருக்கு ஒரு தீங்கும் வரவில்லை. அந்தக்காரை வாங்கி, பத்தாவது வருஷம் ஒரே ஒரு தடவை அவர் வலது பக்கம் உட்கார முடியாமல் போய்விட்டது.’’

‘‘ஏன்?’’ என்றேன் நான்.

# அத்தியாயம் 8

ஒரு விநாடி சம்பந்தம் ஏதாவது சொல்வானோ என்று அவனைப் பார்த்தேன். என்னிடம், “அதெல்லாம் ஒண்ணுமில்லேங்க” என்றான் சம்பந்தம். “கோர்ட்டிலேயே தான் ருஜுவாகவில்லீங்களே! இன்ஸ் பெக்டர் ஐயாக்கிட்ட ருஜு இருந்தால் கோர்ட்டிலே தாக்கல் செய்திருக்க மாட்டாங்களா?” என்றான்.

நான் ஃப்ரான்ஸிஸ்ஸைத் திரும்பிப் பார்த்தேன். “அதை அது பற்றிய இடத்தில் விசாரிப்போம். இப்போது ஆரம்பத்திலிருந்து எனக்குத் தெரிந்த வரிசையில் கதையைச் சொல்றேன். 1943லே தியாக ராஜத் திப்பிலியார் பாகார்டு காரை வாங்கின போதே அதற்கெல்லாம் அவரிடம் காசு ஏது என்று ஊரில வதந்திகள் பல உலாவின.”

“அந்த வதந்திகளில் சில என் காதில்கூட விழுந்தன. நம்ம ஊர் டாக்டர் ஒருவரும் அவருமாகச் சேர்ந்து புதுச்சேரியிலிருந்து கள்ளக் கடத்தல் செய்கிறார்கள் என்றும், ஸில்க், தங்கம், கடியாரங்கள், மது என்று பலவித சாமான்கள் கொணர்ந்து வந்து லாபமடிக் கிறார்கள் என்றும், வதந்தி உலாவியது. இதெல்லாம் காரணமாக அந்த டாக்டர் பெயர் ஊரிலே மிகவும் பிரபல மாகியது – முனிசிபல் எலெக்ஷனிலே அவர் ஏராளமான வோட்டு வாங்கி முனிசிபல் கவுன்சிலரானார் – பின்னர் முனிசிபாலிடி அங்கத்தினர்களுக்குக் குழாய்த் தண்ணிக்குப் பதில் புதுச்சேரி மது ஊற்றித் தருவதாக வாக்களித்து முனிசிபல் சேர்மன் தேர்தலில் பெரும் வோட்டுக்கள் பெற்றுச் சேர்மன் ஆனார் என்றும் கேள்விப்பட்டேன்” என்றேன்.

“ஆமாம். சரியாகவே கேள்விப்பட்டீங்க” என்றான் சம்பந்தம்.

“அந்த டாக்டருக்கும் திப்பிலியாருக்கும் போலீஸிலேயும் உள் கைகள் பல இருந்தனர். எப்போது எங்கே சோதனை போடுவார்கள் என்று அறிந்து அவர்கள் தப்புவது அதனால் சுலபமாக இருந்தது. நான் பெயர்கள் எதுவும் சொல்ல விரும்ப வில்லை” என்றார் ஃபிரான்ஸிஸ்.

“நியாயந்தான்” என்றேன் நான்.

“என் கிட்டவே வந்து அந்தப் பரமார்த்த ஐயன் – அவன் தான் இந்த ஐயாவுக்கு முன் இன்ஸ்பெக்டராயிருந்தவன் – தகவல் சொல்லுவான். நானே தியாகராஜத் திப்பிலியாரிடம் தெரிவித் திருக்கிறேன்” என்றான் சம்பந்தம்.

“பரமார்த்த ஐயன் அல்ல அவன் பேரு. பிரணதார்த்தி ஐயர். அது போகட்டும். அது வேண்டாம் இப்போ.....” என்றார் ஃபிரான்சிஸ் அவசரம் அவசரமாக.

“எல்லோருக்கும் தெரிந்ததைப் பூராச் சொல்லுவது என்று ஆரம்பித்துவிட்டால் ஊரெல்லாம் நாறும் ஐயா” என்றான் சம்பந்தம். “ஊரெல்லாம் சாக்கடைகள்.”

“மொத்தத்தில் சம்பந்தம் சொல்றது உண்மை தான்” என்று போலீஸ் இன்ஸ்பெக்டரும் ஒப்புக் கொண்டார். “இந்த விஷயத்தில் என் கை கூட அத்தனை சுத்தமில்லைதான். நான் என்ன செய்வது? மேலதிகாரிகளின் உத்தரவுடன் விலைவாசிகள் ஏறுகிற போது நூறு இருநூறு கிடைத்தால் வேண்டாம் என்று சொல்ல மனம் வருகிறதா? கூட்டத்தோடு கோவிந்தாப் போட்டு ஒளிவதுதான் சுலபமாக இருந்தது.”

“அப்படிச் சொல்லுங்க” என்றான் சம்பந்தம். “என்னையே மடக்கி அதட்டி, உருட்டி ஐநூறு ஆயிரம்னு வாங்கிப்பிட்டாங்க ஐயா. மகா சாமர்த்தியக்காரருங்க இவரு....”

“அதெல்லாம் பழங்கதை இப்போது எதற்கு?” என்றார் ஃபிரான்சிஸ். “தவிரவும் இரைந்து பேசாதே. ஐயா கதை கேட்டாருன்னு சொல்ல வந்தால்....”

“சொல்லுங்க கதையை!” என்றான் சம்பந்தம் ஒரு புதுத் தன்னம்பிக்கையுடன். அதையும் கவனித்துக் கொண்டேன் நான்.

# அத்தியாயம் 9

திப்பிலியார் கார் வாங்கி வந்தவுடனேயே போலீஸஷுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. அதுவும் யுத்த சமயமா? எதிலே எப்படி ப்ளாக் மார்க்கட் பண்ணிச் சம்பாதித்தான் என்று கண்டுபிடித்தால் அவனிடம் யுத்த முயற்சிக்கு என்று பத்தாயிரம், ஐம்பதினாயிரம் என்று கறந்து விடலாமா என்று நம்ப கலெக்டருக்கு ஆசை. நிறைய ப்ரிட்டிஷ் சர்க்காருக்கு வசூல் பண்ணித் தந்தால் அவருக்கு ப்ரொமோஷன் ஆகும்...'' என்றார் ஃபிரான்சிஸ்.

''அப்போ இங்கே விவேகானந்தன்தான் கலெக்டராக இருந்தார் இல்லையா?'' என்றேன்.

''ஆமாம். அவரேதானுங்க. நானேதான் அப்போதும் இன்ஸ்பெக்டர். பதினேழு வருஷமாவுதுங்க நான் இன்ஸ்பெக்டராகி. ஒரு ப்ரொமோஷன் கிடைத்தது. அடுத்த ப்ரொமோஷன் எனக்குக் கிடைக்கவில்லை'' என்று பெருமூச்சு விட்டார்.

''இப்ப விவேகானந்தன் ஹைகோர்ட் ஜட்ஜாகி விட்டார்'' என்றான் சம்பந்தம்.

''திப்பிலியாரின் சொத்து விவரங்களைக் கண்காணித்து ரிப்போர்ட் அனுப்ப என்னைத்தான் நியமித்தார்கள். முதல் நாள் நான் போய் அவரைப் பார்த்துவிட்டு வந்த போது, முதல் தடவையாக சம்பந்தத்தையும் பார்த்தேன். இவருதான் அந்த வண்டியை ஓட்டிக்கொண்டு வந்து என்னை ஸ்டேஷனில் விட்டு விட்டுப் போனார்'' என்றார் ஃபிரான்சிஸ்.

''அன்று ட்ரைவர் சீட்டுக்குப் பக்கத்திலே உட்கார்ந்துக்கிட்டு வழி நெடுக வந்தீங்க. ஸீட்டிலே யாரோ நழுவ விட்டுவிட்டுப் போயிட்ட இரண்டு நூறு ரூபாய் நோட்டுக்கூட உங்களுக்கு அகஸ்மாத்தாகக் கிடைத்ததுங்களே!'' என்றான் சம்பந்தம், பல்லை இளித்துக்கொண்டு.

''என்ன ஞாபக சக்தியடா உனக்கு?'' என்றார் ஃபிரான்சிஸ். ''ஊரிலே இருந்து நடமாடிய வதந்தி உண்மைதான் – அவங்க புதுச்சேரியிலிருந்து சரக்குக் கொணர்ந்து விக்கிறாங்கன்னுதான் தோணுது. அதை நிரூபிக்க நம்ம போலீஸ் இலாகாவாலே முடியாது. ஸ்பெஷல் துப்பறியும் இலாகாதான் வரணும் என்று நான் ரிபோர்ட் எழுதிப் போட்டு விட்டு ஒதுங்கிக் கிட்டேன்.''

“அப்பத்தான் ராஜகோபாலன்னு ஒத்தர் வந்தாரு. கொள்ளடத்துக் கரையிலே ஒரு ஆசிரமம் அமைத்துக் கிட்டு அவர் குடியேறினாரு. கிராமச் சீர்திருத்தம் செய்யறதிலே நெறியாக இருக்கிறதாகச் சொல்லி கிட்டாரு அவரு. ஆனால் அவரை ஒரு நாள் இரவு பன்னிரண்டு மணிக்கு எங்க திப்பிலி யாரு ரைஸ் மில்லுக்குள்ளே பார்த்ததும் – அவரைப் பற்றிச் சந்தேகம் வந்துவிட்டது எனக்கு. நான்தான் விஷயத்தை திப்பிலி யாருக்குச் சொன்னேன். ‘சம்பு’ அப்படி தான் என்னைக் கூப்பிடு வாரு திப்பிலியாரு. ‘என்னடா பண்றது? விஷயம் தெரிந்து போயிடுமோ?’ என்றார். ‘பயப்படாதீங்க திப்பிலியாரே? விஷயம் இருந்தான்னா தெரியறதுக்கு? செத்தவன் பிழைச்சு வந்தா பேசப் போரான்’ன்னு சொன்னேன்” என்றான் சம்பந்தம்.

குறையையும் அவனே சொல்லுவானோ என்று காத்திருந்து விட்டு ஃபிரான்சிஸ் சொன்னார்: ‘அத்துடன் சம்பந்தம் நிறுத்தி விட்டது சரிதான். ஆனால் அந்த ராஜகோபாலன் என்கிற போலீஸ் இன்ஸ்பெக்டர் கொள்ளிடக்கரையில் எங்கே சமாதியானான் என்று கண்டுபிடிக்க மறுபடியும் என்னைத்தான் அனுப்பினார் என் இன்ஸ்பெக்டர்.”

“மொத்தமாக நம்ப ஐயாவுக்குத்தான் இதிலே லாபமுங்க” என்றான் சம்பந்தம்.

“மாடி வீடுதான் கட்டி விட்டேன் போயேன்” என்று குறைப் பட்டுக் கொண்டார் ஃபிரான்சிஸ்.

# அத்தியாயம் 10

“வேவு பார்க்க வந்தவனைத் தீர்த்துக் கட்டிப் பிட்டிங்களாக்கும். அதிலே அதிகமான சந்தேகத்துக் கிடம் தரும்!” என்றேன் நான்.

“தீர்த்துக் கட்டிப்பிட்டாங்க என்று எப்படி யார் நிச்சயமாகச் சொல்வது? ஆளைக் காணோம். அவ்வளவு தான்! இன்று வரையிலும் காணவில்லை. பத்தாயிரம் இருபதாயிரம் கொடுத்து எங்கேயாவது ஓடிப்போய்த் தலை மறைவாக இருக்கச் சொல்லி யிருக்கலாமில்லையா? அல்லது பலாத்காரமாக ஏதாவது அவரைப் படகிலே ஏற்றி லங்கைத் தோட்டத்திலே வேலை செய்யச் செய்திருந்தாங் கன்னா....”

“அப்படியெல்லாம் நடக்குமா இந்த நாளிலே! அதுவும் போலீஸ் இன்ஸ்பெக்டர் நாலுவிஷயம் தெரிந்தவராக இருப்பார். எந்த சந்தர்ப்பத்திலும் சமாளித்துக் கொண்டிருப்பாரே.....” என்றேன்.

“அதனால்தான் அவர் பணத்தை வாங்கிக்கொண்டு தானாகப் போயிருக்க வேண்டும், அல்லது கொல்லப் பட்டிருக்க வேண்டும் என்று போலீஸ் இலாகா எண்ணிற்று. என்னை வேவுபார்த்து ஊரிலே தகவல்

வதந்தி ஏதாவதுண்டா என்று விசாரித்து வர அனுப்பியது. போனேன்.... கொள்ளிடக் கரையில் கடலிலிருந்து எட்டு மைல் தூரத்திலிருந்த அந்தக் கிராமம் மிகவும் நல்ல கிராமம். அமைதி யான இடம். அந்தக் கோயிலும் படித்துறையும்! அந்தவூர் மனிதர்களும் பரமசாதுக்கள். ஐயா ஒருதரம் அந்தமாதிரி இடத்தைப் பார்த்துவிட்டு வரவேண்டும்” என்றார் ஃப்ரான்சிஸ் பரவசமாக. என்னையும் அங்கே ஆசிரமம் கட்டிக் கொள்ளச் சொல்வார் போல இருந்தது.

சம்பந்தமும் அந்த ஊர்பற்றிப் போலீஸ் சப்இன்ஸ் பெக்டரின் கவிதையை அப்படியே ஆமோதித்தான். சம்பந்தம், “ஆமாமுங்க! போனால் திரும்பியே வர மாட்டிங்க.....” என்றான்.

“ராஜகோபாலன் மாதிரியா?” என்று சிரித்தேன்.

“நல்லாப் பேசுகிறீங்க!” என்று சம்பந்தம் சொன்னான். “நீங்க அப்படியெல்லாம் அவரு மாதிரி தப்புத் தண்டாக் காரியங் களுக்குப் போகமாட்டிங்க. எங்க மில்லிலே நடுராத்திரியிலே அவருக்கு வேலை என்னங்க? எனக்கு என்னமோ அங்கே ஒரு பிசாசு சுத்துதுங்க என்று தெரியும். அதுதான் அவரைக் கடத்திக் கிட்டுப் போயிருக்கும் என்று தோணுதுங்க” என்றான்.

ஃபிரான்ஸிஸ் சிரித்தார். “அந்தப் பிசாசுக் கதையை அப்பவே நானும் கேள்விப்பட்டேன். அந்த ராஜ கோபாலனைப் பிசாசு தான் தூக்கிப் போய்விட்டது என்று கிராமத்தார் ஒரு இருபது பேராவது ஒரேயடியாகச் சாதித்தார்கள். அதுவும் அது பெண் பிசாசாம். இந்தப் புளியமரத்தின் மேலே தூக்கிப்போய் ஒரே தாவாகத் தாவி பேயுலகத்துக்குப் போயிட்டுதுங்க என்று சங்கிலித்தேவன் ஒரு மரத்தைக் கூடக் காட்டினான். அதிலே விசேஷம் என்னவென்றால் அந்த மரத்தின் உச்சியிலே அந்த ராஜகோபாலன் அன்று போட்டிருந்த கதர்ச்சட்டை கிழிந்து பறந்து கொண்டிருந்தது. உச்சாணிக் கிளையிலே..... அதற்கு மேல் அங்கு வேறு ஒரு தடயமும் கிடைக்கவில்லை” என்று ஃப்ரான்சிஸ் சொல்லும்போது சம்பந்தம் குறுக்கிட்டு “ஐயா வுக்கு மட்டும் அந்தத் தடவை ஒரு ஆயிரம் கிடைத்தது” என்றான்.

“எத்தனையோ? நினைவில்லை. ஆனால் அதை எப்படியோ அறிந்துகொண்ட பிரணதார்த்திதான் தொகையை எண்ணுறதுக் குள்ளே அதைத் தட்டிக் கிட்டுப் போய்விட்டான்....”

“அந்தக் கோபம்தானா உங்களுக்கு? அப்பவே கேட்டிருந் தீங்கன்னா இன்னொரு ஆயிரம், பாடாவதிக்குத் தெரியாமல் திப்பிலியார் தந்திருப்பாரே” என்றான் சம்பந்தம். “அப்ப வெல்லாம் பணத்துக்குப் பஞ்சம் ஏதுங்க. ஓசிக் காபி சாப்பிட எனக்கு மனமே வராதே. நாலுபேர் கூட இல்லாமே எந்தக் கடைக்கும் போக மாட்டேனே நான்.”

# அத்தியாயம் 11

சற்று தயங்கிவிட்டு ஃபிரான்சிஸ் எனக்குத் தன் நடத்தைபற்றிச் சந்தேகம் இருக்கக்கூடாதே என்கிற நினைப்பில் சொன்னார்: "எப்படிங்க நாமா போய்க் கேட்கிறது? கொடுத்தால் வாங்கிக்கிறது வேறு விஷயம்! கொடு என்று கேட்பதுதான் தப்பு. நமக்கும் ராஜகோபாலன் கதி – அது என்னவோ – ஆகிவிட்ட தானால் என்ன பண்ணுவது என்று பயமாகவும் இருந்தது. அந்தத் தடவை நான் திரும்பி வந்த சமயம் நமது போலீஸ் ஸ்டேஷனே அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது. அதிலிருந்து தான் தியாகராஜத் திப்பிலியார் கேசு உண்மை யிலேயே ஆரம்பமாகிறது என்று சொல்லவேண்டும்."

"அதாவது போலீஸ்காரர்கள் அதை ஒரு கேஸாக நடத்தத் தொடங்கினார்கள் என்றும், திப்பிலியார் சுடப்பட்டு இறந்தது, சம்பந்தம் சிறைப்பட்டது, ராஜவேலும் வரதராஜனும் உயிர் துறந்தது எல்லாமே அதிலிருந்து தான் தொடங்குகிறது. இல்லையா? அந்தச் சம்பவம் நடந்தபோதே கொஞ்சம் அறை குறையாக என் காதிலும் விழுந்த நினைவிருக்கிறது. இருந்தாலும் இப்போது நீங்களும் ஒருதரம் சொல்லுங்கள்" என்றேன் நான்.

"பெரியதுரை சின்னதுரை, நாலு இன்ஸ்பெக்டர்கள் எல்லோரும் வந்திருந்தார்கள், நான் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து சேரும்போது. ஆனால் போலீஸ் ஸ்டேஷன் இருந்த மேலவீதிக்கு நான் திரும்புவதற்கு முன்னரே இன்ஸ்பெக்டர் பஞ்சநதம் தெற்குவீதி செட்டியார் சத்திரத்திற்கு எதிரிலேயே என் சைக்கிளை நிறுத்தச் சொல்லி என் மடியிலிருந்த பணத்தைப் பறித்துக் கொண்டுவிட்டான். 'நான் போய்விட்டுப் பத்து நிமிஷத்துக்கெல்லாம் ஸ்டேஷனுக்கு வரேன்' என்று கிளம்பியவன் 'அந்தத் தியாகராஜத் திப்பிலியாருக்கு ஒரு பிள்ளைதானே?' என்று கேட்டான். 'ஒரே பிள்ளைதான். கான்வெண்டு ஸ்கூலிலே படித்துக் கொண்டிருக்கிறான்' என்றேன். 'வயது பதினைந்துக் குள்தான் இருக்கும்' என்றான் பஞ்சநாதம். 'தெரியாது' என்றேன். ஸ்கூலில் படிக்கிறான் என்றால் அவ்வளவு தானெடா இருக்கும்?' என்றான் பஞ்சநதம். அடா புடா என்று, பணத்தையும் பிடுங்கிக் கொண்டு அவன் என்னைப் பேசியது எனக்கு ஆத்திரமாக இருந்தது. ஆனால் ஆத்திரத்தை எப்படிக் காட்டுவது. 'நீ போய் சுதேசி ஹோட்டலிலே காபி சாப்பிட்டுவிட்டு, நான் வந்தபிறகு ஸ்டேஷனுக்கு வா. நான் வருவதற்கு முன் திரும்பிவிடாதே!' என்று எச்சரித்துவிட்டு இன்ஸ்பெக்டர் பஞ்சநதம் மோட்டார் பைக்கில் டப்டப்பென்று சப்திக்க தெற்குவீதியோடு போய் விட்டான். சுதேசி ஓட்டலில்

போய்க் காபி சாப்பிட்டுவிட்டு அரைமணி கழித்துத்தான், அதுவும் பஞ்சநதம் அதே சைக்களில் டப்டப்பென்று உள்ளே போன பிறகுதான் எழுந்து நான் ரிப்போர்ட் செய்யப் போனேன்.''

சற்றுத் தயங்கினார் இன்ஸ்பெக்டர் ஃப்ரான்சிஸ். ''அங்கே ஒரே அமளிதுமளியாக இருந்தது. ஒரு கோணிப் பையில் ஒரு சிறு பையனுடைய தலைமட்டும் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்திருந்தது. மேலே சொல்லும்'' என்று ஃப்ரான்ஸிஸ்ஸைத் தூண்டினேன்.

''ஆமாம். பஞ்சநதம் நான் உள்ளே வந்ததும், யாரோ மந்திரவாதி மாதிரி, அந்த ரத்தக்கறை படிந்து இருந்த தலையைச் சற்றும் அசங்கியம் இன்றிக் கையில் எடுத்து எனக்குக் காட்டினான். சுருள் சுருளாகக் கிராப்பு. பையனுக்கு வயது பதினாலுதான் இருக்கும். 'நீ தியாகராஜத் திப்பிலியாருடைய மகனை, நாக ராஜூவைப் பார்த்திருக்கிறாயில்லையா ஃபிரான்சிஸ்? அவன் தலைதானே இது?' என்று கேட்டான். தயங்காமல் 'ஆமாம்' என்று பதில் அளித்துவிட்டேன் நான். நான் அந்தப் பையனைப் பார்த்ததேயில்லை. ஆனால் பஞ்சநதம் அந்த மாதிரிக் காரணம் இல்லாமல் கேட்கமாட்டார் என்று எண்ணினேன். அது திப்பிலியார் மகன்தான். அவன் தலையைச் சீவி அப்படிக் கோணிப் பையில் போட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு வரதராஜனும் ராஜவேலும் அனுப்பப் போகிறார்கள், அதற்காக ஆக வேண்டிய காரியங்களை யெல்லாம் பார்ப்பதற்காக இன்ஸ்பெக்டர் பஞ்சநதத்துக்கு ஆயிரக்கணக்கில் ஸம்திங் தந்திருக்கிறார்கள் திப்பிலியாரின் எதிரிகள் என்பதெல்லாம் எனக்குப் பின்னர்தான் தெரிந்தது. எதிரிகள் பணம் தரவேதான் திப்பிலியாரும் எனக்குப் பணம் தந்திருப்பார் என்று கெட்டிக்காரத் தனமாக யூகித்துக்கொண்டு கொடுத்ததைக் கேட்பவர் மாதிரி அந்தப் பணத்தை வாங்கிக் கொண்டிருக்கிறார். இரு தரப்பினருடைய பணமும் அவரிடம் போய்ச் சேர்ந்துவிட்டது. நான்தான் மத்தியில் ஏமாந்து நின்றேன்....''

''அந்தத் திப்பிலியாருடைய மகனுடைய தலைதானே?'' என்றேன் நான்.

உடனடியாக ஃபிரான்சிஸ் பதில் தரவில்லை. சற்று நேரம் கழித்துச் சொன்னார்.

# அத்தியாயம் 12

“இன்ஸ்பெக்டர் பஞ்சநதத்தைப் பற்றி உங்களுக்குச் சரிவரத் தெரியாது என்று நினைக்கிறேன்” என்றார் ஃபிரான்சிஸ். “இல்லாவிட்டால் இப்படிக் கேட்க மாட்டீங்க. பஞ்சநதத்துக்கு உண்மையாக ஏதோ விஷயம் தெரியவேதான் அதைப்பற்றிப் பகிரங்க மாகப் பேசினார். தெரிந்தேதான் சொன்னார். நானும் அது நாகராஜாவின் தலைதான் என்று பெரியதுரை சின்ன துரை எல்லோருக்கும் எதிரிலே சத்தியம் செய்திட்டேன். உடனேயே மூணு ஜீப் வண்டிகளிலே துப்பாக்கி, துரைகள் சகிதம் போலீஸ் திப்பிலி புரத்துக்குக் கிளம்பிவிட்டது. நாங்க போய்ச் சேர்ந்த சமயம் அஸ்தமிக்கிற சமயம். திப்பிலியார் ஊரிலே தான் இருந்தார். பெரிய துரை மட்டும் தான் முதல் ஜீப்பில் அவர் வீட்டுமுன் போய் இறங்கினார். நானும் உடன் போனேன் அவருக்கு உதவ. மற்ற ஜீப்களும் மற்றப் போலீஸ் காரங்களும் கண் மறை வாக நின்று கொண்டிருந்தனர். திப்பிலியாருடைய மகனுடைய தலை, கோணிப் பையில் போட்டுக் கட்டி எங்கள் ஜீப்பில் கண் மறைவாக இருந்தது. பெரிய துரை பொதுவாகத் திப்பிலியாரை யோக ஷேமம் விசாரித்தார். பின்னர் திப்பிலியாருடைய மகனைப் பற்றி விசாரித்தவுடனேயே, தியாகராஜ திப்பிலியார் குலுங்கக் குலுங்க அழ ஆரம்பித்தார். ‘அநியாயமாக வைசூரி போட்டு அவன் இன்று காலையிலே தான் இறந்தானுங்க – பதினைந்து வயசுப் புள்ளைங்க நல்லாப் படிச்சிட்டிருந்தான். இப்பத்தான் நெருப்புப் போட்டுப்புட்டு வந்தோமுங்க’ என்று திப்பிலியார் அழ அழ, சம்பந்தம்தான் தகவலைச் சொன்னான். ‘பெரியம்மை போட்டியா இறந்தான்?’ என்று கேட்டுக் கொண்டே பெரிய துரை இதற்குள் அங்குவந்து சேர்ந்துவிட்ட பஞ்சநதத்தைக் கூப்பிட்டு அந்தக் கோணிப் பையை எடுத்து வரச் சொன்னார். திடுதிப் பென்று பையன் தலையைக் கண்டால் திப்பிலியார் என்ன செய்வாரோ, என்ன சொல்வாரோ என்று எனக்குப் பயமாக இருந்தது. ஆனால் அந்தத் தலையைக் கண்டதும் திப்பிலியார் அழுகையை நிறுத்தி விட்டு ‘இது என்னாங்க – யாரையோ கொன்னு தலையை வெட்டி … என்ன விளையாட்டுங்க இது?’ என்றார். ‘இது உங்க பிள்ளை நாகராஜாவின் தலைதானே!’ என்று கேட்டார் சின்னதுரை. ‘என் பிள்ளை தலையை வெட்ட யார் துணிவான்? என் நாகராஜா பெரியம்மை போட்டிப் பத்து நாளாகப் படுத்திருந்துவிட்டு இன்று காலையில் இறந்துவிட்டான். மாலையில் இரண்டு மணிக்குத் தான் சுடலையில் கொளுத்திவிட்டு

வரோம். இதெல்லாம் விளையாடற விஷயமல்லீங்க. போங்கய்யா' என்றார் திப்பிலியார். இரவு நாங்கள் அங்கேதான் காம்ப். எல்லோரும் ஒரு மூச்சாக அன்று எரிக்கப்பட்ட நாகராஜா தலையுடன் எரிக்கப்பட்டான் என்றுதான் சொன்னார்கள். நாங்கள் ரகசியத்தில் விசாரித்தோம் – பகிரங்கமாக விசாரித்தோம் – வேறு பேச்சே யாரிடமிருந்தும் வரவில்லை. மறுநாள் காலையில் பாலூற்றப் போனவர்களுடன் இரண்டு துரைகளும் இன்ஸ்பெக்டர்களும் போனார்கள். தலையும் எலும்புகளும் சுடப்பட்டு இருக்கத்தான் இருந்தன. பஞ்சநதம் தான் என்ன சொல்வது என்றறியாமல் திணறினார். பெரிய துரையும் சின்னதுரையும் அவரும் கூடிக் கூடிப் பேசினார்கள். பின்னர் தலையைப் பழையபடி கோணிப் பையில் போட்டுக் கட்டிக்கொண்டு ஜீப் ஊர்வலம் நகரத்தை நோக்கிக் கிளம்பியது. ரிகார்டில் அது தியாகராஜ திப்பிலியாருடைய மகன் நாக ராஜாவின் தலைதான் என்பதை மறுத்து மறுநாள் அது யாரோ தெரியாதவருடைய தலை என்று எழுதிவிட்டு, அதற்கான முண்டம் எங்காவது கிடைக்கிறதா என்று போலீஸ் இலாகா மூலம் தேடினோம், தேடினோம். எதுவும் தகவலே கிடைக்கவில்லை. என்ன நடந்தது என்று பின்னர்தான் நாங்கள் ஊகிக்க முடிந்தது.''

‘‘என்ன நடந்தது? பின்னர் ஊகித்ததை இப்பவே சொல்லி விடுங்கள் எனக்கு'' என்றேன்.

‘‘சம்பந்தத்துக்குப் பூரா விவரமும் தெரியும். அவன் சொல்லட்டும்'' என்றார் ஃபிரான்சிஸ்.

‘‘நானா?'' என்று தயங்கிய சம்பந்தம் ‘‘சொல்லுகிறேன்'' என்று சொன்னான்.

‘‘தியாகராஜத் திப்பிலியாருடைய வண்டி – ஜோரான டயர் போட்ட ரெட்டை மாட்டுவண்டி – பன்னிரண்டு மைல் தூரத் திலுள்ள ரெயில்வே ஸ்டேஷனுக்குக் கிளம்பிய போதே அவருடைய எதிரிகள் அவரைத் தீர்த்துக் கட்டிவிடுவது என்று தீர்மானித்துவிட்டார்கள். தியாகராஜ திப்பிலியார் பட்டணம் போயிருந்தார் காரிலே – அது யாருக்குந் தெரியாது – பரமரகசியம். வண்டி அவரை அழைத்து வரத்தான் போகிறது என்று ராஜ வேலுவும் வரதராஜனும் தீர்மானித்துக் கொண்டு முப்பது ஆட்களுடன் இலுப்பத் தோப்பிலே வண்டியை மறித்துத் திப்பிலியாரைத் தீர்த்துவிடுவது என்று காத்திருந்தனர். இருட்டுற சமயத்திலே வண்டி இலுப்பத் தோப்பை அடைந்தது. அதில் யார் இருந்தது என்று கவனியாமலே அதைக் கத்தி வேல் கோடாலி முதலிய ஆயுதங்களுடன் ராஜவேலுவினுடைய ஆட்கள் சூழ்ந்து கொண்டுவிட்டனர். வண்டியிலே தியாகராஜ திப்பிலியாருடைய

பதினைந்து வயதுமகன்தான் இருந்தான். வண்டிக்காரன் முதல் அடியிலேயே செத்தேன் பிழைத்தேன் என்று ஓடிவிட்டான். பையன் அடிபட்டு மூர்ச்சையாகி விழும்வரையில் யாரும் கவனிக்க வில்லை. அதற்குள் அடிமேல் அடிவிழுந்து நூற்றெட்டுக் காயங் களுடன் அவன் செத்துப் போய்விட்டான். அப்போது ராஜ வேலுவுக்கு ஒரு யுக்தி தோன்றிற்று. தலையை மட்டும் வெட்டி எடுத்துப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பிவிடுவது, முண்டத்தை வண்டியிலே போட்டு மாடுகளை ஓட்டிவிட்டால், அவை தாமாகவே திப்பிலியாபுரம் போய்ச் சேர்ந்துவிடும் என்று யோசித்து அதன் படியே செய்தார்கள். நல்ல வேலையாகத் தியாகராஜத் திப்பிலியார் அந்த மாட்டு வண்டியைத் தாண்டிக் காரில் வந்தார். விஷயம் அறிந்துகொண்டு பதறாமல் ஏற்பாடுகள் செய்தார். வைசூரி போட்டியதாகப் பையன்பற்றி ஒரு பத்து நாட்களுக்கு முன் டவுனில் எழுதிவைத்த ஒரு ரிப்போர்ட் நினைவுக்கு வரவே, அதையே உண்மையாக்கிவிட்டார் திப்பிலியார். பொய்யும் மெய்யும் நாமாக உண்டாக்குவது தானே!''

``பேஷ்! வழக்கத்துக்கு விரோதமாக இலக்கண சுத்தமாக வேறு பேசிவிட்டாயே சம்பந்தம்'' என்றேன் நான்.

``கோர்ட்டிலே நம்ம சம்பந்தம் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் எங்க வக்கீல் திணறியதை நீங்க பார்த்திருக்கணுமே'' என்றார் ஃபிரான்சிஸ். ``இப்பத்தான் பாருங் களேன். கச்சிதமாகக் கதையை முடித்துவிட்டான். அங்கு சுடு காட்டில் எரிந்த தலை யாருடையது! எப்படிக் கிடைத்தது திப்பிலி யாருக்கு என்று சொன்னானா பாருங்கள்.''

``அது எப்படிக் கிடைத்ததோ? எனக்கு எப்படிங்க தெரியும்? திப்பிலியாரு மகா சூரருங்க'' என்றான் சம்பந்தம்.

``இரவோடு இரவாக அந்த வரதராஜனின் பதினைந்து வயது மகனுடைய தலையை வெட்டிக் கொணர்ந்தது சம்பந்தமேதான்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

``அந்த வரதராஜனுக்கு ஒரு பிள்ளை இருக்கு என்கிற சமாசாரமே இப்ப நீங்க சொல்லத்தானுங்க எனக்கே தெரியும்'' என்றான் சம்பந்தம்.

``அந்த முண்டம் என்ன ஆச்சுது? அந்த முண்டத்தையும் இந்தத் தலையையும் வைத்து வரதராஜனைத் தேடிப் போனார்களோ போலீஸ்காரர்கள் – பெரிய துரையும் சின்ன துரையும்?'' என்று கேட்டேன் நான்.

``அப்படித்தான் நடந்திருக்கவேண்டும். ஆனால் பஞ்சநதம் விழிப்பான ஆசாமி. இப்படிப் போலீஸ் காரங்களும் துரைகளும் அவுங்களைத்

தேடிக்கிட்டுப் போறது கௌரதைக் குறைவு என்று, வரதராஜன், தியாகராஜ திப்பிலியார் இரண்டு பேரையுமே சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொணர்ந்து தனித்தனியாகவும் சேர்த்து வைத்தும் விசாரிக்க ஏற்பாடு செய்தார். ஆனால் அதிலும் பலன் ஒன்றும் காணவில்லை.''

''பலனில்லாமே என்னங்க? அவுங்க ரெண்டு பேருமே போலீஸ் காவலிலே இருக்கச்சே ராஜவேலுவை யாரோ துப்பாக்கியால் கொன்னுப்புட்டாங்க'' என்றான் சம்பந்தம்.

''யாரோ என்ன?'' என்றார் ஃபிரான்சிஸ்.

''ருஜூ இல்லை என்று கோர்ட்டே சொல்லி விட்டதே!'' என்றான் சம்பந்தம்.

''அது சரி. ஆனாலும் சம்பந்தம் துப்பாக்கியை எடுத்து ராஜவேலுவைச் சுடுவதை நேரில் பார்த்து விட்டு வீட்டுக்குள் போய் ஒளிந்து கொண்டவங்க நாலுபேர் உண்டு....'' என்றார் ஃபிரான்சிஸ்.

''நாலுபேர் ஏதுங்க? அந்த ரிடையர்டு போஸ்டு மாஸ்டர் ஐயா ஒத்தர்தான்.... அவரை நானே பாத்துக் கேட்டேன். 'நீ என்னைப் பாத்தயா'ன்னு. 'யாரு? உன்னையா? உன்னை நான் பார்த்ததேயில்லையே!' என்றார் அவரு.''

''நாலுபேரையுமே பார்த்திருப்பான் சம்பந்தம்'' என்றார் ஃபிரான்சிஸ்.

''அவுங்க எதையோ பார்த்ததாக சற்று முன் சொன்னீங்க. இப்போ அதை அப்படியே மாத்தீட்டிகளே! என்றான் சம்பந்தம்.''

''அது போகட்டும். ராஜவேலு இறந்ததைப் பற்றி வரத ராஜனையோ, திப்பிலியாரையோ சந்தேகிக்க முடியாமல் இறந்தது என்பது போலீஸ்காரர் மேல் பிசகு தான். எதற்காக அவர்கள் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு சாகிறார்கள் என்பது இன்னமும் போலீஸ்காரர்களுக்கு விளங்காத ரகசியமாக இருந்தது. விஷயத்தைப் புரிந்து கொள்ள வெகுவாக முயற்சி செய்து பார்த்தோம். பயத்தாலும் நயத்தாலும் வரதராஜனையும் திப்பிலியாரையும் விரட்டிப் பார்த்தோம். ஒன்றும் விஷயம் வெளிவரவில்லை. இருவருமே எதிலோ கூட்டாளிகளாக இருந்து பின்னர் அதிலே ஏதோ தகராறு செய்து கொண்டிருக் கிறார்கள் என்று மட்டுமே எங்களால் ஊஹிக்க முடிந்தது. மற்ற படி அவர்கள் மேல் எவ்வித சந்தேகமும் உள்ளதாக ருஜூபிக்கப் பட வில்லை என்று விட்டுவிட வேண்டியதாக இருந்தது. விட்டு விட்டோம்....''

“இடையில் தலையில்லாத முண்டம் எதுவும் கிடைக்க வில்லையோ!” என்று கெட்டேன்.

“போலீஸ்காரங்களுடைய நினைப்பிலே தவிர வேறு உண்மையில் அப்படி ஒன்றுமே இருந்திருக்க முடியாதுங்களே!” என்றான் சம்பந்தம்.

“சற்று முன் பேசியதை நீயே அழித்துவிடப் பார்க்கறயே!” என்றேன்.

“பணம் கொடுத்தால் இதைவிடப் பெரிய விஷயங்களையும் கூட அழித்துவிட முடியும்ங்க.”

“வரதராஜன் பிள்ளை – அவனுக்கும் வயது பதினாலு பதினைந்துதான் இருக்கும் – காணாமல் போய்விட்டான். குறிப் பிட்ட சம்பவத்துக்கு மறு நாளிலிருந்தே காணாது போய்விட்டான் என்பது எனக்கும் போலீஸ் இலாகாவில் மற்றவருக்கும் ஒரு அநாமதேயக் கடிதம் மூலம் தான் தெரிய வந்தது” என்றார் ஃபிரான்சிஸ்.

“அந்த அநாமதேயக் கடிதத்தை எழுதி வாங்கித் தபாலில் நான் சேர்க்கப்பட்டபாடு....” என்று சொல்ல ஆரம்பித்த சம்பந்தம் சட்டென்று பல்லைக் கடித்துக் கொண்டு, அசட்டுத்தனமாக ஏதோ சொல்லிவிட்டோமே என்று மௌனமானான்.

# அத்தியாயம் 13

பழிக்குப்பழி வாங்கிவிட்டார் திப்பிலியார். தன் மகனைக் கொன்று தலையைக் கொய்து போலீஸுக்கு அனுப்பியவனின் பிள்ளையைக் கொன்று பழியைத் தீர்த்துக் கொண்டார் என்பது அந்த அநாமதேயக் கடிதம் மூலமே போலீஸுக்குத் தெரிய வந்தது. தியாகராஜத் திப்பிலியாருக்குச் செயல் மட்டும் திருப்தி தரவில்லை. அச்செயலால் தனக்குக் கிடைக்க வேண்டிய புகழும் கிடைத்துவிட வேண்டும் என்கிற ஆசையிருந்தது. அவரேதான் அந்த அநாமதேயக் கடிதத்தை எழுதச் சொல்லி அனுப்பி வைத்திருக் கிறார் என்பதைக் கண்டு கொள்ள எங்களுக்கு அதிக நேரமாகவில்லை. யார் எழுதியது எப்படி வந்தது என்பதையும் கண்டு கொண்டோம். அந்த அருணாசல அய்யனை விசாரிக்கப் போலீஸ் கிளம்பிய போது அவன் ஊரை விட்டே போய்விட்டான் என்றும், எங்கிருக்கிறான் என்பது தெரியவில்லை என்றும் தகவல் கிடைத்தது. எட்டு நாட்களுக்குப் பிறகு அவன் உடல் காளிகோயில் குட்டையிலே அழுகி மிதந்து கொண்டிருப்பது தெரிந்தது. ராஜவேலுவை அதுபற்றிச் சந்தேகிக்க இடம் இருந்தது என்பதும், மேலும் தியாகராஜ திப்பிலியார்தான் இந்தக் கொலைக்கும் காரணகர்த்தா என்று போலீஸுக்கு அறிவிக்க எவ்வளவோ முயன்றும் எங்களால் அவரை அதில் சம்பந்தப்படுத்த முடிய வில்லை'' என்றார் ஃபிரான்சிஸ்.

''சம்பந்தமிருந்தால் சம்பந்தப்படுத்தியிருக்க முடியும். சம்பந்தம் இல்லையே'' என்றான் சம்பந்தம்.

''யார் செய்த கொலை அது? இப்பத்தான் சொல்லேன்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''ராஜவேலுவேதான் திப்பிலியார் மேல் சந்தேகம் வரட்டும் என்பதற்காக....''

''தன் சிறு மகனையே கொன்றிருப்பான் என்கிறாயா!''

''அந்தப் பையன் தினமும் காளி கோயிலில் இரண்டு சகாக்களுடன் போய் நீந்தி விளையாடிக் குளித்துவிட்டு வருவான்....'' என்று தொடங்கிய சம்பந்தத்தை மேலே சொல்ல வொட்டாமல் மறித்தார் ஃபிரான்ஸிஸ்.

''அந்தப் பையனுடைய பழக்க வழக்கங்களை நீயே கவனித்து....''

''பாத்தீங்களா? பாத்தீங்களா? என்னையே மடக்கரீங்களே! எனக்கும் அந்த ராஜவேலுவுக்கும்....''

“எத்தனை நாளா விரோதம், ஏன் விரோதம் என்றெல்லாம் எனக்கும் தெரியாது” என்றார் ஃபிரான்ஸிஸ்.

“முழுக் கதையும் அந்தப் பாடாவதி அய்யருக்குத் தான் தெரியும். அவர் வாயை இருபதினாயிரம் ரூபாய் மூடிடிச்சு” என்றான் சம்பந்தம்.

“இருபதினாயிரம் தானா? அறுபது ஆயிரம் என்று நான் கேள்விப்பட்டேன்.”

“திப்பிலியார் தரப்பு வரவு இருபதினாயிரம். எதிரிங்க எத்தனை யார் யாருக்குத் தந்தாங்களோ எனக்குத் தெரியாது. அவங்க துரைமகனுக்குங் கூடத் தந்தாங்கன்னு கேள்வி. திப்பிலியார் துரைக்கோ துரைமகனுக்கோ எதுவும் தரமாட்டேன்னுட்டாங்க. திப்பிலியார் நல்ல தேசபக்தருங்க” என்றான் சம்பந்தம்.

“பேஷ்! தேசபக்திக்கு நல்ல உதாரணம் தான்” என்றேன், “ஆனால் கதை தேங்கிவிட்டதே. மேலே சொல்லுங்க” என்று அவர்களைத் தூண்டிவிட்டேன்.

“மேலே சொல்லுவதைவிட பின் நோக்கிச் சென்று எந்தக் காரணத்தினால் எது நடந்தது என்று கண்டுபிடிக்கத்தான் போலீஸ் காரர்கள் வெகுவாகப் பாடுபட்டனர். நடக்கவில்லை” என்றார் ஃபிரான்சிஸ்.

“எப்படி அய்யா நடக்கும்? ஏதோ ஓரளவு சம்பந்தப் பட்டிருந்த எனக்கு எது காரணமாக எது நடந்தது என்று தெரியாதே – எல்லாம் நடந்த பிறகு வந்தவங்களுக்கு என்ன தெரியும்?” என்றான் சம்பந்தம்.

இந்தப் புதிரை விடுவிக்க எனக்கு ஓரே ஒருவழி தான் தோன்றியது. “முதலில் சம்பந்தம் தனக்குத் தெரிந்ததையெல்லாம் சொல்லட்டும். பிறகு நீங்கள் தெரிந்து கொண்டது, ருஜுப் பித்தது, ருஜுபிக்க முயன்றது, ருஜுப்பிக்க முடியாமலே அனு மானித்தது எல்லாவற்றையும் சொல்லுங்கள் இன்ஸ்பெக்டர் ஸார்” என்றேன் நான்.

“தெரிந்தது எல்லாவற்றையும் சொல்லு என்று நம்ப நண்பர் சம்பந்தத்துக்கிட்டே சொல்றேனே – சொல்லி விடுவானா முழுவதும்?” என்றார் ஃபிரான்சிஸ்.

“அதுவும் ஆயிரக் கணக்கில் பணம் வாங்கியும் திருப்தி காணாத போலீஸ் இன்ஸ்பெக்டரைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு....?” என்று நான் சொல்ல நினைத்ததை சம்பந்தமே சொல்லிவிட்டான்.

# அத்தியாயம் 14

இன்ஸ்பெக்டர் ஃபிரான்ஸிஸ்ஸின் முகம் இருண்டது என்று கவனித்தேன். அவருக்குப் பிரமாதமாகக் கோபம் வந்துவிட்டால் என்ன செய்வது என்று எனக்குப் பயம்தான். அதை எப்படியாவது போகட்டும் என்று எனது இலக்கியாசிரியத் தனத்தை மறந்து விட்டு நான் எதிலும் படாதவனாக எழுந்து போய் விடலாம்தான். அந்தத் தைரியத்தில்தான் நான் அவர்கள் இருவரையுமே தூண்டிவிட்டுக் கொண்டிருந் தேன் என்று சொல்ல வேண்டும். லாபமோ நஷ்டமோ அவர்களுக்குத்தான். இருவரும் பழைய கேஸ்களில் சம்பந்தப்பட்டவர்கள் – நான் மூன்றாவது ஆசாமி. தாமரையிலையில் தண்ணீர் போல இருந்துவிடலாம்.

ஃபிரான்ஸிஸ் அந்தச் சமயத்துக்குத் தன் கோபத்தை அடக்கிக் கொண்டார். தடித்த உதடுகளில் ஒரு புன்முறுவலைப் பரவ விட்டபடியே சொன்னார்: “நமது நண்பர் சம்பந்தம் சொல்வது சரிதான். கொலை காரனானாலும், கொள்ளைக்காரனானாலும் அவன் ஒரு சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவன். தனது சகாக்களில் யாரையும் காட்டித்தர மாட்டான். சம்பந்தம் தானாக இதுவரை யார் எந்தக் காரியத்துக்குப் பொறுப்பு என்று வாய்திறந்து சொன்னதில்லையே! தனக்குத் தானே தீர்மானித்துக் கொள்ள முயன்றதுங் கூட இல்லையே!”

“யார் எதற்குப் பொறுப்பு என்று எனக்கு எப்படிங்க தெரியும்? நான் உங்களையெல்லாம் போலப் படிச்சிக் கிட்டவனா? எனக்குத் தெரிந்ததெல்லாம் ஒண்ணுதான்....”

“என்ன?”

“என்னிடம் ஒரு காரியத்தை ஒப்படைச் சாங்கன்னா அதை நான் செய்து முடிப்பேன் என்று எதிர்பார்த்திருப்பாங்க. அதை நான் செய்து முடிக்காவிட்டால் அதனால் விளையும் விளைவு களுக்கு நான் பொறுப்பு. செய்து முடித்தாலோ.....” என்று தயங்கினான் சம்பந்தம்.

“முடித்தால்....” என்று தூண்டினேன் நான்.

“திப்பிலியார் போன்றவங்களுக்கு மேலே எதுவும் செய்ய வசதியாக இருக்கும்” என்று கேலி செய்கிற குரலில் சொன்னார் ஃபிரான்ஸிஸ்.

‘‘திப்பிலியார் மட்டுமல்ல. நம்மை நம்பியிருப்பவர்கள் யாருடைய நம்பிக்கையும் வீணாகிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்கிற அவசியம்தான் முக்கியமாகத் தோன்றும். அதிலே சௌகரியமும் உண்டு; லாபமும் உண்டு. முக்கியமாகக் கூட உழைப்பவங்களுடைய கேலிக்கோ, ஏளனத்துக்கோ உள்ளாகா திருக்க வேணுமே என்கிற பரபரப்பும் உண்டு’’ என்றான் சம்பந்தம்.

‘‘நன்றாகவே சொல்லிவிட்டாய்’’ என்று பாராட்டினேன் நான்.

ஃபிரான்ஸிஸின் கிண்டலுக்கு மாறாக என் பாராட்டு அமைந்திருந்தது கண்டு சம்பந்தம் என்னை நன்றியுடனே பார்த்தார். ‘‘பணம் வாங்குகிற போலீஸ்காரனைவிடக் கொலை காரனும் கொள்ளைக்காரனும் மேலானவன்தான்’’ என்று நைஸாகச் சொல்லிவைத்தேன் நான். அப்பட்டமாக அப்படிச் சொல்லி யிருக்கக் கூடாதுதான் நான். ஃபிரான்ஸிஸ்சுக்குக் கோபம் வந்தால் அது நியாயமானதுதான். ஆனால் இன்ஸ்பெக்டர் ஃபிரான்ஸிஸ் மகா யோக்கியர் போல வாக்கியத்துக்கொரு முறை சம்பந்தத்தைக் கிண்டல் செய்கிற மாதிரி பேசியது எனக்கும் பிடிக்கவில்லை.

‘‘அது உண்மைதான்’’ என்றார் ஃபிரான்ஸிஸ். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. பிரிட்டிஷ் சர்க்காரின் தூண்களில் ஒன்றாக எங்கள் சிறுநகரில் பணியாற்றிய போலீஸ்காரனுக்கும் தன்மான உணர்ச்சி இருக்கும் என்பது நான் எதிர்பாராத ஒரு விஷயம்தான். ‘பிரணதார்த்தி இருந்தாரே – அவர் ஒரு முப்பத்தி நாலு வருஷ சர்விஸைப் போலீஸிலே செய்துவிட்டு நல்ல பெயருடன்தான் ரிடையர் ஆனார். அவர் விலகும்போது பார்ட்டி எல்லாம் வைத்துத் தடபுடல் பண்ணி, அவர் எப்படிப்பட்ட ஆபீஸர் என்றுதானே அரைமணிநேரம் பேசினேன் நான். ஆனால் அவரையும் விட மோசமான கொலைகாரனை என்னுடைய இருபத்தியெட்டு வருஷ சர்விஸிலே நான் இன்னமும் பார்த்த தில்லை. எதற்கும் அஞ்சாத புரட்டர் அவர்; ஏமாற்று வித்தையிலே கைகாரர். இரண்டு தரப்பிலும் பணம் வாங்கிவிடுவார்; இரு வருக்கும் சலுகை காட்டாமல் தன் ட்யூடியைச் செய்துவிட்டு இலாகாவில் நல்ல பெயரும் வாங்கி விடுவார்.’’

கடைசியில் ஃபிரான்ஸிஸ் சொன்னதைச் செய்பவராக இருந்தால் அந்தப் பாடாவதி அய்யர் மேல் தவறு என்ன என்று எனக்குப் புரியவில்லை. ஏதோ போலீஸ் ஹாஸ்யம் இது என்று எண்ணி ‘‘ஹா! ஹா!’’ என்று இரண்டு தரம் சிரித்துவிட்டு, கதையை விசாரிப்பதில் கவனம் செலுத்தினேன்.

“திருவாலூர்க் கமலம் என்று சொன்னாயே – அவளுக்கும் இந்தத் திப்பிலியார் விஷயத்துக்கும் என்ன சம்பந்தம்? நீ முதல் தடவையாகத் திப்பிலியாரை எப்படிச் சந்தித்தாய்? அவரிடம் உனக்கு அவர் சொல்லை மீறாத பக்தி எப்படி ஏற்பட்டது என்றெல்லாம் விவரமாகவே சொல்லேன். எனக்கும் இன்னும் இரண்டு மணி நேரத்துக்கு ஒன்றும் வேலையில்லை. அவசரமாக ஒரு கதை எழுதியாக வேண்டும் – அதற்கு உன் விஷயம் பயன்படுமா பார்க்கிறேன்” என்றேன்.

# அத்தியாயம் 15

"ஹி! ஹி! நான் எப்பவுமே யாருக்கும் உதவி செய்யத் தயாராகத்தான் இருந்து வந்திருக்கேன். என் கதை உங்களுக்கு உபயோகப்பட்டால் எனக்கு மிகவும் திருப்திதாங்க. உதவா விட்டாலும் இரண்டு மணி நேரம் போது போக்கவாவது நான் உபயோகப் பட்டால் அதுவும் சிறு உபயோகம் தானே. எல்லாம் விவரமாகச் சொல்லிடறேன்" என்று தொடங்கிய சம்பந்தம் இன்ஸ்பெக்டர் ஃபிரான்ஸிஸைப் பார்த்த படியே சற்றுத் தயங்கினான்.

"இப்பொழுது நீ சொல்வது எதையும் அவர் எந்த விதத்திலும் உபயோகப்படுத்த மாட்டார். அதற்கு நான் உத்தரவாதம்" என்றேன்.

"நிச்சயமாக உபயோகப்படுத்த மாட்டேன். எனக்குப் பல விஷயங்கள் தெளிவானால் தேவலைதான்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"என்னை நீங்க முழுசா நம்பலாம். இந்தப் போலீஸ் காரங்களைத்தான் நம்பப்படாது. அது என் அனுபவம்" என்றான் சம்பந்தம்.

"அதை அவரேதான் ஏத்துக்கிட்டாரே. நீ சொல்லு. ஒருதரம் உன்னை விசாரித்து ருஜு இல்லை என்று விட்டுவிட்டார்கள். மறுபடியும் பிடித்து...."

"அதிலே சம்பந்தப்பட்டவங்க யார் இருக்கிறானுவ, மறுபடியும் எதையாவது கிளற? எல்லாரும் தீர்ந்து விட்டானுவ" என்றான் சம்பந்தம். பிறகு தொடர்ந்தான்.

"விஜயபுரம் நாகப்பட்டினம் ரோட்டிலே நானும் ராஜவேலுவும் பக்கத்துப் பக்கத்து வீட்டிலே இருந்தோமுங்க. நான் சொல்றது நாற்பது வருசத்துச் செய்தீங்க. அந்தத் திருவாலூர்க் கமலம் பிறந்து வளர்ந்து பெரிசானது எல்லாமே எனக்குத் தெரியுமுங்க...."

"அது யாரது திருவாலூர்க் கமலம்?" என்று தன் ஆவலை அடக்கமாட்டாமலே கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"தானே தெரியுமுங்க" என்றான் சம்பந்தம் அலக்ஷியமாக. "வார் டயத்திலே திருவாலூர் பஜாருக்குக்கூட புதுச்சேரிச் சரக்குகள் சப்ளை செய்கிற சாக்கிலே தியாகராஜத் திப்பிலியார் வருவாருங்க. அப்படி வந்து போற ஒரு சமயத்திலே அவருக்கு என்னாலே ஒரு உதவிசெய்ய முடிஞ்சிச்சு."

"என்ன உதவியது?" என்றேன்.

“சொல்லணுமின்னா சொல்றேனுங்க. கையிலே சரக்கோட – மது மட்டுமில்லே, தங்கம், கடிகாரங்கள் எல்லாமும் இருந்தன – தியாகராஜ திப்பிலியார் கஸ்டம்ஸ் அதிகாரிகள் கிட்ட மாட்டிக் கினு அவஸ்தைப் பட இருந்தாரு. அந்தச் சமயத்திலே நாஜூக்கா அவருடைய கைப்பெட்டிகள் இரண்டையும் நான் அப்புறப் படுத்திப்பிட்டேன். தப்பிச்சுக்கிட்டாரு. இல்லாட்டி அந்தச் சமயம் கைவிலங்கு கால்விலங்கோடே அவரு மாமனார் வீடு போயிருப்பாரு. அந்த நன்றி விசுவாசம் தான் அவருக்கு என் கிட்டே.....”

“அவருக்கு நீ உதவினது சரிதான். அதுக்காக அவர் உன் கிட்டே நம்பிக்கையோ விசுவாசமோ வைத்திருந்ததுதான் பெரிய விசேஷமாக எனக்குப்படுகிறது. அவர் பிற்காலத்தில் உன்னைத் தனது வலது கையாக....”

“வலது கையோ இடது கையோ என்னால் அவருக்கு இன்னொரு விசுவாசமும் ஏற்பட்டது. தன் பெட்டிகளை எடுத்துப் போக என் வீட்டுக்கு வண்டி கொண்டு வந்தவரு கண்ணிலே பக்கத்து வீட்டு ராஜவேலுவின், நான் சொன்ன திருவாலூர்க் கமலம் பட்டுவிட்டாள்.”

“பெண்ணால் ஏற்படுகிற பாசம் பெரிய பாசம் தான்” என்றேன் நான்.

“திருவாலூர்க் கமலம் எப்படியிருப்பான்னு அய்யா கிட்ட இப்பத்தான் சொன்னேன். லட்டுன்னா லட்டு மாதிரிதான் இருப்பாள். அதுவும் அப்போ தியாகராஜத் திப்பிலியாரு அவளை முதல் தடவையாகப் பார்க்கறப்போ அவளுக்குப் பதினாறு இருக்கும். மேஜராகி இரண்டு வருசம் ஆயிருக்குமுங்க. அடாடா! போலீஸ் இன்ஸ்பெக்டர் ஐயா அவளைப் பாத்திருக்காரு....”

“யாரை? திருவாரூர்க் கமலத்தையா? எனக்குத் தெரிய வில்லையே!” என்றார் ஃபிரான்ஸிஸ்.

“ஆமாம், அந்தப் பய நாகராஜனுடைய அம்மா அவங்க தான்.”

“அடெடே! அந்தப் பொம்பளையா? முப்பது வயசிலேயே தலை நரைத்து, கண் பஞ்சடைந்து, கிழமாகி விட்ட அந்தப் பெண் பிள்ளையா? நீ சொன்ன மட்டும்....”

“அதெல்லாம் ஒரு நாலைந்து வருஷங்களிலே விளைந்த வினைங்க. புருசனுக்கும் அவளுக்கும் விரோதம் மூண்டபின், பிள்ளையே பணயமாகிப் பிணமாகிற நிலையிலே, அந்த அம்மாளுக்கு நாலு வருஷத்திலே நாற்பது வருஷம் வயதான மாதிரி ஆயிப்பிடுச்சு....”

“எனக்கே அந்த நாலு வருஷத்திலே நாற்பது வயது ஆன மாதிரியாயிருந்தது” என்று ஏற்றுக் கொண்டார் ஃபிரான்ஸிஸ்.

# அத்தியாயம் 16

சம்பந்தம் தன் கதையைத் தொடர்ந்தான்: "என் வீட்டுக்குத் தன் சாமன்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு போக வந்த திப்பிலியார் எனக்கு இரண்டு நூறு ரூபாய் நோட்டை எடுத்துத் தந்தாரு. அதோடு ஒரு புதுச்சேரிக் கைக் கடிகாரத்தையும் பத்து முழம் பட்டுப் பீஸ் ஒன்றையும் இனாமாகத் தந்தாரு. அவர் வெளியே கிளம்பிய நேரத்துக்கு அந்தப் பாவி மக அவள் வீட்டு வாசலிலே நின்னுக்கிட்டிருந்தாள்."

"அதிலேருந்துதான் உன் கதை தொடங்குதுன்னு தோணுது. சொல்லு." என்றேன்.

"காதல், கீதல் என்றெல்லாம் சினிமாவிலே பாத்த தெல்லாம், இப்பப் பாக்கிறதெல்லாம் மெய்யாகத் தான் இருக்க வேணுமுங்கிற எண்ணம் எனக்கு அப்பத்தான் ஏற்பட்டது. திப்பிலியார் போலீஸ் காரனைப் பார்த்துவிட்ட பிரமிப்புடன் நின்றுவிட்டார்– நின்னுக்கிட்டே இருந்தார். எனக்குக் கவலையாப் போயிடுச்சு – எங்கேயாவது யாராவது போலீஸ் காரன் பார்த்துவிடப் போறானென்று. அதுவும் கள்ளக் கடத்தல் சாமான் என் வீட்டிலிருந்து வெளியாகிறதே. அவரை உசுப்பி எழுப்பிக் கிளப்பி விட அரைமணி நேரம் பிடிச்சிது எனக்கு. அப்படியும் அவர் அன்று சாயங்காலமே வந்துட்டார்."

சம்பந்தத்துக்குக் கதை சரிவரச் சொல்ல வராது என்று நான் நினைத்தது பிசகு என்று எண்ணினேன். சுவாரசியம் தட்டக்கூடிய இடங்களிளெல்லாம் நிறுத்தி நிறுத்தி "உம்; மேலே என்ன நடந்தது?" என்று நாங்கள் கேக்கிற வண்ணமாகத்தான் அவன் கதையை நடத்தினான். "சாயங்காலம் வந்தவர் பக்கத்து வீட்டு லட்டைப்பற்றி விசாரிக்க ஆரம்பித்து விட்டாராக்கும்?" என்றேன்.

"விசாரித்ததுடன் நிறுத்தவில்லை. அவளை எப்படி யாவது கடத்திக் கொண்டுபோய்க் கண்ணாலங் கட்டி விடவேண்டும் என்று அவசரப்பட்டார். திப்பிலியாரை நீங்க பார்த்திருக் கீங்களோ என்னவோ, இன்ஸ்பெக்டர் ஐயா பார்த்திருக்கிறார்."

"பார்த்திருக்கிறேன். நல்ல சிவப்பாக கட்டுமஸ்தான உடலுடன் பார்க்க ஆணழகனாகத்தான் இருப்பார். நடுத்தர வயதில் எனக்குத் தெரிந்த போதே இப்படின்னா, நீ சொல்ற டயத்திலே வாலிப முடுக்கிலே ஜோராகத்தான் இருந்திருப்பார்" என்றார் ஃபிரான்ஸிஸ்.

“அவருக்கு ஒரு கல்யாணம் ஆகியிருந்தது. பெண்டாட்டியைப் பிடிக்கவில்லை என்று அவள் ஊரிலேயே ஒதுக்கி வைத்திருந் தார். ஆகவே பிரும்மச்சாரி என்றுதான் மொத்தத்தில் சொல்ல வேண்டும். இந்த மாதிரிப் பொண்ணு கண்களில் படவேண்டும்னு தான் காத்திருந்தேன் என்றார். நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். போலீஸ், கடத்தல், கள்ளக் கடத்தல் மாதிரியில்லை. அதுவும் அந்தப் பொண்ணுடைய தகப்பன் திருவாலூரிலேயே பெரிய ரௌடி என்று பெயர் பெற்றவன் என்றெல்லாம் சொல்லிப் பார்த்தேன். கடைசியாக நான் சொன்ன விஷயம்தான் அவருக்கு மிகவும் சுவாரசியமான விஷயமாகப்பட்டது. அவன் எனக்கு உதவட்டும் – நான் அவனுக்கு உதவுகிறேன் என்று சொல்லி ராஜவேலுவை அழைத்து வரச் சொல்லி என்னையே அனுப்பி விட்டு என் வீட்டிலேயே ஒரு கிழிந்த பாயைப் போட்டுக்கிட்டு உட்கார்ந்துவிட்டார். வேறு வழியில்லாமல் நானே போய் ராஜவேலுவை அழைத்து வந்தேன். அதுக்கப்புறம் அவங்களுக் கிடையே நடந்த பேச்செல்லாம் எனக்குப் பூராவும் தெரியாது. ஒரு இருபது நாளுக்குள்ளே ராஜவேலுவும் அவன் மகளும் – அந்த லட்டு திருவாலூர்க் கமலமும் – திப்பிலியாபுரத்திலே குடியேறி விட்டாங்க. ஏதோ ஒரு கோயில்லே சாமிக்கு முன்னாடிக் கண்ணாலங்கூட, மேளங் கொட்டி, அய்யர் மந்திரம் சொல்ல, கமலத்துக்குத் திப்பிலியார் தாலி கூடக் கட்டினார் என்றுதான் கேள்வி. நான் அதெல்லாம் நடந்தபோது விஜயபுரத்திலேதான் இருந்தேன். திப்பிலியாரை நான் மறுபடியும் நாலைந்து வருஷங் களுக்குப் பின்புதான் சந்தித்தேன். முன்னைக்கிப் போது அவர் பெரும் பணக்காரராகி யிருந்தார். அந்தச் சமயத்திலேதான் அவர் பட்டணத்துக்குப் போய் சினிமா சுந்தரி, மந்திரி குமாரியின் காரை விலைக்கு வாங்கி வந்தது. ராஜவேலுவின் உதவியுடன் அவர் பணக்காரரான கதையைப் பலர் பலவிதமாகச் சொல்லி நான் கேள்விப்பட்டிருக்கேனுங்க. கள்ள நோட் அடிச்சார் என்று பலர் சொன்னாங்க. புதுச்சேரி சரக்கு பிரமாத லாபம் தந்தது என்றாங்க. புதையல் கிடைத்தது என்றாங்க. பின்னால்தான் எனக்கு உண்மை தெரிய வந்தது.”

“என்ன உண்மை அது?”“காபியைச் சாப்பிடுங்க – சொல்றேன்” என்றான் சம்பந்தம்.

# அத்தியாயம் 17

மூன்றாவது காப்பியும் வந்துவிட்டது. அதை நாங்கள் மூவரும் சிறிது சிறிதாக ருசி பார்த்துக் கொண்டேயிருக்கையில் சம்பந்தம் உண்மையைச் சொன்னான்.

“ராஜவேலுவும் தியாகராஜ திப்பிலியாரும் மிகவும் சௌஜன்யமாக நண்பர்களாக ஒரு பத்து வருஷங்கள் இருந்தார்கள். அந்தப் பத்து வருஷங்களில்தான் திப்பிலியாருக்கு ஏராளமான பணம் சேர்ந்தது. புதையல், கள்ள நோட்டு, கள்ள வியாபாரம் என்று என்ன காரணம் சொல்லியும் மாளாத பணம் அவருக்குச் சேர்ந்தது. அந்தப் பணத்தில் ராஜ வேலுவுக்கும் கொஞ்சம் பங்குண்டு. திப்பிலியார் எப்பவுமே காரணமானவர் தான் – எல்லாம் சரியாக இருந்தவரையில்–அதற்குப் பிறகும் கூடச் சிலகாலம் – அவர் தன்னை அண்டி வந்தவர்கள் எல்லோருக்குமே நிறைய நிறையக் கடன் கொடுத்தார். திருவாலூரில் இருந்த என்னை ராஜவேலுவும் திப்பிலியாரும் கூட்டுச் சேர்ந்த ஐந்தாவது வருஷம், திப்பிலி யாருக்கு திருவாலூர்க் கமலத்துக்கும் திருமணமாகி ஆறு வருஷம் கழித்து, திப்பிலி யாருடைய ஒரே

மகனான நாகராஜா திருஅவதாரம் செய்து நாலு வருஷங்கள் ஆனபிறகு என்னை அழைத்து வந்தார்கள். அதற்கு முந்தி நடந்த விஷயங்கள் பற்றி நேரடியாக எனக்கு ஒன்றும் தெரியாது. திப்பிலியார் கொள்ளைப் பணக்காரரானது நான் அவருடன் வந்து சேருமுன்தான். கசாமுசா என்று திப்பிலியாரின் ஆட்களாகிய எங்களிடையே திப்பிலியாருக்குப் பணம் கிடைத்தது பற்றிப் பலவிதமாகப் பேச்சு உண்டு. பின்னர். இன்னும் ஐந்தாறு, ஏன் ஏழு வருஷங்களுக்குப் பிறகு ராஜவேலுவும் திப்பிலியாரும் சண்டையடித்துக் கொண்டு வெட்டுப்பழி குத்துப்பழியாக நின்ற போதுதான் விஷயம் எனக்குத் தெரிய வந்தது. திப்பிலியாரே சொன்னார். அவர் சுபாவம் அது – மனம் விட்டு என்னிடம் சொன்னார். ராஜவேலுவின் ஸ்தானத்துக்கு, தன்னுடைய முதல் கூட்டாளியாக என்னை ஏற்றிவைத்துவிட்டு, எனக்கு எல்லாம் தெரிந்திருக்க வேண்டும், அப்போதுதான் நான் அவரிடம் அந்தரங்கமாக இருப்பேன் என்று எண்ணி ஒளிவு மறை வில்லாமல் சொன்னார். நாடகம் போடுகிற மாதிரி அவர் என்னை ஒருநாள் இரவு, ரைஸ்மில் எல்லாம் அடைத்த பிறகு, தனியாக ரைஸ்மில் கட்டிடத்தைத் திறந்து, அழைத்துப்போய் இடம், பொருள் ஏவல் சொல்லுவார்களே அதையெல்லாம் விவரித்துச் சொன்னார்.”

கதை சொல்வதில் சூடு பிறக்கப் பிறக்க சம்பந்தம் இலக்கண சுத்தமாகவே பேசத் தொடங்கி விட்டான் என்று ஆச்சரியத்துடன் கவனித்தேன். அவன் வேண்டுமென்றே படிக்காதவன் மாதிரிக் கொச்சை மொழி பேசி மனத்தில் உள்ளதை மறைக்க முயன்றிருக் கிறான் என்றும், கதை சூடு ஏறவே சுபாவமாக உள்ள ஒரு படிப்புத் தரம் வெளி வருகிறது என்றும் எண்ணினேன். அல்லது இலக்கணம் படிக்காத சில மேதைகள் சொல்வது போலக் கதையின் தரம் உயர உயர இலக்கணம் எல்லாம் சாதாரணமாகப் படிந்து விடும் என்பதுதான் உண்மையோ? இதைப்பற்றி அதிகம் சிந்திக்க நான் விரும்பவில்லை. ஏனென்றால் கதையில் மிகவும் சுவாரசியமான கட்டத்தை எட்டிக் கொண்டிருந்தான் சம்பந்தம் என்பது அவனுடைய பாணியிலேயே தெரிந்தது. மிகவும் கவனமாகக் கேட்டேன் – படிப்பு, இலக்கணச் சுத்தம், இலக்கணச் சுத்தமின்மை என்பதெல்லாம் கதா சுவாரசியத்துக்கு முன் எம்மாத்திரம்?

# அத்தியாயம் 18

“ராஜவேலுவுடன் அவன் கட்சியிலே சேர்ந்து கொண்டு திப்பிலியாரைக் கைவிட்டு விட்டுப் போயிருக்க வேண்டியவன்தான் நான். என்னை அங்கு திப்பிலியாரிடம் கொணர்ந்து சேர்த்ததே அவன்தான். ராஜவேலு ஏதோ காரணமாக – சண்டை நடந்த போது என்ன காரணம் அது என்று எனக்கே தெரியாது – திப்பிலியாருடன் சண்டை போட்டுக் கொண்டு பிரிந்த போது என்னையும் அவன் கூப்பிட்டிருந் தானானால் நான் உடனேயே மறு பேச்சுப் பேசாமல் சென்றிருப்பேன். திப்பிலியாரிடம் எனக்குப் பாசமோ ஆசையோ விழவில்லை. அவர் வீட்டு வேலையாளாக மட்டுமே அது வரையில் நான் இருந்து வந்தேன். அவசியம் நேர்ந்தால் சில சமயம் புதுச்சேரியிலிருந்து வந்திருந்த சாமான்களை எடுத்துப் பாதாள அறையில் சேமித்து வைப்பதற்கும், பாதாள அறையிலிருந்து எடுத்து வெளியே அனுப்புவதற்கும் என்னைப் பல ஆட்களில் ஒருவனாகச் சேர்த்துக் கொள்வார்கள். நான் எப்பவுமே காரணம் இருந்தாலொழிய, அதிகமாகப் பேசமாட்டேன். ஆகவே வீட்டு வேலைகளைக் கவனிப்பதற்கு நான் தான் சரியான ஆசாமி என்று நம்பி வீட்டுப் பொறுப்பை என்னிடம் தந்திருந்தார் திப்பிலியார்.”

“ராஜவேலு பிரிந்து போய் சுமார் பத்து நாட்கள் கழித்து என்னையும் தன்னுடன் வரச்சொல்லி அழைத்து ஒரு நண்பனை அனுப்பியிருந்தான். ஆனால் அதற்குள் திருவாலூர்க் கமலம் என்னைப் பலமுறைகள் “போய்விடாதே! போய்விடாதே!” என்று வேண்டிக் கொண்டாள். “அப்பன்தான் கோவித்துக் கொண்டு போயிடுச்சு. அதன் முரட்டுச் சுபாவம் எனக்குத் தெரியும். நான் போக முடியாது. கண்ணாலங்கட்டிய புருஷன் கிட்ட இருந்துதானாகணும். நான் போக முடியாது. சின்ன வயசிலே எனக்குப் பக்கத்து வீட்டுக்காரனாக இருந்து பழக்கமாகிய நீயாவது இங்கிரு. எனக்கு மனசுக்குத் தெம்பாக இருக்கும்” என்றாள் கமலம். நான் வர இயலாது என்று ராஜவேலுக்கும் பதில் அனுப்பிவிட்டேன். அப்போது எனக்குத் தெரியாது – திப்பிலியாரும் ராஜவேலுவும் போட்டுக் கொண்ட சண்டை கொலை வரையில் போய் முடியும் என்று. எனக்கும் தெரியாது – அப்பாவி, அந்தக் கமலத்துக்கும் தெரியாது.”

“அந்தச் சமயத்திலேதான் தியாகராஜத் திப்பிலியார் பட்டணத்துக்குப் போய் அந்த மந்திரிகுமாரியின் பாக்கார்டு காரை வாங்கி வந்தார். நான் தான் அந்தப் பேரம் முடியற வரைக்கும் அவருடன் இருந்தேன். நான் அவருடன் போனதுக்குக் காரணம் அவருக்கு வேண்டியவன் என்பதல்ல – அந்தரங்க

மானவன் என்பதல்ல. எனக்குக் கார் ஓட்டத் தெரியும் என்பது தான். காரை வாங்கிக் கொண்டு, எனக்கு லைசன்ஸும் வாங்கிக் கொண்டு ஊர் திரும்பும் போதுதான் என்னிடம் தன் மனதைத் திறந்து காட்டினார் திப்பிலியார். ‘கமலம் உன்னைப்பத்தி மிகவும் நல்ல அபிப்பிராயம் சொல்லுது’ என்று ஆரம்பித்தார். எனக்கு அதுவே திருப்தியாக இருந்தது. திப்பிலியார் எத்தனையோ தப்புக்கள், பாபங்கள் செய்தவர்தான் என்றாலும், அவர் விரும்பிக் கண்ணாலங் கட்டிக்கிட்ட அந்தக் கமலத்திடம் உசிராகத்தான் இருந்தார். கமலத்துக்காக அவள் தகப்பன் ராஜவேலுவை மீண்டும் ஏற்றுக் கொள்ளத் தயாராகவே இருந்தார். ராஜவேலு தான் திரும்பத் தயாராக இல்லை; யுத்தம் செய்யவே தயாராகிக் கொண்டிருந்தான்.”

# அத்தியாயம் 19

“இது வரையில் திப்பிலியார் சொல்லி வந்தது எனக்குச் சரியாகப்பட்டது. பிறகு அவர் ‘அந்த ராஜவேலு என்னைத் தீர்த்துவிடவே தீர்த்துவிடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு சபதம் செய்திருக் கிறானாம். அவனைச் சுற்றியுள்ள ஆட்களில் ஒருவன் எனக்கு நம்பகமானவன் இருக்கிறான்’ என்று சொன்ன போது ஏதேது இதன் விளைவுகள் எப்படிப் பயங்கரமாகப் போகின்றனவோ என்று எனக்குப் பயமாகத்தான் இருந்தது; குலை நடுக்கமே எடுத்து விட்டது.”

“அதெல்லாம் காரணமாகத்தான் நமக்கு உபயோகப் படட்டும் என்று இந்தக் காரை வாங்கினேன். இதில் ஒரு மூலையில் ஒரு ரகசிய அறை செய்து வைத்து அதில் இரண்டு சிறு கைத்துப்பாக்கிகள், பிச்சுவா இவற்றை ஒளித்துவை. எந்தச் சமயம் எது தேவைப் படுமோ, யார் சொல்ல முடியும்? அப்படி ஏதாவது எனக்கு நேர்ந்துவிட்டால், பையன் நாகுவையும், அவன் அம்மா கமலத்தையும் நீ தான் ராஜவேலு விடம் அவர்கள் அகப்பட்டுக்கொண்டு விடாதபடி பாதுகாக்க வேண்டும். கமலத்துக்கு அவன் அப்பன்

போக்கு கட்டோடு பிடிக்கவில்லை என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் துணையில்லாது அகப்பட்டுக் கொண்டால் அவன் என்ன செய்வானோ? அந்தப் பிள்ளையை நன்றாகப் படிக்க வைத்து ஏதாவது நல்லதோர் வேலையில் சேர்த்துவிட வேண்டும்..... இதற்கெல்லாம் நான் உன்னைத்தான் நம்பியிருக்கேன் சம்பந்தம்” என்றார் திப்பிலியார்.

“சரி என்பதற்கு மேல் நான் என்ன சொல்ல முடியும்?”

“நாளைக்கோ மறு நாளோ மாயவரம் போய் வக்கீல் ஐயாவைப் பார்த்து என் சொத்து சுதந்தரத்துக் கெல்லாம் ஏற்பாடு செய்துவிட்டு வந்து விடுவேன்” என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போது எனக்கே அவர் நிலைமையை எண்ணி அழுகை வந்து விடும் போல இருந்தது. “அதுக்கெல்லாம் அவசியம் இருக்காதுங்க, நாம்ப ஜாக்கிரதையாக இருந்தாக்க நம்மகிட்ட எந்தப் பய வந்துவிட முடியும்ங்க? ராஜ வேலுதான் ஆகட்டும். அவனுடைய பாட்டன்தான் ஆகட்டும். கிட்ட அண்டிவிட முடியுங்களா?” என்றேன். ஒரு மணி நேரத்துக்கும் அதிகமாக நான் ஒன்றுமே பேசாமல் இருந்துவிட்டு இப்படி முடிவாகத் தீர்மானமாகப் பேசியது அவருக்கு ஆறுதல் அளித்தது போலும். அந்தப் பேச்சை அதோடு விட்டுவிட்டார். வழி நெடுகப் பேசாமலேதான் வந்தார்.

“அவர் அதிகம் பேசாமலும், வேண்டிய அளவு பேசிவிட்டு நிறுத்தியதும் எனக்குத் திருப்தியாகத் தான் இருந்தது. அன்று மாலையே அவர் எனக்குத் தந்த வாக்குறுதியையும் நிலைநிறுத்தி விட்டார். அதாவது அந்த வியாபாரம் எப்படிப்பட்டது என்பதையும் எனக்குக் காட்டிச் சொல்லிவிட்டார். சொல்கிறேன் என்று சொன்னதோடு விட்டிருந்தாரானால் நான் போய் அவரைக் கேட்கவேண்டும் என்றுகூட எண்ணி யிருக்க மாட்டேன். ஆனால் அன்று சாயங்காலமே ரைஸ்மில் கதவையெல்லாம் அடைத்துப் பூட்டியான பிறகு, ‘மில் சாவியை எடுத்துக்கொண்டு என்னுடன் வா’ என்று கூப்பிட்டார். வெளிக்கேட்டையும், கார் கதவுகள் இரண்டையும் திறந்து கொண்டு உள்ளே போனோம். இருட்டி இரண்டு நாழிகை நேரம் ஆகிவிட்டது. மின்சார விளக்குகள் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தும் எனக்குப் பயமாகத்தான் இருந்தது. பெரிய இடத்துப் பொல்லாப்பு வரும், வந்துவிட்டது என்கிற பயம் என்னைப் பாதித்தது. இதிலெல்லாம் நாம் மாட்டிக் கொள்வானேன் – அங்கிருந்து ஓடிப் பதுங்கி திருவாலூர் போய் விட்டால் என்ன என்றுதான் எனக்குத் தோன்றியது.”

“ஆனால் அன்று காரை எடுத்துக்கொண்டு வீடு திரும்பியதுமே கமலம் என்னைவந்து பார்த்து ‘உன்னை என் அண்ணன் மாதிரி கருதியிருக்கேன். ஆபத்து சமயத்தில் என்னை நீதான் காப்பாற்ற வேண்டும்’ என்று கெஞ்சினாள். திப்பிலியார் சொல்லித்தான், என்னைத் தங்கள் கட்சியில் இருத்திக்கொள்ளத்தான் வந்தாளோ என்று ஒரு சந்தேகம் எனக்கிருக்கத்தான் இருந்தது. அப்படியே யிருந்தால்தான் என்ன தப்பு என்றும் உடனேயே தோன்றிற்று. எது எப்படியானாலும் கமலத்துக்காகவேனும் திப்பிலியாருடன் இருந்து அந்தக் கட்சியிலே நம்மாலானதைச் செய்வது என்கிற தீர்மானத்துடன்தான் நான் அன்று திப்பிலியாருடன் அவருடைய ரைஸ் மில்லுக்குப் போனேன்.”

“அந்தத் திப்பிலியாபுரத்து ரைஸ் மில்லை அய்யா பார்த்திருக்கமாட்டீங்க! போலீஸ் இன்ஸ்பெக்டருக்குத் தெரியும். அது இருக்கிற இடத்தையும் தோற்றத்தையும் நான் சொல்வதை விட ஐயா சொல்றது சரியாக இருக்கும். சொல்லுங்க இன்ஸ்பெக்டர் ஐயா” என்றான் சம்பந்தம்.

# அத்தியாயம் 20

இன்ஸ்பெக்டர் ஃபிரான்ஸிஸ் சொன்னார்: "என்னையும் உன் கதையிலே ஏண்டா இப்படி இழுக்கறே?" என்று கேட்டார்.

"மீளமுடியாது மாட்டிக்கிட்டுத்தானே இருக்கீங்க? நான் இழுக்கறதுக்கு என்ன வந்தது? சொல்லுங்க. பேசிப்பேசி எனக்கு மட்டும்தான் வாய் வலிக்கணு முங்களா?" என்றான் சம்பந்தம்.

"பொல்லாத பயலடா நீ!" என்று ஃபிரான்ஸிஸ் திப்பிலியாபுரத்து ரைஸ்மில் பற்றியும், திப்பிலியா புரத்தைப் பற்றியுமே சொல்லத் தொடங்கினார்: "திப்பிலியாபுரம் கொள்ளிடத்தின் தென்கரையிலே இருக்கிற ஒரு கிராமம். ஒரு காலத்திலே அக்கிர ஹாரமும் சிவன் கோயிலுமா நாநூறு வீடுகள் இருந்திருக்கும். இப்போது வீடுகளில் பெரும் பகுதியும் கிலமாகிவிட்டன. கோயில் ஜீரணமேயாகி விட்டது. கோயிலை நம்பி அந்தச் சிவனுக்கும் பூஜை செய்துகொண்டிருந்த ஒரு பார்ப்பான் வீட்டைத் தவிர அந்தக் கிராமத்திலே வேறு பார்ப்பான் வீடே கிடையாது. கொடிக்காலில் வெற்றிலை பயிர் இடுகிற துலுக்கர்கள் குடும்பங்கள் இருபதுக்கும் அதிகமாக, ஒரு காலத்தில் சேணியர் தெருவாக இருந்த தெருவைத் துலுக்கத் தெருவாக்கி அதிலே குடியேறி இருந்தனர். அவர்களைத் தவிர ஹரிஜனக் குடியானவர்கள் சேரி தனியாக இருந்தது. மற்றபடி குடியானவர்கள் தெருவிலே ஒரு ஏழெட்டு வீடுகள்தான் இருந்தன. அவற்றிலே நான் போய்ப் பார்த்தபோது பெரிய வீடு என்று சொல்லக்கூடியது தியாகராஜத் திப்பிலியார் வீடுதான். மற்ற வீடுகள் எல்லாம் இடிந்தும் விழுந்துகொண்டும் இருந்தன. இவர் வீடு மட்டும் புதுக் கருக்குடன், புது வர்ணம் வைத்து செமண்டு வைத்துக் கட்டி வர்ணம் தீட்டப்பட்டு, முன் பகுதியில் ஒரு அகன்ற மொட்டை மாடியும் அப்பால் தளமிட்டும் இருந்தது. வீட்டு வாசலிலே கொட்டகை போட்டு இரண்டு இரட்டை மாட்டு வண்டிகள் நின்றன. கார் வாங்கிய பிறகு ரோடிலேயே காருக்கும் தென்னை ஓலை மேய்ந்து விஸ்தாரமாகக் கொட்டகை போட்டு ஷெட் ஒன்று கட்டியிருந்தார் திப்பிலியார்."

"ரைஸ்மில்லைப்பற்றிச் சம்பந்தம் சொல்லச் சொன்னால் நீங்கள் திப்பிலியார் வீட்டையும் கிராமத்தையும் பற்றிச் சொல்ல ஆரம்பித்துவிட்டேளே இன்ஸ்பெக்டர்?" என்றேன்.

"சொல்லட்டும் – சொல்லட்டும். அதுவும் என் கதைக்கு ரொம்பவும் அவசியம்தான். உடனடியாக இல்லாவிட்டாலும் பின்னர் பிரயோசனப்படும்"

என்றான் சம்பந்தம்.

“தன் வீட்டுக்குப் பக்கத்திலிருந்த – இரண்டு மூன்று வீடுகளை மலிவாகவே வாங்கிப் புதுப்பித்துக் கட்டிவிட்டிருந் தார் திப்பிலியார். அவற்றிலே அவர் களஞ்சியங்கள், இரும்புப் பெட்டிகள், ஒரு கொல்லுப்பட்டறை எல்லாம் இருந்தன. திப்பிலியார் ஏதாவது ஒரு நிலத்தையோ, வீட்டையோ விரும்பி விலைக்குக் கேட்டுவிட்டார் என்றால், சொந்தக்காரன் அவர் கேட்ட விலைக்கு விற்றுவிட்டு நகர்ந்துவிடுவான். அதுதான் சௌகரியம். அவர் விலைவாசி விஷயங்களில் சற்றுத் தாராள மாகவே நடந்து கொள்வார். உரிய விலைக்கு நூறு இருநூறு சில சமயம் ஐநூறுக்கும் அதிகமாகவே தருவார். கேட்டவுடன் மறுத்துச் சொல்லாதிருக்க வேண்டும். அவ்வளவுதான்.”

“இந்தச் சௌகரிய மெல்லாம் யுத்த காலத்திலும் அதற்குப் பின்னரும் ஏற்பட்டவை. ஆனால் ஆரம்ப காலத்திலிருந்தே திப்பிலியாருக்கு ஒரு ரைஸ்மில் இருந்தது. அதைப் பிதுரார்ஜித மானது என்றும் சொல்லலாம் – பிதுரார்ஜிதமல்லாதது என்றும் சொல்லலாம். எப்படி என்று சொல்கிறேன். நான் தவறாகச் சொன்னால் சம்பந்தம் திருத்தட்டும்.”

“திப்பிலியாருடைய தாயார் பெயர் அன்னம்மா. அவள் ஏதோ ஒரு காலத்தில் அடுத்த கிராமத்துப் பேர்வழி ஒருவனைக் கல்யாணம் செய்துகொண்டதுண்டு. ஆனால் அந்தப் புருஷன் அவளுக்கீடு சொல்லமாட்டாமல் 1912, 1913 வாக்கிலே – அதாவது முதல் உலக மகா யுத்தத்துக்கு இரண்டொரு ஆண்டுகளுக்கு முந்தியே அக்கரைச் சீமைக்கு ஓடிவிட்டான். அவன் என்ன வானான் என்று நாளிதுவரையில் யாருக்கும் தெரியாது. அவனுக்கும் திப்பிலியார் கதைக்கும் சம்பந்தம் இல்லை. அன்னம்மா பிழைப்புத் தேடி கிராமத்தை விட்டுக் கிளம்பி சீர்காழி, மாயவரம், கும்ப கோணம் என்று நகரங்களுக்குப் போனாள். போன இடத்திலே ஒரு ரைஸ்மில்லிலே வேலை ஆளாக அமர்ந்தாள். கும்ப கோணத்து ரைஸ்மில் ராமுவையர் கிட்ட அவள் இருக்கும் சமயம்தான் தியாகராஜன் பிறந்தது. ராமுவையன் அந்தப் பிள்ளைக்கென்று வயது வந்தவுடன் 1930, 32லே திப்பிலியா புரத்திலே ஒரு சின்ன வீட்டையும் ஒரு ரைஸ்மில்லையும் வைத்துக் கொடுத்தான். அந்த மில் பிதுரார்ஜிதமானது என்றும் சொல்லலாம் என்று நான் சொன்னது இதனால்தான். மில் ராமுவையன்தான் தியாகராஜத் திப்பிலியாரின் தகப்பன் என்பதுபற்றி அன்னம்மாளும் ஒளிவு மறைவு காட்டியதில்லை. ராமுவையனே அதைப் பற்றிப் பெருமைப்பட்டுப் பேசியதுண்டு என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன்.”

“அந்த மில் ராமுவையரை நான் போய் ஒரு தரம் அவர் வீட்டில், கும்பகோணத்தில் சந்திக்க நேர்ந்த துண்டு. அதைப் பற்றி என் கதையில் அதன் இடத்தில் சொல்லுகிறேன்” என்று மேலும் என் ஆவலைத் தூண்டிவிட்டான் சம்பந்தம். “ஐயா இப்ப ரைஸ் மில்லைப் பத்திச் சொல்லுவார்.”

“அந்த ரைஸ் மில்தான் திப்பிலியாரிடம் இருந்தது. சுற்றுப் பக்கத்துக் கிராமங்களில் நல்ல நெல் விளைச்சல். இருபது மைல் சுற்று வட்டத்துக்கு அந்த நாட்களிலே ஒரு ரைஸ்மில்கூடக் கிடையாது. ஆகவே ஆரம்பத்திலிருந்தே திப்பிலியாருடைய ரைஸ்மில்லுக்கு நல்ல கிராக்கியிருந்தது. அறவைக் கூலி மூலமாகவே அவர் பணக்காரராகியிருக்கலாம். கையில் கொஞ்சம் பிடிபடவே மேலும் பணக்காரனாவதற்கு ஆசை தட்டியது. படகு வலிப்பவர்கள் சிநேகிதம் ஏற்படவே பணம் பண்ணைக் குறுக்கு வழியும் ஒன்று புலப்பட்டது. கடற்கரைக் கிராமம் என்றுதான் திப்பிலியா புரத்தைச் சொல்ல வேண்டும் – ஆனால் கடற் கரைக்கும் கிராமத்துக்கும் இடையே சுமார் பதினேழு பதினெட்டு மைல் இருந்தது. ஆனால் கடலில் வந்து கொள்ளிடத்தில் படகு செலுத்திக்கொண்டு வருவது மிகவும் சுலபமான காரியம். அங்கிருந்து புதுச்சேரியும் காரைக்காலும் அரை இரவுக்குள் படகில் அடைந்துவிடக் கூடிய தூரத்தில் தான் இருந்தன.”

“கையில் பணம் சேரச் சேரத் திப்பிலியாருக்கே புதுச்சேரிச் சரக்கில் மோஹம் விழுந்துவிட்டது. பட்டு, தங்கம் என்பது போன்ற சரக்குகளில் மட்டுமல்ல. ஃபிரான்ஸ் தேசத்து மது வகையறாக்களிலும் அவருக்குச் சபலம் ஏற்பட்டது. படகுக் காரர்கள் துணைகொண்டு கடல் மார்க்கமாகப் புதுச்சேரியிலிருந்து சரக்கு கொண்டு வருவது லாபகரமாக இருந்தது. அதையே வியாபாரமாகச் செய்யலாமே என்று தீர்மானித்துச் செய்தார். நூற்றுக்கணக்கில் சம்பாதித்துக் கொண்டிருந்த திப்பிலியாருக்கு ஆயிரக் கணக்கில் பணம் வரத் தொடங்கியது இந்தப் புதுச்சேரி சரக்கு மூலமாகத்தான். மிகவும் சாமர்த்தியமாகவே திப்பிலியார் தனது வியாபார சாம்ராஜ்யத்தையும், தளவாடங்களையும் பெருக்கிக்கொண்டார். இதெல்லாம் யுத்தம் தொடங்கு முன்னரே ஓரளவு போலீஸுக்குத் தெரியும். எதுவும் ருஜு செய்யத்தான் முடியவில்லை. பிராணதார்த்தி அய்யர் போன்றவர்கள் நிலைமையைத் தங்களுக்கும் லாபம் தரும் வகையில் பிரயோஜனப் படுத்திக் கொண்டார்கள். என்னால் அதுகூட முடியவில்லை” என்று ஒரு பெருமூச்சு விட்டார் இன்ஸ்பெக்டர் ஃபிரான்ஸிஸ்.

அவரால் நிலைமையைப் பிரயோசனப் படுத்திக் கொள்ள இயலவில்லை என்பது உண்மையாகவே இருக்கலாம் என்று நான் எண்ணினேன். நம்பத்

தயாராகவே இருந்தேன். ஆனால் சம்பந்தத்துக்கு அதை நான் நம்பிவிடப் போகிறேனே என்று பயம் போலும்.

“அய்யா தூத்துக்குடியிலே ஒரு பங்களா – பட்டணத்திலே ஒரு பங்களா வாங்கிட்டாரு, சும்மா பெருமூச்சு விடறாரு. ஒரு பங்களாவுக்காவது திப்பிலியார் தந்த பணம் உபயோகப் பட்டிருக்கும்” என்றான் சம்பந்தம்.

இப்படி அவன் நெருப்புடன் விளையாடுகிறானே என்று எனக்கும் பயமாகத்தான் இருந்தது. ஆனால் ஃபிரான்ஸிஸ் வியப்பில் ஆழ்ந்தார். “எப்படியடா உனக்குப் பட்டணத்துப் பங்களா விவரம் தெரிந்தது?” என்று ஆச்சரியத்துடனே கேட்டார்.

சம்பந்தம் பதில் சொல்லவில்லை. பதில் எதுவும் சொல்கிற உத்தேசம் அவனுக்கு இல்லை என்று அறிந்துகொண்டதும் ஃபிரான்ஸிஸ் தான் சொல்லிக் கொண்டிருந்ததைத் தொடர்ந்து சொன்னார்.

# அத்தியாயம் 21

"திப்பிலியாபுரத்து ரைஸ்மில், கிராமத்துக்குட் போகிற கப்பி ரோட்டு ஆரம்பத்திலேயே இருந்தது. திப்பிலியாபுரத்துக்குப் போகிறவர்கள் அந்த ரைஸ் மில்லைத் தாண்டித்தான் போக வேண்டும். மின் சாரத்தால் இயங்கும் மில்லாகத்தான் தன் பிள்ளைக்கு வாங்கித் தந்திருந்தார் ராமுவையர். ஒரு மாடிக் கட்டிடத்தைக் கட்டி அதைச் சுற்றிலும் பூந்தோட்டம் ஒன்று வைத்து, நெல் உலர்த்தும் களம் ஒன்றும் பெரிதாகப் போட்டு, பாய்லரும் பெரிதாக வைத்து இயங்கத் தொடங்கிய மில், திப்பிலியாரின் புதுச்சேரி வியாபாரம் தலைதூக்கிப் பெரிதாக நடக்கத் தொடங்கியதுமே பெரிதாகக் காம்பவுண்டுச் சுவருடன், மில் முதலாளிக்கு ஒரு தனி பங்களாவுடன் நிர்மாண மாயிற்று. பாழடைந்த சிவன் கோயிலின் முதல் இரண்டு பிரகாரங்களும் நாளடைவில் மில் காம் பவுண்டுக்குள் எப்படியோ சேர்ந்துவிட்டன. அந்தப் பிரகாரங்களில் கட்டிடம் கட்ட அஸ்திவாரம் போடத் தோண்டிய போதுதான் திப்பிலியாருக்குப் புதையல் கிடைத்தது. ஒரு பெரிய அண்டா நிறையப் பொன் காசுகள் கிடைத்தன என்று சொல்லிக் கொண்டார்கள்."

"மில்லைச் சுற்றிய நந்தவனத்தை மிகவும் அற்புதமாகக் கவனத்துடன்தான் நிர்மாணித்திருந்தார் திப்பிலியார். எங்கெங்கிருந் தெல்லாமோ அவர் பலவிதமான புஷ்பச் செடிகள் கொணர்ந்து வைத்திருந்தார். ரோஜாக்கள்தான் அவற்றில் ஏராளம். வேறு வேலையில்லாத சமயங்களிலெல்லாம் அவர் ரோஜாப் புதர் களண்டை நின்று எந்தச் செடி எப்படித் துளிர்விட்டிருக்கிறது, எப்படி மொட்டுக் கட்டுகிறது, இவை எப்படிப் பூக்கும் என்று கவனித்துக்கொண்டே பொழுதைப் போக்கிக்கொண்டிருப்பார். திருவாலூர்க் கமலத்திடம் அவருக்கிருந்த ஈடுபாட்டில், ஆசையில் பாதியாவது அவருக்குத் தோட்டம் போடுவதிலும் இருந்தது. விதம் விதமாகப் பூத்து மணக்கும் பூச்செடிகளாக நூற்றுக் கணக்கில் கொணர்ந்து தன் தோட்டத்தில் வைத்து ஆனந்தித்தார் அவர். எங்கள் ஸி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் ராஜகோபாலன் ஒரு சமயம் தோட்டம் போடுவதில் இத்தனை ஈடுபாடுள்ள மனிதன் நிச்சயமாகக் கொலைகாரனாக இருக்க முடியாது என்று ஒரு தரம் சொன்னார். அந்தத் தோட்டத்தைப் பல தடவைகள் பார்த்து நான் பரவசப்பட்டிருக்கிறேன்."

"இப்போது சொல்லும் போதே பரவசமாகத்தானே சொல்லு கிறீர்கள்!" என்றேன் நான்.

“எனக்கும் தெரியும் – திப்பிலியாருக்குத் தோட்டம் போடுவதில் இருந்த ஈடுபாடு. அந்தத் தோட்டத்திலே அவர் இருக்கும் போது அவரிடம் சின்ன விஷயமாக எதுவும் பேசக் கூடாது – சின்னத்தனமாக எதுவும் பேசக் கூடாது  என்பார் அவர்” என்றான் சம்பந்தம்.

இன்ஸ்பெக்டர் ஃபிரான்ஸிஸ் தனது கதையைத் தொடர்ந்து சொன்னார்: “யுத்தம் நடந்து கொண்டிருந்த சமயத்திலே திப்பிலியார் தனது மில்லைத் தரை மட்டமாக்கி அதைப் புதுப்பித்துப் பலமாகக் கட்டினார். முன்பிருந்த கட்டிடமே நன்றாக இருக்கிறதே – விலை வாசிகள் ஏறிவிற்கும்போது, சிமிட்டியே கிடைக்காத போது எதற்காக இப்படி நல்ல கட்டிடத்தை இடித்து விட்டு வேறு கட்டுகிறார் என்றுகூடப் போலீஸாருக்குத் தெரிய வந்ததும் சந்தேகம் எல்லாம் பிறந்தது. மில் பாகங்கள் கூடப் புதுசாக வாங்கினார் – நெல்மிஷினுடன், மாவுமில், மற்றும் பல, புது மில்களும் அடங்க வைத்துக் கட்டினார். அதற்குக் காரணம் அவருக்கு மிலிடரி சப்ளைக்கு ஒரு பெரிய ஆர்டர் வந்திருந்ததுதான் என்று அவர் கடைசியில் காரணம் காட்டினார்.”

“அந்த ஆர்டர் அவர் கட்டிடம் கட்டி மாவுமில் முதலிய புது மில்கள் எல்லாம் வைத்த பிறகு சிரமப்பட்டு ஏராளமாகப் பணங் கொடுக்க வேண்டிய இடத்தில் கொடுத்து வாங்கிய ஆர்டர்தான். அவருடைய அருமை நந்தவனத்தில் ஒரு பகுதி புதுக்கட்டிடம் கட்டுகிற வெறியில் வீணாயிற்று – அதைக்கூடப் பார்க்காமல் அவர் கட்டிடங்களைக் கட்டி முடித்தார். விசேஷம் இதில் என்ன வென்றால் சில இடங்களில் அவரே முன் நின்று கொத்து வேலை செய்தார். வேலை செய்த சாதாரணக் கொத்தர்களைத் தவிர மற்றவர்கள் – உள் வேலை செய்தவர்கள் – எல்லோரும் வெளியூர்க்காரர்கள்” என்றான் சம்பந்தம்.

“அந்தக் கொத்தனார்களைப் போலீஸார் தேடினார்கள் என்று மட்டும் எனக்கும் தெரியும். அந்தச் சமயத்தில் அந்தக் கேஸைக் கவனித்துக்கொண்ட போலீஸ்காரர்களில் பிராணதார்த்தி அய்யன் முதலாவது. இரண்டாவது இன்ஸ்பெக்டர் வேறு ஒருவர் – நானில்லை. கொத்தனார்கள் கிடைக்கவில்லை என்கிற விவரம் மட்டுமே எனக்குத் தெரியும்” என்றார் ஃபிரான்ஸிஸ்.

# அத்தியாயம் 22

“கொத்தனார்கள் அப்படி மறைய வேண்டிய அவசியம் எப்படி ஏற்பட்டது என்பதைக் கண்டு பிடிக்கத்தான் பட்டணத்திலிருந்து காரை எடுத்துக் கொண்டு வந்த அன்றைக்கு, இரவு இருட்டி இரண்டொரு நாழிகைக்கெல்லாம் என்னை அழைத்துக் கொண்டு மில்லுக்குள் போனார் திப்பிலியார். மில் சக்கரம் கழன்றுகொண்டிருக்க வேண்டிய இடத்தில் – அப்போது மில்லில் வேலையில்லை; இருட்டின பிறகு சாதாரணமாக வேலை இருப்பதில்லை – நின்று கொண்டு ஒரு கதையைச் சொன்னார் எனக்கு.”

“ஏழுமலை, ஏழுமலை என்று ஒருவன் எங்களிடம் அரிசி பிடிப்பதற்கு வந்தான். ஆயிரக்கணக்கான மூட்டைகளைப் பணம் கொடுத்து – கேட்ட பணம் கொடுத்து – வாங்கிக்கொண்டு போனான். ஐம்பதினா யிரம் அறுபதினாயிரம் ரொக்கமாகக் கொண்டுவந்து தருவான். ஒரு வருஷம், இரண்டு வருஷம் இப்படி நடந்தது. இப்படி மூன்று வருஷம் நடந்த பிறகு, நாலாவது வருஷம் இருவரும் ஒருவருக்கொருவர் நம்பகமாக வந்தபிறகு, பெரிய அளவில் வியாபாரம் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது என்றும், பத்து லக்ஷம் வரையில் பெறுமானமுள்ள அரிசி மூட்டைகள் ஒரே சமயத்தில் கிடைத்தாலும் எடுத்துப்போக இயலும் என்றும் கள்ளமாட்கெட் அரிசிக்கு இலங்கையில் நல்ல கிராக்கி இருந்தது என்றும் தெரிவித்தான்.”

“எப்பவுமே அவன் ரொக்கமாகப் பணம் கொண்டு வருபவன் தான். அந்தத் தடவை ஒன்பது லக்ஷம் நூறு ரூபாய்க் கட்டுக்களாக ஒரு டிரங்குப் பெட்டியில் போட்டுப் பூட்டி எடுத்துக்கொண்டு வந்தான். எங்களிடம் ஆட்களும் அரிசி மூட்டைகளும் நில வறையில் தயாராகவே இருந்தன. அந்த இலங்கை அரிசி ஆசாமி வந்த புதிசில்தான் நான் நிலவறைகள் எல்லாம் வைத்து மில்லைப் பெரிதாக்கிக் கட்டினேன். அந்த ரகசியக் களஞ்சியங் களை, பூமிக்கடியில் கட்டிய ஆட்களைக்கூட அப்புறப்படுத்த எனக்கு உதவியவன் அந்த ஏழுமலைதான். இலங்கைக்கு அரிசி யுடன் அவர்களையும் அவன் கடத்திச் சென்றுவிட்டான். ஓரொரு பகுதியாக ஓரொரு கோஷ்டி கொத்தர்கள் கட்டினார்கள் – ஆகவே ஒரு கோஷ்டிக்கும் எங்கு என்ன இருக்கிறது என்று முழுவதுமாக பூரணமாகத் தெரியாது.”

“அந்தச் சமயத்தில்தான் ராஜவேலு அரிசியையும் தராமல் இலங்கையான் ஏழுமலை கொணர்ந்திருந்த ஒன்பது லக்ஷத் தையும் நாமே அடித்துக்கொண்டு விடலாமே என்றான். கள்ளக் கடத்தலில் ஈடுபட்ட

ஆசாமி மிகவும் குறைந்த பேர்வழிகளிடம் தான் தான் போகிற இடம், காரியம் எல்லாவற்றையும் சொல்லி யிருப்பான். அவன் கூட்டாளிகளுக்கும் பூரா விவரமும் தெரிந் திருக்க நியாயம் இல்லை. ஆளைத் தீர்த்துக் கட்டிவிட்டால் பணம் – ஏற்கெனவே என்னிடம்தான் கொடுத்து வைத்திருந்தான் ஏழுமலை – எல்லாம நம்முடையதாகி விடும் என்று யுக்தி சொன்னவன் ராஜவேலுதான். நானும் சம்மதித்தேன்.''

''ஏழுமலையை அப்புறப்படுத்துகிற காரியத்தில் நான் நேரடியாக ஈடுபடவில்லை. சுலபமாகவே அவனைத் தீர்த்து விட்டான் ராஜவேலு. என்ன செய்தானோ நான் நுணுக்கமாகக் கேட்டுக் கொள்ளவும் இல்லை. அந்த ஏழுமலையின் உடலை அப்புறப்படுத்துவதில் தான் சிரமம் ஏற்பட்டது. ராஜவேலு வினால் அந்தக் காரியத்தைச் சமாளிக்க முடியவில்லை. நான் அவனுக்கு உதவ வேண்டியிருந்தது'' என்று சொல்லிவிட்டு ஒரு நிமிஷம் ஒன்றுமே பேசாதிருந்தார் தியாகராஜத் திப்பிலியார்.

''நானும் எதுவும் பேசவில்லை. நானாக எதையும் கேட்டுக் கொள்ள விரும்பவில்லை. அவராகச் சொல்ல விரும்புகிற வரையில் சொல்லட்டும் என்று பேசாதிருந்தேன். 'இதெல்லாம் எனக்கு எதற்காகத் தெரியவேண்டும்?' என்று நான் இடைமறித்து இரண்டொரு தரம் கேட்கவும் கேட்டேன். அதைக் காதில் வாங்காமலேயே பேசிக்கொண்டிருந்தார் யசமான். இவ்வளவு தூரம் சொன்ன பிறகு நான் குறுக்கே பேசவில்லை.''

''முழு நிமிஷம் ஒன்று கழிந்த பிறகுதான் சொன்னார். தனது ஆள் காட்டி விரலைச் சுட்டிக் காட்டி 'அதோ அந்த இடத்தில் அவனைப் புதைத்து அவன் மேல் செமண்டு தளம் இட்டு அதிலே மில் யந்திரத்தை வைத்துவிட்டோம்' என்றார்.''

''சற்று நேரம் கழித்து 'முதல் தளத்தைப் போட்டு செமண்டு கெட்டிப்படும் வரையில் எங்களிருவருக்கும் உதவி செய்ய நாங்கள் யாரையும்கூப்பிடவில்லை. கூப்பிடவும் முடியாது – மிகவும் ரகசியமான வேலை அது. மேலே மில்லை வைத்துக் கட்ட மற்றக் கொத்தனார்கள், ஆட்கள் எல்லாம் இரண்டு நாளில் வந்தார்கள். அவர்களுக்கு ஏழுமலை விஷயமோ அவன் எதற்காக வந்தான் என்பதோ, என்ன கொண்டு வந்தான் என்பதோ எதுவுமே தெரியாது. அவன் அதற்கு முன் வரும்போதும் ரகசியமாகத்தான் வருவான். இரண்டொருநாள் நடமாடுவான் – யாருக்கும் அறிவிக்காமல் இரவோடு இரவாகப் போய்விடுவான். இந்தத் தடவையும் அவன் முந்திய இரவு போய்விட்டான் என்றுதான் விளம்பரப்படுத்தினோம். இந்த விஷயத்தினால் ராஜவேலுவுக்கோ எனக்கோ எவ்விதச் சிரமமும் விளைய வில்லை.' ''

“மீண்டும் சிறிது நரேம் மௌனமானார் திப்பிலியார். பிறகு கையிலிருந்த ஐந்து செல் டார்ச்சினுடைய பித்தானை அழுத்தி மில்லின் அடித்தளம் பூராவும் எனக்குத் தெரியும்படியாகக் காட்டினார். பிறகு ‘இப்போது என் ரகசியம் உனக்குத் தெரியும். அதை நீ தப்பாக உபயோகிக்க மாட்டாய் என்று நம்புகிறேன். என்னை விட உன்னிடம் கமலாவுக்குத்தான் அதிக நம்பிக்கை இருக்கிறது. இதை எதற்காகச் சொன்னேன் என்றால்....” மீண்டும் சிறிது நேரம் தயங்கிவிட்டுத் திப்பிலியார் மேலும் தொடர்ந்து சொன்னார். “நீ நம்ப ஆள். நாங்கள் உன்னைப் பூராவும் நம்புகிற மாதிரி நீயும் எங்களைப் பூராவும் நம்ப வேண்டும் என்று வற்புறுத்துவற்காகத்தான்” என்றார். “அந்த ராஜவேலுவுக்கு உன்னை அடிநாட்களிலிருந்தே தெரியும். ஆகவே உன்னையும் தன் பக்கம் இழுத்துக்கொள்ள, என்னிடம் இருந்து கொண்டே எனக்குத் துரோகம் செய்து தனக்கு உதவ, அவன் உனக்கு ஏராளமான பணம் தரேன் என்பான். அதை நீ நம்பிவிடக் கூடாது. என் ஆளாகவே முழு விசுவாசத்துடனும் இருந்துவிட வேண்டும். என் உயிர், என் கமலாவின் உயிர் உன் கையில் இருக்கிறது” என்றார் திப்பிலியார். இன்னும் ஒரு தரம் தன் கை டார்ச்சலைட்டைப் போட்டு ஏழுமலையைப் புதைந் திருந்த இடத்தைக் காட்டிவிட்டுத்தான் அங்கிருந்து என்னையும் அழைத்துக்கொண்டு நகர்ந்தார்.”

# அத்தியாயம் 23

“அப்படியா விஷயம்?” உறுமலான குரலில் சொன்னார் இன்ஸ்பெக்டர் ஃபிரான்ஸிஸ். “நாளைக்கே போலீஸ் இலாகாவுக்குத் தகவல் தெரிவித்து அந்த மில் அஸ்திவாரத்தை யெல்லாம் தோண்டிப் பார்த்து விடச் சொல்கிறேன்.”

“தோண்டிப் பார்க்கிறீங்க; ஏழுமலையானுடைய எலும்புகளைப் பொறுக்கிச் சேர்க்கறீங்க. அப்புறம்?” என்று நகைத்தான் சம்பந்தம்.

“உன் மேலே கேஸு போடலாமே” என்றார் இன்ஸ்பெக்டர்.

“லாபம் இல்லாமல் செய்வீங்களா? இப்ப ராஜ வேலுவும் இல்லை, திப்பிலியாரும் இல்லை உங்களுக்குப் பணம் தர. என் கிட்டேயோ பணம் கிடையாது. எனக்காக வேணுமானால் என் தம்பி தினம் ஒரு கப் காபி உங்களுக்குத் தருவான். அதுக்கு மேலே உங்களுக்கு லாபம் ஏதுங்க?”

“லாபம் இல்லாமல் தர்மம் நியாயம் என்கிறதுக்காக ஒரு காரியத்தை ஒருத்தர் செய்யக் கூடாதா?” என்றார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

“பிரிட்டிஷ் அரசாங்கத்தில் இந்தியப் போலீஸிலா தருமம் நியாயம் என்பதற்காக ஒரு காரியம் நடந்து விடும்?” என்றேன் நான். இந்த விஷயம் முற்றுமுன் இருவருக்கும் சமரஸம் செய்து வைக்காவிடில் பாக்கிக் கதையை நான் கேட்க முடியாது போய்விடுமோ என்று பயம் எனக்கு. “முடிந்து போன ஒரு கேஸைத் திருப்பித் திறந்துவைத்து அவஸ்தைப்பட இன்ஸ் பெக்டர் ஸாஹிபுக்குப் பைத்தியமா பிடித்திருக்கு. சும்மா சொல்கிறார் அவர் – விடு சம்பந்தம். மேலே பாக்கிக் கதையைச் சொல்லு என்றேன்.”

என் பாயிண்டை இன்ஸ்பெக்டரும் புரிந்து கொண்டார்: “உண்மையில் மீண்டும் அந்த ராஜவேலு திப்பிலியார் கேஸையும் தொல்லையையும் மேற்கொள்ள எனக்குப் பைத்தியமா என்ன? புதிதாக ஏழுமலை என்று ஒரு பிரேதத்தை வேறு சேர்த்துக் கொள்கிறாய் நீ! சொல்லு, மேலே என்ன ஆச்சு?” என்று ஆவலுடனே கேட்டார்.

“எனக்கு மடியிலே கனம் கிடையாது – மனத்திலே பயம் கிடையாது” என்றான் சம்பந்தம். “ஆகவே நடந்தது நடந்தபடி சொல்லிவிடறேன். அதுவும் கதை எழுதற அய்யா கேட்கிறாரே என்றுதான் சொல்றேன். போலீஸ் அய்யாவோடெ சிநேகம் கொண்டுவிடுவதுங்கூட சஞ்சலமாகத்தான் இருக்குதுங்க.”

“எங்கள் விலையை யெல்லாம் கூடத்தான் நிர்ணயம் செய்து வைத்திருக்கீங்களே நீங்கள் – ராஜவேலுவும் திப்பிலியாரும்” என்றார் ஃபிரான்ஸிஸ் கசப்புடன் .

“அவர்கள் போட்ட மதிப்புக்குக் குறைவாகவே தான் பிரும்மஹத்தி அய்யர் போன்றவங்க அவர்கள் வலையிலே தானாகவே வந்து விழுந்தாங்களே!” என்றான் சம்பந்தம். “எனக்கும் ஒரு விலையுண்டு என்று எண்ணித்தான் ராஜவேலு, திப்பிலியாருடன் சண்டையிட்டுப் பிரிந்து போய் ஒரு மாதத்துக் கெல்லாம் ஒரு மத்தியஸ்தமான ஆளிடம் பத்தாயிரம் ரூபாய் கொடுத்தனுப்புகிறேன் – தனக்கு உதவ வேண்டும் என்று கேட்டு ஆளனுப்பினான். நான் மறுத்துவிட்டேன். நம்பியிருக்கிற கமலத்தையும் திப்பிலியாரையும் எப்படி மோசம் செய்ய முடியும்?”

“நிஜமாகவே நீ உன்னைத் தேடிவந்த பத்தாயிரத்தை வேண்டாம் என்று சொல்லிவிட்டதாக எங்களை நம்பச் சொல்கிறாயா?” என்று கேட்டார் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஃபிரான்ஸிஸ்.

சம்பந்தம் அவரைப் பார்த்த பார்வை என் அமைதியைக் கெடுத்தது. அவரிடம் கோபித்துக்கொண்டு கதையைச் சொல்லாமல் போய்விடப் போகிறானே சம்பந்தம் என்று எனக்குப் பயம் வந்துவிட்டது. “ஐயா, இன்ஸ்பெக்டர்வாள். எனக்குக் கிடைக்கிற கதை தப்பிவிடப் போகிறதே என்று எனக்குப் பயமாக இருக்கிறது. நீங்கள் போய்விட்டு நாளைக்கு இங்கே இந்நேரத்துக்கு வாருங்கள். நான் சம்பந்தம் சொன்ன கதையை உங்களிடம் புரியும்படி தெரிவிக்கிறேன். அல்லது எந்த விதத்திலும் சம்பந்தத்தின் கதையில் குறுக்கிடுவதில்லை. அவன் சொல்கிறபடி சொல்லட்டும். அவன் சொல்வதை வைத்து எவ்வித போலீஸ் ஆக்ஷனும் எடுப்பதற்கில்லை – கேட்டுவிட்டு மனத்தில் போட்டு வைப்பதைத் தவிர எதுவும் செய்வதில்லை என்று சத்தியம் செய்து கொடுங்கள்” என்றேன் நான்.

சம்பந்தம் நன்றியுடன் என்னைப் பார்த்தான். இன்ஸ்பெக்டர் என்னைச் சபித்துவிடுபவர்போலப் பார்த்தார். “போலீஸ் காரனுடைய சபதத்தை உங்கரெளடி நண்பன் நம்புவானா கேளுங்கள்” என்றார்.

“போலீஸ் இன்ஸ்பெக்டர் அய்யாவுக்கு துரை துரை என்று ஒரு மகன் இருக்கிறான். பன்னிரண்டு வயதாகிறது அவனுக்கு” என்றான் சம்பந்தம்.

“அவனுக்கென்ன இப்பொழுது?” என்று குரலில் ஒரு பதட்டத்துடன் கேட்டார் ஃபிரான்ஸிஸ்.

“அந்தப் பையன் பேரில் ஆணை வைத்துச் சொன்னாரானால் போலீஸ்காரரே யானாலும் அவர் சொல்றதை நம்பறேன்” என்றான் சம்பந்தம். “இல்லாவிட்டால் மேலே பேசிக்கொண்டு போவது எனக்கு ஆபத்துங்க. பின்னர் சந்தர்ப்பம் நேருகிற போது நீங்களும் நானும் தனியாகச் சந்திக்கிறபோது பேசிக்கொள்ளலா முங்க” என்றான் சம்பந்தம் என்னைப் பார்த்துக் கொண்டே.

# அத்தியாயம் 24

இன்ஸ்பெக்டர் ஃபிரான்ஸிஸ் சபதம் செய்து தருவதாக இல்லை. சம்பந்தமும் கதையை மேலே தொடருவதாக இல்லை.

நானும் வழக்கத்துக்கு அதிகமாகவே காபி சாப்பிட்டாகி விட்டது. காபி என்கிற அமிர்தமேயானாலும் அளவுக்கு மீறினால் விஷம்தானே? போதும் என்று தோன்றியது எனக்கு.

கதை மேலே நடக்காது என்று தோன்றிவிடவே சம்பந்தத்தைப் பார்த்து "உனக்கு என்னய்யா வயதாகிறது?" என்றேன்.

"எவ்வளவு என்று மதிப்பீங்க?" என்றான் சம்பந்தம்.

"ஐம்பது என்று சொல்லலாம்."

இன்ஸ்பெக்டர் ஃபிரான்சிஸ் சிரித்தார். "அறுபது தாண்டிவிட்டான் சம்பந்தம். குடி, லாகிரி என்று எந்தக் கெட்ட பழக்கமும் இல்லாதவன் அவன். அதனால்தான் இவ்வளவு திடகாத்திரமாக இருக்கிறான்" என்றான்.

"அனுபவத்திலும் ஆகிவிட்டதுங்க" என்றான் சம்பந்தம் பெருமையாக. அது பெருமைப்பட வேண்டிய விஷயம்தான்; அவன் உடல் பற்றி அவன் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். அதுமட்டுமல்ல. கொலைகாரனோ, கொள்ளைக்காரனோ, ரௌடியோ, கேடியோ அவன் மனிதன்; ஃபிரான்ஸிஸைவிட உயர்ந்தவன் தான் என்றே எனக்குத் தோன்றியது. அவன் ரகஸ்யமாக, நம்பகமாகச் சொன்ன விஷயங்களை வைத்தே அவனை மடக்கிவிடவும் முயலுவார் ஃபிரான்ஸிஸ் என்று எனக்குத் தோன்றியது. ஆனால் அவன் திப்பிலியார் உப்பைத் தின்று அவருக்கு நம்பிக்கைத் துரோகம் செய்யாமல் இருக்க முயன்றிருக்கிறான். அவன்தானே உண்மையில் உயர்ந்தவன் என்று சொல்லவேண்டும்?

அன்று கதை மேலே நகராது. இது தொடர் கதையாகி மறு நாளும் தொடரும் – அதாவது மறு நாளும் சம்பந்தம் என் கண்ணில் பட்டால் – என்று தீர்மானித்து நான் எழுந்து போக முயலும் சமயம் பார்த்து ஒரு போலீஸ் ஜவான் வந்து ஸலூட் அடித்துவிட்டு, "கடலூரிலிருந்து துரை வந்திருக்காங்க. ஸ்டே ஷனுக்கு வரச் சொன்னாங்க ரைட்டர்" என்றான். ஃபிரான்ஸிஸ் பரிதாபமாக என்னையும் சம்பந்தத்தையும் பார்த்துவிட்டு "நாளைக்கு சம்பந்தம் சொன்னதையெல்லாம் என்னிடம் சொல்லிவிடும் ஐயா" என்று சொன்னார்.

‘‘ஊர், பெயர்கள் எல்லாவற்றையும் மாற்றிவிட்டுப் புஸ்தக மாகப் பிரசுரித்துவிடுகிறேன். படித்துத் தெரிந்து கொள்ளும் அய்யா’’ என்றேன் பாதி விளையாட்டாகவும், பாதி வினை யாகவும் .

‘‘பத்து வருஷமாகிவிடும் உம் புஸ்தகம் வெளியாக’’ என்றார் ஃபிரான்ஸிஸ்.

அவர் வெளியே போகும்வரையில் பேசாதிருந்தான் சம்பந்தம். பிறகு ‘‘இன்ஸ்பெக்டர் ஐயா எனக்குத் துரோகம் செய்யமாட்டார். நான் தப்பித்துக் கொள்வதற்கே காரணம் இவருதான். அதுக்காக என் விஜயபுரம் வீடு, திப்பிலியாரிடம் நான் சம்பாதித்த பணம் எல்லாம் அவரிடம் கைமாறிவிட்டது’’ என்றான்.

‘‘அது வெறும் ஜபர்தஸ்து. மூணாவது ஆசாமிக் கெதிரே விட்டுக் கொடுக்கக்கூடாது என்று அவர் போடுற வேஷம்’’ என்றான் சம்பந்தம்.

‘‘ஃபிரான்ஸிஸ் கூடத்தான் போய்விட்டார். கதையை மேலே சொல்லு. துப்பறியும் கதை படிப்பதைவிட நீ சொல்ற கதையைக் கேட்பது சுவாரசியமாக இருக்கிறது’’ என்றேன்.

‘‘அதுக்குக் காரணம் திப்பிலியாருடைய குணாதிசயங்கள் தான்’’ என்றான் சம்பந்தம் தீர்மானமாக.

## அத்தியாயம் 25

"திப்பிலியாருடைய குணாதிசயங்கள் எப்படிப் பட்டவை என்று இன்னும் விரிவாகவே சொல்லேன். ஃபிரான்ஸிஸ் இல்லாததால் நீ நன்றாக மனம் விட்டே பேசலாம்" என்று சம்பந்தத்தைத் தூண்டி விட்டேன்.

"என்னை ஒருதரம் குற்றம் சாட்டிக் கூண்டிலேற்றி விசாரித்து ருஜு இல்லையென்று விட்டுவிட்டார்கள். இனி எனக்கு என்ன பயம்?" என்றான் சம்பந்தம்.

"வேறு புதுக் குற்றமாக ஏதாவது காட்டி.... போலீஸ்காரர்களைப் பற்றிய வரையில் எனக்கும் உன்னைப் போலவேதான் அபிப்பிராயம். அவர்கள் எது வேண்டுமானாலும் செய்யப்பட்டவர்கள்தான். நீ சொல்லு கதையை" என்றேன் ஆவலுடன்.

"தியாகராஜத் திப்பிலியாருடைய குணாதிசயங் களிலே மிகவும் முக்கியமானது அவருடைய தெய்வ பக்திதான்."

"தெய்வ பக்தியா?"

"ஆமாம். அதுவும் அந்தத் திப்பிலியாபுரத்தின் பாழடைந்த கோயிலின் மூலவரான திப்பிலி ஈசனிடம்

அவருக்கு அபாரமான பக்தி. தினமும் அதிகாலையிலும் இரவு ஒன்பது மணிக்கும் கோயிலுக்குப் போகத் தவறமாட்டார். அவர் முயற்சிகளால்தான் கோயில் உள்புறம் எல்லாம் பழுது பார்க்கப் பட்டு இன்னமும் கோயிலாக இடிந்து விழுந்துவிடாமல் இருக்கிறது சிவன் கோயில். வேளா வேளைக்கு நைவேத்தியம் பூஜைக் கெல்லாம் வேண்டிய பூஸ்திதியை அவர் எழுதி வைத்திருக்கிறார். அவர் தயவால் இப்பொழுதும் கோயிலில் வருஷத்தில் நாலைந்து உற்சவங்களாவது பிரமாதமாகவே நடைபெறுகின்றன. நேற்று நான் வந்தவுடன் போய் கோயிலில் ஈசுவர தரிசனம் செய்து விட்டு வந்தேன். நான் போன சமயம் ஈசனுக்கு ஆணித் திருமஞ்சணம் நடந்து கொண்டிருந்தது. ஸந்நிதானத்திலே பக்கத்து ஊர்களிலிருந்து நூற்றுக் கணக்கான ஜனங்கள் வந்து அந்தக் கலியாணக் காட்சியை அனுபவித்துக் கொண்டிருந்தனர். கும்பலிலே நான் கமலத்தையும் பார்த்தேன் – நம் ஊரிலிருந்து மாற்றலாகிப் போனாரே பஞ்சநதம் – அவரையும் பார்த்தேன்."

"எந்தப் பஞ்சநதம்? தனக்குக் கிடைத்த பணத்தைத் தட்டிப் பறித்துக் கொண்டார் என்று ஃபிரான்ஸிஸ் சொன்னாரே, அந்தப் பஞ்சநதமா?" என்றேன்.

“ஆமாம் அவரேதான். தரிசனம் எல்லாம் முடிந்த பிறகு பிரகாரத்தில் ஒரு மூலையில் யார் கண்ணிலும் பட வேண்டாம் என்று நின்று கொண்டிருந்த என்னைத் தேடிக்கொண்டு அவரே வந்தார். வலிய வந்து தனக்கும் போலீஸ் வாழ்வு அலுத்து விட்டது என்றும், ரிடையர் ஆவதற்கு ஆகிய வயசு வரு முன்னரே விருப்பத்துடன் ரிடையராகிவிட்டதாகவும், க்ஷேத்திராடனம் செய்து கொண்டிருப்பதாகவும் சொன்னார். ஆனால் அவர் உண்மையில் எதற்காக அங்கு வந்திருக்கிறார் என்பது எனக்குத் தெரியும் – ஆனால் தெரிந்ததாக நான் காட்டிக் கொள்ள வில்லை.”

# அத்தியாயம் 26

“எதற்காக அவர் திப்பிலியாபுரம் வந்திருக்கக் கூடும்? அதுவும் ரிடையரான பிறகு?” என்று புரியாமல் கேட்டேன்.

“குற்ற இலாகாவிலிருந்து ரகஸ்யத்தில் திப்பிலி யாரை வேவு பார்க்க வந்து, கொள்ளிடக் கரையில் ஆசிரமம் அமைத்துக்கொண்டு ஆத்மாநுபவ ஸ்வாமி களாகக் கொஞ்ச நாள் விளங்கிய அந்த ராஜகோபாலன் மாயமாகத் திடுதிப்பென்று மறைந்து போனதை விசாரிக்கத்தான் அவர் வந்திருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. துப்புத் துலங்க போலீஸ் இலாகாவில் சம்பந்தப்படாதவன் போல இருந்தால் நல்லது என்று அப்படி ரிடையராகிவிட்டதாகப் புளுகிக் கொண்டிருந்தார். அதை அவரிடமே தெரி வித்தும் விட்டேன் நான். எதற்காக அவரிடம் நான் பயப்பட வேண்டும்?”

“என்ன சொன்னாய் நீ? அவன் – அந்தப் பஞ்சநதம் – என்ன சொன்னான். விவரமாகச் சொல்லு” என்றேன். “ஏதேது அந்த ஃபிரான்ஸிஸ் இல்லாமல் உனக்குக் கதையே விவரமாகச் சொல்ல வரமாட்டேன் என்கிறதே!”

“அதில்லை. முதல்லே கமலத்தைச் சந்தித்ததைச் சொல்லலாமா அல்லது பஞ்சநதத்தைப் பார்த்து பேசியதைச் சொல்வதா என்று புரியவில்லை. முதலில் நான் கமலத்தைத்தான் தான் சந்தித்தேன். யசமானுடைய மனைவி – அவளைக் காப்பாற்றுவதாக யசமானுக்கு நான் வாக்குவேறு அளித்திருந்தேன். யசமான் மேல் சந்தேகம் வரக்கூடாது என்பதற்காகத்தான், என் மேல் சந்தேகம் வரும்படியாக நடித்து நான் கொலைக் குற்ற வாளியாகக் கூண்டிலேறி நின்றதே! கொலையைச் செய்தவர் அவர் தான். என் மேல் குற்றஞ் சாட்டினார்கள். எப்படியும் ருஜுவாகாது என்று எனக்குத் தெரியும். ஆகவே கோயிலில் ஈசுவர தரிசனத்தை முடிச்சிக்கிட்டுத் திப்பிலியார் வீட்டுக்குப் போனேன்.”

“அந்த வீடு ‘ஜே ஜே’ என்று திப்பிலியார் உயிரோடிருந்த காலத்தில் எப்படிக் கலகலவென்று இருக்கும்! வாசலில் நாலு ஆள், முற்றத்தில் நாலு ஆள் என்று ஜே ஜே என்றிருக்குமே. இப்போது நான் போய்ச் சேர்ந்த போது வாசற் கதவு தாளிட்டிருந்தது. கதவைத் தட்டி ‘அம்மா அம்மா’ என்று நாலு தரம் கூப்பிட்ட பிறகுதான் “யாரது?” என்று உள்ளேயிருந்து குரல் வந்தது. சம்பந்தம் என்று ரெண்டுதரம் சொன்ன பிறகுதான் கதவைத் திறந்தாங்க கமலத்தம்மா. ‘நம்ப சம்பந்தந்தான்னு கோயில்லே நினைச்சேன். கண்ணும் மங்கிப் போச்சா, நிச்சய மாகத் தெரியவில்லை. சம்பந்தமா இருந்தா வராதா

என்று ஒரு நினைப்பு. எங்கே வரப் போவுது என்றும் ஒரு நினைப்பு' என்றாள் கமலம்.''

''நான் லட்டு என்று சொன்ன அந்தக் கமலம் எங்கே? இந்தக் கமலம் எங்கே? ஒரே மகனையும் இழந்துவிட்டு, விரும்பித் தேடிவந்த கணவனையும் இழந்துவிட்டு, தகப்பனையும் மிகவும் பரிதாபகரமாக இழந்துவிட்டு நின்ற இந்தக் கமலத்தை அறுபது வயது மதிக்கலாம் போல இருந்தது. எப்பவுமே கொஞ்சம் மிரண்ட சுபாவம்தான் அதுக்கு; இத்தனை பயங்கரமான கொலை, கொள்ளைச் சாவுக்கெல்லாம் பிறகு பயம் அவளுக்கு அதிகரித் திருந்ததே தவிரக் குறையவில்லை.''

''பிசாசுகள் நடமாடுகிற இந்த இடத்தை விட்டு வேறு ஊரிலே குடியேறிவிட்டால் தேவலை சம்பந்தம். மாயவரம், சீர்காழி, கும்பகோணம் என்று ஏதாவது டவுனாகப் பார்த்து எனக்கொரு வீடு வாங்கிக் கொடு. நான் இங்கிருந்து போயிடறேன். திருவாலூர் மட்டும் வேண்டாம்'' என்றாள் கமலம்.

'திப்பிலியார் கெட்ட வழிகளில் சம்பாதித்த பணத்தில் ஒரு லக்ஷ ரூபாய்க்கும் அதிகமாகவே அவளிடம் பணமாகவும் நகைகளாகவும் இருந்தது. அது தவிர திப்பிலியாபுரத்தில் வீடு வாசல் தோப்புத் துரவு வயல் வெளிகள் ரைஸ்மில் எல்லாம் இருந்தன. அதெல்லாம் ஒரு லக்ஷம் பெறும். ஒண்டிக் கட்டை. கவலையில்லாமல் உயிருள்ள வரைக்கும் இருந்துவிட்டு சொத்தை யெல்லாம் ஏதாவது ஒரு கோயிலுக்கு எழுதிவைத்து விட்டுப் போகலாம்.'

''பிசாசு நடமாடறதா? ஏது இங்கே பிசாசு?'' என்றேன் நான்.

கமலம் சொன்னாள்: ''ஒரு நாலைந்து நாளாகவே கொல்லைத் தலைமாட்டிலிருக்கும் மரத்தில் ஒரு பிசாசு நடமாடுகிறது. தினமும் நள்ளிரவில் கையில் ஒரு சிகப்பு விளக்குடன் காட்சி யளிக்கிறது அது. 'நான் தான் ஆத்மானுபவ சாமியாரின் ஆவி. எங்கே அந்த இராசகோபாலன் – கொண்டுவா அந்த இராச கோபாலனை' என்று ஐந்து தரம் கூவிவிட்டுப் போய் விடுகிறது'' என்றாள்.

அதைக் கேட்டதும்தான் கோயிலில் கண்ட பஞ்சநதத்தையும் இந்த ஆத்மானுபவச் சாமியின் பிசாசையும் முடிச்சுப்போட்டு முடிவு கண்டேன் நான். ஆகவேதான் கோயில் பிரகாரத்தில் அவர் தானாகவே வந்து போலீஸிலிருந்து ரிடையராகி விட்ட தாகவும், க்ஷேத்திராடனம் செய்வதாகவும் அளந்த போது 'போதும் ஐயா! ஆத்மானுபவ சாமியின் ஆவியே, சிவப்பு லைட் எங்கே?' என்று கேட்டே விட்டேன்.

“பேஷ் ஆத்மாநுபவசாமியின் ஆவி என்ன பதில் சொல்லிற்று?” என்றேன்.

“ஒரு நிமிஷத்தில் சமாளித்துக் கொண்டுவிட்டான் அவன், ‘சம்பந்தம்! நீ எப்பவுமே கெட்டிக்காரனப்பா. நீ மட்டும் போலீஸ் இலாகாவில் சேர்ந்திருந்தால்...?’ என்றான்.”

“அந்த இராசகோபாலனுக்கு நேர்ந்த கதி எனக்கும் நேர்ந் திருக்கும்!” என்று இலக்கணமாகச் சொன்னேன்.

“ராஜகோபாலனுக்கு அப்படி என்னதான் நேர்ந்தது?” என்றார் பஞ்சநதம்.

“அதைக் கண்டு பிடிக்கத்தானே உமக்குச் சம்பளம் கொடுக்கிறார்கள் காருண்ய கவர்மெண்டார், கண்டுபிடியுமே!” என்றேன் .

“முக்கால் வாசியும் கண்டு பிடித்துவிட்டேன்” என்றார் பஞ்சநதம் .

“எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவர் சொன்னது உண்மையாகவும் இருக்கலாம். ஆனால் அதைக் காட்டிக் கொள்ளாமல் ‘இன்னும் கால்வாசிக் கிணற்றையும் எப்போது தாண்டப் போகிறீர்?’ என்றேன்.”

“ஹா ஹா என்று சிரித்தார் பஞ்சநதம். ‘அது என் ரகசியம்’ என்றார்.”

“எந்த மாதிரியான ரகசியத்துக்கும் இப்போது பணந் தருகிற கர்ண மகாராஜாக்கள் யாரும் இல்லை” என்றேன்.

“நீ என்ன சம்பந்தம் சொல்கிறாய்? புரியும்படியாகச் சொல்” என்றார் போலீஸ் புலி.

“என்னைக் கெட்டிக்காரன் என்று சொல்லி ஒரு தடவை என்னிடம் ஒரு ஆயிரம் ரூபாய் திப்பிலியாருடைய பணத்தைப் பெற்றுக்கொண்டு, வர இருந்த போலீஸ் சோதனையை இருபத்தி நாலு மணி நேரம் தள்ளிப்போட்டு எங்களுக்குத் தப்ப அவகாசம் தந்தீர் இல்லையா?” என்றேன்.

“தந்தேன், பணம் பெற்றுக்கொண்டேன் என்று சொல்கிறாய். நான் எதுவுமே சொல்லவில்லை.”

“அது சரி. நான் கெட்டிக்காரன் என்பதைச் சொல்லத்தான் அதைச் சொன்னேன். அந்தக் காரியத்தைச் சாதிக்க என்னிடம் திப்பிலியார் இரண்டாயிரம் ரூபாய் தந்திருந்தார். அந்த பேரத்தில் நான் என் எசமானருக்கு ஒரு ஆயிரம் ரூபாய் மிச்சம் செய்து தந்தேன்” என்றேன்.

“அவருக்கு மிச்சம் செய்து தந்தாயா? நீ எடுத்துக் கொண்டாயா?” என்றார் பஞ்சநதம்.

‘‘நான் போலீஸ்காரனல்ல’’ என்று கம்பீரமாக நிமிர்ந்து பதிலளித்தேன்.

‘‘பாக்கி ஆயிரத்தையும் இன்று தந்துவிடப் போகிறாயா?’’ என்று கேட்டார் பஞ்சநதம்.

‘‘அப்போ ஒரு ஆயிரம் வாங்கினதாக ஒத்துக் கொள்கிறீரா?’’

‘‘அது எதற்கு? இப்ப ஆயிரம் கிடைத்தால்...’’

‘‘அப்போ லாபமடைந்த ஆண்பிள்ளைகளைப் பயமுறுத்திப் பணம் பறித்தீர். இப்போது பாவம் தனியாக விடப்பட்ட பெண்பிள்ளைகளைப் பிசாசு என்று பயமுறுத்திப் பணம் பண்ணப் பார்க்கிறீரா? – அதற்கு நான் உடந்தையாக இருக்க மாட்டேன். பாவம்! அந்த அம்மாவுக்கு ஆத்மானுபவ ஸ்வாமியையும் தெரியாது. உங்க இலாகா இராஜகோபாலனையும் தெரியாது’’ என்றேன்.

‘‘நிஜமாகவேயா?’’

‘‘நான் சொன்னால் நீர் நம்பிவிடுவீரா?’’

‘‘ஐந்து இரவுகள் தூக்கம் விழித்தபின் அப்படித் தான் எனக்கும் தோன்றியது. வேறு யுக்திகளைக் கையாண்டு பார்த்தாக வேண்டியதுதான்’’ என்றார் பஞ்சநதம்.

‘‘என்ன யுக்தியைக் கையாளப் போகிறீர்?’’

‘‘உன்னை அரெஸ்டு செய்து ஆத்மானுபவ ஸ்வாமிகளைப் பற்றி விசாரிக்கலாம் என்று பார்க்கிறேன்’’ என்றார்.

‘‘அரெஸ்டே செய்ய வேண்டாம். எனக்குத் தெரிந்ததை எல்லாம் நானாகவே கால்மணியில் சொல்லி விடுகிறேன் போதுமா?’’ என்று அவரிடம் ஆத்மானுபவ ஸ்வாமிகள் என்று கொள்ளிடக் கரையில் திடுதிப்பென்று ஆசிரமத்துடன் உருவாகிய இராஜகோபாலன் பற்றி எனக்குத் தெரிந்ததையெல்லாம் சொன்னேன். அதை உங்களுக்கும் இப்போது சொல்லிவிடுகிறேன் என்றான் சம்பந்தம்.

# அத்தியாயம் 27

“நம்ப ஊரில் வேறு எப்படி நியாயமான வழிகளி லெல்லாம் பிழைக்க முடிகிறதோ இல்லையோ – சாமியாராகப் பிழைப்பது என்பது எல்லோருக்குமே எளிதில் கைவரக் கூடிய காரியம். ஊருக்கிரண்டு ஸ்வாமிகள் சித்தர்கள் என்கிற கணக்கில் நம்மிடையே பலர் இருந்து வருகிறார்கள் – அவர்கள் சிலருடைய குணக்கேடுகள் நேரடியாகத் தெரிந்திருந்தாலும் கூடப் பலர் அவர்களைப் பற்றி நமக்கென்ன என்று ஒதுங்கிவிடுவார்கள் – அல்லது நம்பிக் கெடுவார்கள் – அல்லது நம்புவது போலப் பாசாங்கு செய்து சுய லாபம் அடைய முயலுவார்கள். ஒரு சித்தர் ஒரே சமயத்தில் பத்து இடங்களில் தன் பக்தர்களுக்குக் காட்சியளிப்பார். ஒரு சித்தர் ஆகாயத்தில் கை நீட்டி, நீட்டிய கையால் ஏதோ பணங்காசு மரத்தில் பறித்து, பத்து ரூபாய் நோட்டும், நூறு ரூபாய் நோட்டுமாக எடுத்துப் போடுவார். ஒருவர் ஒரு மண் பானைக் குள்ளே கையைவிட்டு எடுப்பார் – கையிலே தங்கமும் வெள்ளியுமாக நகைகளும், காசுகளும் இருக்கும் – அதை அப்படியே பிடிபிடியாக பக்தர்களுக்கு – அதுவும் வெள்ளிக்கிழமை யன்று – தந்துவிடுவார்.

ஒருவர் பாம்பாகவே தன்னைத் தேடி வருகிறவர்களுடைய சென்ற காலம், நிகழ்காலம், வருங்காலம் எல்லாவற்றையும் சொல்வார் – தமிழ்ப்பாட்டு இரண்டாயிரம் வருஷமாகப் பத மிட்டு எதைச் சொன்னாலும் அது பாட்டாக உருவெடுக்கக் கூடிய நிலைமையை எட்டிவிட்டது. மற்றதெல்லாம் எப்படிப் போனாலும் இந்தப் பாட்டுத்தான் முக்கியம். அது கொள்ளிடக் கரையில் திடுதிப்பென்று ஆசிரமம் அமைத்துக் கொண்டு குடியேறிய ஆத்மானுபவானந்த சாமியாருக்கு நன்றாகக் கை வந்திருந்தது.”

“ஆத்மானந்த ஸ்வாமிகளின் சிஷ்யர்கள் என்று சொல்லிக் கொண்டு இரண்டுபேர் முன்னதாக வந்து மண்ணால் அப்பிச் சுவர்கள் எழுப்பி, தென்னங் கீத்துகளை மூங்கில் படல்கள் மேல் வேய்ந்து கூரையை யேற்றுகிற போதே, அவர்களை வேஷம் போட முயலுகிற போலீஸ் ஜவான்கள் என்று நான் கண்டு கொண்டுவிட்டேன். அவர்களில் ஒருவன் திருவாலூரிலே இருந்தவன். அவனுக்கு என்னைத் தெரியுமோ தெரியாதோ – எனக்கு அவனை நன்றாகத் தெரியும். அவன் தன் குருநாதனைப் பற்றிப் பேசியதையெல்லாம் கவனித்து வைத்துக் கொண்டேன்.”

“அவன் சொன்ன விவரம் இதுதான். ‘ஆத்மானுபவானந்த ஸ்வாமிகள் நம் ஊர்க்காரர்கள். ஆனால் ஹிமாலய மலையின் சரிவுகளிலே காற்றையும்

நீரையும் அருந்திக்கொண்டு பதினெட்டு ஆண்டுகளுக்கும் அதிகமாகத் தவம் இருந்தார். ஒரு வங்காள மகாராஜ ஸ்வாமி ஒருவர். அவர் பெயரையும் சொன்னான் – நித்தியானுபவானந்த ஸ்வாமிகள், இவரை ஆட்கொண்டு தனக்குத் தெரிந்ததை எல்லாம் இவருக்கு உபதேசித்தார். அவர் தான் இவரைக் கொள்ளிடக் கரையில் ஆசிரமம் அமைத்துக் கொண்டு லோக க்ஷேமார்த்தம் குடியேறச் சொன்னது. பதினெட்டுச் சித்துகளும் விளையாடுபவர் ஆத்மானுபவானந்த ஸ்வாமிகள். தங்கம் பண்ணுவார். பரகாயப் பிரவேசம் செய்வார். ககன மார்க்கமாகப் பறந்து செல்வார். ஒரே சமயத்தில் பல இடங்களில் இருப்பார். நினைத்ததை நினைத்த படியே செய்வார். கைவிரலை நீட்டினாரானால், விரல் நுனியிலே மத்தாப்பு மாதிரி தீ ஜ்வலிக்கும். எந்த ஆளையும் தன்னிஷ்டப்படி எதையும் செய்ய வசீகரித்து விடுவார். எந்த வியாதியும் தீர மூலிகை தருவார். செத்தவரை எழுப்பிவிடுவார். இருப்பவரை உடனடியாகச் சாக அடிப்பார். நீரில் நடப்பார். அந்தரத்தில் படுத்து உறங்குவார். கல் மண் கண்ணாடி எல்லாவற்றையும் தின்று ஜெரித்துவிடுவார். இத்தனைக்கும் மேலே அவர் ஒரு புலிக்குட்டி வளர்த்தார்' என்று சிஷ்யன் சொன்னதன் பிறகுதான் அங்கு வரப்போகிற சித்தர் யார் என்பது எனக்குத் தெரிய வந்தது.''

''போலீஸ் இலாகாவிலே புலிக்குட்டி என்கிற பெயர் அச்சமயம் சற்றுப் பிரசித்தமாக விளங்கியது. கேஸ் சற்றுச் சிக்கலாகப் போனதும் புலிக் குட்டியை அனுப்பிப் போலீஸ் இலாகா துப்பறியத் தொடங்கி விடும் என்று எங்கள் பணத்தை ஏராளமாகப் பெற்றுக் கொண்டிருந்த அந்த பரமார்த்த அய்யன் திப்பிலியாரிடம் தெரிவித்திருந்தான். அதற்குப் பிறகு தன்னால் எதுவும் செய்ய இயலாது – மேலதிகாரிகள் நேரே கவனிக்கத் தொடங்கி விடுவார்கள் – என்று தெரிவித்திருந்தான். இதை மனத்தில் வைத்துக்கொண்டு அன்றே நான் விஷயத்தைத் திப்பிலி யாரிடம் தெரிவித்தேன். அன்றே பரமார்த்த அய்யனிடமிருந்தும் தகவல் வந்தது. புலிக்குட்டி கேஸைக் கவனிக்கத் தொடங்கி விட்டது என்றும், எப்படி எங்கிருந்து என்று தனக்குத் தெரியாது என்றும், ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், பணம் கொடுக்க வேண்டியதாக இருந்தாலும் தன்னை நேரில் சந்திக்க வேண்டாம் என்றும் அய்யன் உஷார்ப் படுத்தியிருந்தான்.''

''எனக்கு ஜோசியம், சித்து விளையாடுவது என்பதி லெல்லாம் கொஞ்சம் பைத்தியம் உண்டு. அதிலே ஏதோ கொஞ்சம் படித்து வைத்திருக்கிறேன். என் பாட்டனார் அவர் காலத்தில் நாற்பது ஐம்பதினாயிரம் ரூபாய் சொத்தைத் தங்கம் பண்ணுகிறேன் என்று வந்த கருணைக் கிழங்கு யோகியார் என்பவரிடம் பறி கொடுத்தார். எங்கள் வீட்டிலே நொச்சி இலையும் ரஸ வித்தைகளுமாகத் தடபுடல் படுகிற போதெல்லம் நான் பத்துப்

பன்னிரெண்டு வயதுச் சின்னப் பையன். கருணைக் கிழங்கு யோகியார் பக்கத்திலேயே இருந்து அவர் செய்வதை யெல்லாம் கவனித்துக் கேட்டு, மனப்பாடம் செய்திருக்கிறேன். அவரைப் பார்த்துப் பார்த்து, கேட்டுக் கேட்டு எனக்கும் கவன சக்தி வந்து விட்டது – தங்கம் செய்கிற சக்தி வந்திருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். அது அவருக்கும் வர வில்லை. பாட்டுப் பாடுகிற சக்தி மட்டுமே எனக்கும் அவருக்கும் வந்தது – தமிழ்க் கவிதை என்கிற தங்கம் கைவந்த பிறகு வேறு என்ன வேண்டும் என்று சித்தர்களின் தெய்வம் – அதற்குப் பல பெயர்கள் உண்டு – எங்களைக் கைவிட்டு விட்டது.''

‘‘ஆகவே ஆத்மானுபவானந்த ஸ்வாமிகளின் வரவை நான் மிகவும் ஆசையுடன் எதிர்பார்த்திருந்தேன். முதலிலேயே ஒன்று சொல்லிவிட வேண்டும். அவருக்கு வேஷம் மிகவும் பொருந்தி யிருந்தது. நானே ஒரு நாள் பூராவும் இது வேஷமா, அயன் சித்தர் தானா என்று தயக்கமடைந்து குழம்பிவிட்டேன். அவரைக் கண்டவுடனேயே எனக்குப் பயம் பக்தியெல்லாம் தானாகவே உண்டாகிவிட்டது. வந்து ஒரு பக்ஷம் மோனத் தவம் இருந்தார் அவர். அதற்குப் பிறகுதான் மோனத்தைக் கலைத்தார் – சுபயோக சுப கரண லக்கினத்தில், அதை உத்தேசித்து முதல் சிஷ்யன் ஒரு பத்துப் பன்னிரெண்டு பக்தர்களை எப்படியோ தயார் செய்து அங்கு கொணர்ந்து சேர்த்திருந்தான். அந்தப் பக்தர்களைக் கண்டால்தான் எனக்குப் பரிதாபமாக இருந்தது.''

# அத்தியாயம் 28

“திப்பிலியாபுரத்துக்கும், கொள்ளிடக்கரையில் ஆத்மானுபவானந்த ஸ்வாமிகளின் ஆசிரமம் அமைந் திருந்த இடத்துக்கும் இடையே இரண்டே மைல் தூரம்தான் இருந்தது. சுற்று வட்டாரத்துக் கிராமங்கள், சிறு நகர்கள் எல்லாவற்றிலும் ஸ்வாமிகளுடைய புகழ் – இந்த மாதிரி ஸ்வாமிகளுடைய புகழ் எப்படியோ பரவுகிறமாதிரி – வெகு துரிதமாகவே பரவிவிட்டது. அவர் வந்து ஆசிரமத்தில் குடியேறி ஒரு மாதங்கூட ஆகியிராது. அதற்குள்ளாகவே அவர் சக்தியின் மணம் எல்லோர் நாசியையும் துளைத்து விட்டது. அவர் சக்திகளின் புகழ் எல்லோருடைய காதுகளிலும் விழுந்துவிட்டது.”

“இந்த நிலையில் தெய்வ பக்தியுள்ள திப்பிலியார் மட்டும் அவரைப் போய் பார்க்காமல் இருக்கலாமா? எனக்கும் திப்பிலியாருக்கும் யார் என்ன என்று அந்த ஸ்வாமிகளைப் பற்றித் தெரியும். கமலத்துக்குத் தெரியாதே. அவளும் எங்களுடன் வருவேன் என்றாள். அந்தச் சமயம் கொலைகள் சரமாரியாக விழாத சமயம். ராஜவேலுதான் எங்கள் ஆட்களில் ஒருவனைக்

கொலை செய்திருந்தான்; பதிலுக்கு நாங்கள் அவனுடைய ஆட்களில் ஒருவனைக் கொலை செய்து முடிக்க இன்னும் ஒரு வாரம் இருந்தது – திட்டப்படி. அப்போது கமலம் கவலைக் குள்ளாகி அவஸ்தைப்படத் தொடங்கியிருக்கவில்லை. அவளுடைய ஒரே மகன் நகரில் கான்வெண்டில் படித்துக் கொண்டிருந்தான். நல்ல படிப்புக்காரன். துடியான பிள்ளை.”

“ஏராளமான இனாம்களை எடுத்துக்கொண்டுதான் திப்பிலி யார் தம்பதிகள் கிளம்பினார்கள். விபூதி மடித்து வைத்திருந்த கடிதத்தில் நான் ஆத்மானுபவானந்த ஸ்வாமிகளுக்கு ஒரு திருமுகமே வைத்திருந்தேன். புலிக்குட்டி சஹிதம் அவர் தன் இலாகாத் தலைமைக் காரியாலயத்துக்குத் திரும்பிவிடுவது நல்லது என்றும், அவர் இங்கிருப்பதால் அவருக்கோ மற்றவர் களுக்கோ நன்மை எதுவும் விளையாது என்றும், தெளிவாகவே எழுதி அந்தக் கடிதத்திலேயே விபூதியை மடித்துத் தட்டில் வைத்திருந்தேன். இது திப்பிலியாருக்குத் தெரியாது.”

“ஆனால் ஸ்வாமிகள் எங்களை வரவேற்று இரண்டொரு நிமிஷம் பேசிக்கொண்டிருந்தார். எங்களுக்கு அவர் ஜோசியமும் சொல்லவில்லை – சித்து விளையாடியும் காட்டவில்லை. சாதாரண மாக உலக நடவடிக்கைகள், யுத்த முடிவுகாலச் செய்திகள், விலைவாசிகள் உயர்வு,

மில் வருமானம் என்று பேச ஆரம் பித்தவர் சட்டென்று திப்பிலியாரைப் பார்த்து, 'ஏனையா இப்படி விபூதிப் பொட்டலத்துக் கடிதாசியிலே விபரீதமாக எழுதி அனுப்பியிருக்கிறீர்?' என்று கேட்டார். ஒன்றுமே யறியாத திப்பிலியாரின் முகத்திலிருந்து அவர் செய்யவில்லை அதை என்பது ஸ்வாமிகளுக்குத் தெளிவாகியிருக்க வேண்டும்.''

''எனக்கு உண்மையிலேயே ஸ்வாமிகள் சித்தர் தான் என்று தோன்றிவிட்டது. விபூதிப் பொட்டலம் இன்னும் பிரிக்கா மலேயே கமலம் கொண்டு வந்த தட்டிலே, ஸ்வாமிகள் முன் தான் வைக்கப்பட்டிருந்தது. எப்படியோ அந்தக் கடிதத்தில் ஏதோ எழுதியிருக்கிறது என்று கண்டுவிட்டாரே புலிக்குட்டி. அதே சமயம் அவருடைய வளர்ப்புப் புலிக்குட்டியும் எங்கள் மூவரையும் ஒரு பார்வை பார்த்துக் கொண்டு சாவதானமாக நடந்துவந்து தன் எஜமானன் காலடியில் போய்ப் படுத்துக் கொண்டது. என்னாலோ கமலத்தாலோ, திப்பிலியாராலோ அந்தப் புலிக்குட்டியை விட்டுக் கண்களை எடுக்கவே முடிய வில்லை.''

''அபசாரம்! அபசாரம்!'' என்றார் திப்பிலியார் பணிவுடன். தங்களுக்கென்று யாதொரு கடிதமும் நான் வைக்கவில்லையே என்றார்.

''ஸ்வாமிகள் அவருக்கு நேரடியாக ஒரு பதிலும் தரவில்லை. தன் இரு சிஷ்யர்களில் ஒருவனைக் கூப்பிட்டு, விபூதிப் பொட்டலத்தைப் பிரித்து விபூதியைத் தட்டில் கொட்டிவிட்டு அதில் எழுதியிருந்ததை வாசிக்கச் சொன்னார். சிஷ்யப் பிள்ளைக்குத் தமிழ் அவ்வளவாக வராதுபோலும். அவன் தட்டுத் தடுமாறிக் கொண்டு வாசித்தான். 'புலிக்குட்டி சஹிதம் நீ உன் இலாகாத் தலைமைக் காரியாலயத்துக்குத் திரும்பிவிடுவதுதான் நல்லது. நீ இங்கிருப்பதால் உனக்கோ மற்றவர்களுக்கோ நன்மை எதுவும் விளையாது' என்று படித்தான்.''

''ஏதோ நாவலில் வருகிற வார்த்தை மாதிரி இருக்கிறது'' என்று வியாக்கியானம் தந்தேன்.

''தெரிகிறது!'' என்ற ஸ்வாமிகள் அதற்குப் பிறகு அது பற்றித் திப்பிலியாருடன் எதுவும் பேசவில்லை. திப்பிலியார் தனக் கொன்றும் அது பற்றித் தெரியாது என்று சொன்னதை அவர் ஏற்றுக்கொண்டுவிட்டது போலத்தான் இருந்தது. என்பக்கம் அவர் திரும்பவேயில்லை. கமலத்தின் பக்தியும் சிரத்தையும் உண்மையானதாகத்தான் யாருக்கும் பட்டிருக்கும். அதில் சந்தேகத்துக்கிடமேயில்லை.

# அத்தியாயம் 29

“தன் மனைவியை வீட்டில் விட்டுவிட்டு என்னைத் தனியாகத் தன் அறைக்குள் அழைத்துப் போய், ‘நீ இப்படி அவசரப்பட்டு எதுவும் சொல்லியிருக்கக் கூடாது’ என்றார்.”

“விஷயத்தை முற்ற விட்டுவிட்டுப் பிறகு அவர் உயிருக்கே ஆபத்து வந்துவிடப் போகிறதே என்கிற நல்லெண்ணத்தில் தான் சொன்னேன்” என்றேன்.

“அவனைப் பற்றி உனக்குக் கவலை இருந்தது. நமக்கு அவன் விஷயம் தெரிந்துவிட்டது என்று அவனுக்குத் தெரிந்துவிடுமே – அதனால் நமக்கு எதுவும் தீங்கு நேரிடக் கூடுமே என்று நீ சிந்திக்க வில்லை” என்றார் திப்பிலியார்.’

“நமக்கு அவனால் ஒரு தீங்கும் நேர்ந்துவிட முடியாது. அவன் எதையும் கண்டுகொண்டுவிட முடியாது. கண்டுகொள்ள இங்கு ஒன்றும் இல்லை என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்.”

“உண்மைதான். ஆனாலும் எங்கேயாவது ஒரு பலஹீனம் இருக்கும். ஏமாந்து விடமாட்டோம் என்று நாம் எண்ணி இறுமாப்பு அடைந்திருக்கும் தருணமே நாம் ஏமாந்தும் விடுவோம்” என்றார்.

“உண்மைதானுங்க! யோசிக்காமல்தான் நான் செய்து விட்டேன். எப்படி அதற்குப் பிராயச் சித்தம் செய்யச் சொல் கிறீர்களோ செய்து விடுகிறேன்” என்றேன். திப்பிலியாருடைய சாமர்த்தியத்தில் பத்தில் ஒரு பங்குகூட எனக்கில்லை என்பது எனக்கு அப்போதுதான் விளங்கிற்று. திப்பிலியார் ஒரு சாம் ராஜ்யத்துக்கே தலைவராக இருக்க வேண்டியவர்; கமலம் அவருடைய ராணியாக இருக்கத்தக்கவள் என்று தோன்றிற்று எனக்கு. அவர்களிடம் எனக்குப் பக்தி அதிகரிப்பது போல இருந்தது. பரவசமாக நின்றேன்.

என் பரவசத்தில் குறுக்கிட்டார் திப்பிலியார். “உடனடியாகப் புலிக்குட்டியைக் கவனித்தாக வேண்டும் நான். ஆனால் அதை நான் முழுவதும் கவனித்துக்கொண்டு விடுகிறேன். நீ ஆசிரமத்தின் பக்கம் கூடப் போகாதே. ஆமாம், ஜாக்கிரதை” என்றார்.

“அதற்குப் பிறகு நான் ஆத்மானுபவானந்தரின் ஆசிரமத்தின் பக்கம்கூடப் போகவில்லை. அவருடைய அத்தியந்த சிஷ்யன் இரண்டொரு நாள் கழித்து என்னை, குருநாதர் பார்க்க விரும்புகிறார் என்று அழைத்தான். “விரும்பட்டும் – நான் இப்போது சென்னை போய்க் கொண்டிருக்கிறேன்.

போய்விட்டு ஒருவாரத்தில் வந்துவிடுவேன். வந்து அவசியம் கண்டு ஸேவித்துக் கொள்கிறேன்'' என்று சொன்னேன்.

''உண்மையில் கமலம், நாகராஜு இருவரையும் அழைத்துக் கொண்டு நான் அன்று மாலையே காரில் பட்டணத்துக்குக் கிளம்பிவிட்டேன். பட்டணத்திலே புரசைவாக்கத்திலே யசமான் புதுசாக ஒரு பங்களா வாங்கியிருந்தார். கமலத்துக்கும், நாக ராஜுவுக்கும் பட்டணம் பார்க்க வேண்டும் என்று ஆசை. அந்தச் சமயம் பார்த்து நானும் அவர்களுடன் இருப்பது நல்லது என்று தீர்மானித்து என்னையும் அவர்களுடன் அனுப்பிவிட்டார் திப்பிலியார்.''

''அதாவது அவர்கள் ஏற்கெனவே போவதாக ஏற்பாடாகி யிருந்தது. இந்த சாமியார் விஷயம் வந்ததால் நீயும் அவர்களுடன் பட்டணம் போய்விடுவது நல்லது என்று ஏற்பாடு செய்தார் என்கிறாயா?'' என்று கேட்டேன் நான்.

''ஆமாம். முதலில் அவர்கள் பட்டணத்துக்கு ரெயிலில் போவதாக இருந்தார்கள். ராமுவையரின் இன்னொரு மகன் – மணி அய்யன் என்று பெயர் அவனுக்கு – சர்க்காரில் ஏதோ பெரிய உத்தியோகத்தில் இருந்தார். அவர் மேற்பார்வையில் தனி பங்களாவில் இருப்பது என்று ஏற்பாடாகியிருந்தது. பின்னர் காரை ஓட்டிக்கொண்டு நானும் அவர்களுக்குத் துணையாகப் போய் பட்டணத்தில் இருப்பது என்று ஏற்பாடாயிற்று. புலிக் குட்டிக்கு நல்லது செய்யத்தான் நான் உண்மையில் எண்ணினேன். அது அவருடைய உயிருக்கே ஆபத்தாக முடிந்துவிடும் என்று நான் எண்ணவில்லை.''

''அந்தத் தடவை திப்பிலியாரோ அவருடைய ஆட்களோ ஆத்மானுபவானந்த ஸ்வாமிகள் என்கிற இராஜகோபால் என்கிற ரகசியப் போலீஸ் உத்தியோகஸ்தனைத் தீர்த்து விட்டார்கள் என்கிறாயா?'' என்று கேட்டேன்.

''அதெல்லாம் எனக்கு எப்படிங்க தெரியும்? நான் திரும்பி வந்தபோது கொள்ளிடக் கரையில் நிர்மானுஷ்யமான ஆசிரமம் மட்டும்தான் இருந்தது. குருநாதரையும் காணவில்லை, சிஷ்யர் களையும் காணவில்லை. அவ்வளவுதான் எனக்குத் தெரியும். குருநாதர் ககன மார்க்கமாக ஹிமாலயத்துக்குப் போயிருக்கலாம். சித்த புருஷராகிய அவரைப்பற்றி யார் என்ன சொல்ல முடியும்? தவிரவும் அவர் கடைசித் தடவையாகக் காட்சி அளித்து நகரத்துக் கிட்டுவுடன் பேசிக்கொண்டிருந்த தினத்தன்று முதல் மூன்று நாட்கள் திப்பிலியார் என்னுடனும் கமலத்துடனும் அவர் மகனுடனும் பட்டணத்திலிருந்தார். சினிமா, கூத்து, செத்த காலேஜ்,

உயிர்க் காலேஜ், புழலேரி என்று காரைப் போட்டுக் கொண்டு எங்கெல்லாமோ உல்லாஸமாகப் போய் வந்து கொண்டிருந்தோம். திருப்பதி, காளஹஸ்தி, திருத்தணி, திருவாலங்காடு, எல்லாம்கூடப் போய்வந்தோம், வண்டி யிலேயே.''

''எப்படித்தான் மறைந்தார் ஸ்வாமிகள்?'' என்று கேட்டேன்.

''அதே கேள்வியைத்தான் பஞ்சநதமும் கதையை முடித்த பின் என்னைக் கேட்டார். 'சித்த புருஷர்களின் நடவடிக் கைகளைப் பற்றி நாம் கேவலம் மனிதர்கள் எப்படிங்க கணக்கு வைத்துக் கொள்ள இயலும்?' என்று பதில் கேள்வி கேட்டேன். 'உன்னை அரெஸ்டு செய்து விசாரிக்கிறேன்' என்றார் பஞ்சநதம். 'நான் தான் பட்டணத்திலிருந்தேனே!' என்று பதில் அளித்தேன். கோபமாகப் போய்விட்டார் அவர் என்று தன் கதையில் அந்தப் பகுதியை முடித்தான் சம்பந்தம்.

# அத்தியாயம் 30

“தொடர் கதை எழுத்தாளனாக இருக்க வேண்டும் அப்பா சம்பந்தம் நீ” என்றேன்.

“அப்படின்னா என்னாங்க? புரியலீங்களே” என்றான் சம்பந்தம்.

“பெரிய பெரிய பத்திரிகைகளிலெல்லாம் துண்டு துண்டாகப் பல நீளக் கதைகளை வெளியிடுகிறார்கள். கதை எப்படியிருக்கும் என்றால் விறு விறுப்பாக பலதரப்பட்ட சுவாரசியமான சம்பவங்களைக் கொண்டதாக இருக்கும். பாதி சம்பவத்திலே நிறுத்திக் கொண்டு ‘அடுத்த வாரம் பார்க்கவும்’ என்று போட்டு விடுவார்கள். அடுத்த வாரப் பத்திரிகை விற்பனையா வதற்கு இது ஒரு யுக்தி. அந்த மாதிரி ‘டக் டக்’ கென்று சுவாரசியமான பகுதிகளிலெல்லாம் கொணர்ந்து நிறுத்தி விடுகிறாயே நீ!” என்றேன் நான்.

“எனக்கென்னங்க தெரியும் இதெல்லாம் பத்தி, பத்திரிகைகளிலே கதை எழுதினா எத்தனேங்க கொடுப்பாங்க?” என்றான் சம்பந்தம்.

“சிறு கதையா எழுதினா பத்து இருபது ஐம்பது எழுபத்தைந்து, அதிகம் போனால் நூற்றியொன்று தருவாங்க” என்றேன்.

“தொடர் கதைன்னீங்களே – அது எழுதினதா?”

“ஆயிரம் இரண்டாயிரம் மூவாயிரம் கிடைக்கும்.”

“பெரிய புள்ளீங்க ஒரு ஆள் கொலைக்குக் கொடுக்கிற காசுங்க அது” என்றான் சம்பந்தம்.

“எனக்கு அந்த உலகத்தைப் பற்றி அனுபவம் போதாது” என்றேன்.

“எந்த உலகத்தைப் பத்தி?”

“கொலை செய்கிற உலகம் பற்றிய அனுபவமும் போதாது; தொடர் கதை எழுதற உலகம் பற்றியும் அனுபவம் போதாது. மேலே நீ கதையைச் சொல்லு. கடைசிக் கப் காபி ஒன்று, இரண்டு பேருக்குமா வர வழைக்கிறேன். ஆளுக்குப் பாதியாகச் சாப்பிடுவோம்” என்றேன்.

ஒரு கப் காபியும் ஒரு காலி டம்ளரும் கொண்டு வரச் சொல்லி மணியிடம் ஆர்டர் தந்தேன்.

காபி வருவதற்கு முன்னதாகவே சம்பந்தம் சொன்னான்: "எத்தனையோ விஷயங்கள் சின்னதும் பெரிதும் மறந்து விட்டுதுங்க. நினைவிலிருப்ப தெல்லாம் முக்கியமே யல்லாத விஷயங்கள்தான்."

"ஏதாவது நினைவிலிருந்தால் போலீஸ்காரர்கள் வரவழைத்து விடுவார்களே என்று பயமா?"

"என் மனசிலே அந்தப் பயமே கிடையாதுங்க. நான் எது செய்திருந்தாலும் அதன் பாவமோ புண்ணியமோ அந்தத் திப்பிலியாரைச் சாரும் – என்னைச் சாராது. யசமான விசுவாசம் பிசக நான் எதுவும் செய்ததில்லைங்க. அவர் உத்தரவில்லாமல் எதுவும் செய்ததில்லைங்க. ஒன்றுதான் செய்துவிட்டு புலிக் குட்டிக்கு ஆபத்து விளைவித்து விட்டேன். அதற்குப் பிறகு நான் திப்பிலியார் விசையை முடுக்கினால்தான் நடப்பேன் – நிற்பேன் – உட்காருவேன் – பேசுவேன்."

அவன் உண்மையையேதான் சொன்னான் என்று அவன் குரல் எனக்கு அறிவுறுத்தியது. அதற்குள் காபியும் வரவே ருசிபார்த்துக் கொண்டே மேலும் சம்பந்தம் என்ன சொல்லுகிறான் என்று கவனிக்கத் தயார் ஆனேன்.

# அத்தியாயம் 31

“எத்தனையோ காரியங்கள், எனக்குத் தெரிந்தும் தெரியாமலும் நடந்தன. யார் யாரோ திப்பிலி யாருடைய உத்தரவுப்படி யார் யாரையோ கொலை செய்தார்கள் – அப்புறப்படுத்தினார்கள். நான் அதிலெல்லாம் சம்பந்தப்பட்டுக் கொள்ளவில்லை. பொதுவாக நடந்தது என்ன என்று தெரியும்; அவ்வளவுதான்.”

“பொதுவாக ராஜவேலுவும் திப்பிலியாரும் சண்டை போட்டுக் கொண்டு பிரிந்து போன பிறகு தான் யுத்தம் மும்முரமாக நடந்தது. இரண்டு தரப்பிலும் பணம் ஏராளமாகப் புரண்டது.”

“ராஜவேலுதான் இருந்த பணத்தையெல்லாம் குடியும் கூத்தியுமாகத் தீர்த்துவிட்டான் என்று சொன்னாயே – திப்பிலியாருக்குப் போட்டியாக எதுவும் செய்ய அவனுக்கு எப்படிப் பணம் கிடைத்தது?” என்று கேட்டேன்.

“அது ஒரு பெரிய கதை. அதையும் எனக்குத் தெரிந்த அளவில் சொல்லிவிடுகிறேன். திப்பிலியார் கொணர்ந்த புதுச்சேரி சரக்குகளை மார்க்கெட் பண்ண அவருக்கு உதவியவர் நகரத்து டாக்டர் ஒருவர் என்று சொன்னேனில்லையா?”

“ஆமாம். டாக்டர் சுந்தரம் என்பது அவர் பெயர். அவரையும் எனக்குத் தெரியும்.”

“இந்த ஊரில் உங்களுக்குத் தெரியாதவங்க யாரு? அந்த டாக்டர் சுந்தரத்திடம் திப்பிலியார் என்றுமே நேரில் போக்கு வரத்து வைத்துக்கொண்டது கிடையாது. டாக்டர் பரம்பரை யாகவே நல்ல சொத்துக்காரர். டாக்டர் பரம்பரையாகவே நல்ல சொத்துக்காரர். காண்டிராக்ட், வியாபாரம் என்று பலதுறை களிலுமாக ஈடுபட்டுப் பல லக்ஷங்கள் சேர்த்திருந்தார். டாக்டர் நல்ல கைராசிக்காரர் என்றும் பெயருண்டு அவருக்கு; நல்ல மெடிக்கல் பிராக்டிஸ். திப்பிலியாருடைய அழைப்பின் பேரில் ராஜவேலு இங்கு வந்து, புதுச்சேரிக் கள்ளக்கடத்தலில் ஈடுபட்ட பிறகு, அந்த டாக்டர் மூலமாக, வந்த சரக்குகளை வியா பாரத்துக்கு அனுப்பலாமே என்று யோசனை அவனுக்குத்தான் தோன்றிற்று. பணக்காரர் – முனிசிபல் கவுன்சிலர், சேர்மன் என்று கௌரதையாக, டாக்டராகவும் இருப்பவன் இதில் ஈடுபடுவானா என்று திப்பிலியாருக்குச் சந்தேகமாகத்தான் இருந்தது. ‘அவரை நான் சரிக்கட்டி விடுகிறேன்’ என்றான் ராஜவேலு.”

“எப்படிச் சரிக்கட்டினான்?” என்று கேட்டேன்.

“அது பின்னர்தான் எனக்குத் தெரியவந்தது. டாக்டர் சுந்தரத்தின் மனைவி ஒரு தினுசான பேர்வழி. படாடோபம், ஆடம்பரம் எல்லாம் மிகுந்தவள். நல்ல வயது மிடுக்கில் இருந்த ராஜவேலுக்கு அவளை வலை வீசிப் பிடிப்பதில் அதிகச் சிரமம் எதுவும் இருக்க வில்லை. ராஜவேலு எப்பவுமே ஸ்திரீ லோலன். பெண்களை வசியப்படுத்தும் சக்தி அவனுக்கு இயற்கையாகவே இருந்தது; டாக்டர் இருக்கிறபோதும் இல்லாத போதும் போய், டாக்டர் சுந்தரத்தின் சுந்தரியை – பெயர்ப் பொருத்தம் அவர்களுக் கிடையே இருந்தது – வலைவீசிப் பிடித்து மயக்கிவிட்டான். ஒரு சமயம் டாக்டர் சென்னைக்குப் போயிருந்தபோது மூன்று நாட்களும் ராஜவேலு பகிரங்கமாகவே அவளுடன் அவள் வீட்டில், அவள் புருஷன் போலவே இருந்தான் என்று ஊரார் சொன்னார்கள்.”

“டாக்டர் சுந்தரமும் ஸ்திரீ லோலர்தான். ஆகவே அவர் தன் மனைவிக்குப் பெட்டிப் பாம்பாக அடங்கியிருக்க வேண்டிய நிலைமை இருந்தது. தவிரவும் டாக்டருடைய பணத்தில் – ரொக்கத்தில் – பெரும் பகுதியை – சுந்தரி அம்மாள் சுயாதீனப் படுத்திக் கொண்டுவிட்டாள். டாக்டர் அவள் சொன்னபடி ஆடவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு டாக்டருக்குத் தெரிந்தே அவர் மனைவியும் ராஜவேலும் பழகுவது, காதலர்களாக இருப்பது என்று ஏற்பட்டுவிட்டது.”

# அத்தியாயம் 32

“உன் யசமானனும் ராஜவேலுவும் சண்டை யடித்துக்கொண்டு பிரிந்தவுடன் டாக்டர், தன் மனைவியின் நண்பன் என்பதற்காக ராஜவேலுவுடன் சேர்ந்து கொண்டாரா?” என்று விசாரித்தேன்.

“அதுதானில்லை. ராஜவேலுவால் திப்பிலியார் இல்லாமல் தனியாகப் புதுச்சேரி வியாபாரத்தை நடத்த முடியாது. அவனிடம் பசை கிடையாது என்பது டாக்டருக்கும் தெரியும். அவருக்குத் திப்பிலியாருடன் தொடர்ந்து சிநேகம் பூண்டிருப்பதுதான் லாபகர மானது. அவர் அப்படிச் செய்வதாகத்தான் உத்தேசித் திருந்தார். ஆனால் சுந்தரியம்மாள் ராஜவேலுவின் கட்சியில்தான் இருந்தாள். ஆரம்பத்தில் அவனுக்கு ஏராளமாக, ரகசியத்தில், தன் பணத்தைக் கொடுத்து உதவினாள். ராஜவேலும் தனக்குத் தெரிந்த அளவில் புதுச்சேரிச் சரக்கு வியாபாரத்தைச் சொல்ப அளவில் சுந்தரி அம்மாளின் பணத்தின் உதவியைக்கொண்டு தொடங்கினான். அந்த நிலைமையில் இந்த வியா பாரத்துக்கு உதவியது தன் பணம் தான் என்று தெரிந்தோ தெரியாமலோ, டாக்டர், திப்பிலியார் ராஜவேலு இருவரிடமுமே தொழில் நடத்தி லாபம் அடை யலாமே என்று எண்ணினார்.”

“அவர் மனைவிக்கு அது இஷ்டமில்லை. தன் கணவனிடம் ராஜவேலுவைத்தான் ஆதரிக்க வேண்டும் என்று சண்டை போட்டாள். பலிக்கவில்லை. தன் மனைவி இப்படி ஒரு மீசைக் கார ராஜவேலுவுக்கு அடிமைப்பட்டுக் கிடப்பது டாக்டருக்குப் பிடிக்காத விஷயமாக இருந்தது. இந்த நிலைமையை நீடிக்க விடக்கூடாது என்று ராஜவேலு ஒரு காரியம் செய்தான்.”

“என்ன?” என்றேன்.

“டாக்டர் சுந்தரத்துக்கு ஒரே ஒரு மகன். நடராஜன் என்று பெயர். அப்போது ஏழு வயது இருக்கும். அந்தப் பையனை சுந்தரியின் சம்மதத்துடன் தானோ என்னவோ ராஜவேலு எங்கேயோ அப்புறப்படுத்தி வைத்துவிட்டான். டாக்டர் தனக்கு உதவி செய்யாவிட்டால் பையனுடைய உடல் மட்டும்தான் அவருக்குக் கிடைக்கும், பையனைக் கொன்றுவிடுவேன் என்று பயமுறுத்தினான். இந்தப் பயமுறுத்தலுடன், ராஜவேலுவிடம் அவன் என்ன செய்வானோ என்று உண்மையிலேயே பயந்து விட்ட சுந்தரியின் பரிதாபமான ஓலங்களும் சேரவே, தனது ஒரே பையனைக் காப்பாற்ற, உயிருடன் திருப்பிப் பெற, ராஜவேலு சொல்வதை எல்லாம் செய்வதாக

அவர் வாக்களிக்க வேண்டிய தாக இருந்தது. வாக்களித்ததுடன் நிற்காமல், ராஜவேலு மேல் எவ்வித ஆக்ஷனும் எடுப்பதில்லை என்றும் எழுதித் தந்தார். அத்துடன் ராஜவேலுக்கு உடனடியாகத் தேவைப்பட்ட ரொக்கத் தையும் அதற்குப் பிறகு என்ன தேவைப்பட்டாலும் அதையும் தருவதாக ஏற்றுக்கொண்டார். இப்படியாக டாக்டர் சுந்தரத் தையும் அவர் மனைவி சுந்தரியையும் தனக்கு அடிமையாக்கிக் கொண்டுவிட்டான் ராஜவேலு. அதற்குப் பிறகு திப்பிலியாரிடம் இருந்ததைப் போல இரட்டைப் பங்கு ரொக்கம் அவனுக்கு இருந்தது என்று சொல்ல வேண்டும்.''

''டாக்டரையும் அவர் மனைவியையும் பற்றிப் பல தரப்பட்ட கதைகளை நான் கேட்டிருக்கிறேன். நீ சொல்வது அந்தக் கதைகளையெல்லாம் தூக்கியடிப்பதாக இருக்கிறது'' என்றேன் நான். ''டாக்டருடைய பையன் என்னவானான்?''

''அவனை உபயோகப்படுத்திக்கொண்டு ராஜவேலு அவனைத் தன் தகப்பனாரிடம் சேர்ப்பித்துவிட்டான்; அந்த அளவில் அவன் யோக்கியன்தான்'' என்றான் சம்பந்தம். ''தவிரவும் ராஜவேலுவுக்கு சுந்தரி அம்மாளின் தயவு – பணம் காசு தவிர மற்ற விதங்களிலும் தேவைதான். ஆகவே பிசகாக எதுவும் நடந்துவிடாமல் பார்த்துக் கொண்டுவிட்டான்.''

## அத்தியாயம் 33

சம்பந்தம் தன் கதையைத் தொடர்ந்து சொன்னான்: “டாக்டர் வீட்டு அம்மாளை நான் பல தடவைகள் தூரத்திலிருந்தே பார்த்திருக்கிறேன். ஒரே ஒரு தரம்தான் நெருங்கிப் பார்த்திருக்கிறேன். அந்தத் தடவை அந்த அம்மாள் என்னைக் கூப்பிட்டனுப் பினார்கள். ராஜவேலுவும் என் யசமானும் பிரிந்து மூன்று நான்கு வருஷங்களிருக்கும். திப்பிலியாருடைய வீட்டுக்கும் அவருடைய காருக்கும் நானே முழுக் காவலன் என்று ஏற்பட்ட பிறகு நடந்தது இது. நம்பகமான எங்கள் ஆள் ஒருவனிடம் கடிதம் கொடுத்தனுப்பினாள் அந்தச் சுந்தரி அம்மாள்.”

“அவுங்களுக்கு அப்போது வயது முப்பத்தைந் துக்கும் அதிகம் இருக்கும் என்றாலும், மிகவும் அழகாகத்தான் இருந்தாங்க. மிகவும் கம்பீரமான தோற்றம். ராணி மாதிரி இருந்தாங்க. அவங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் டாக்டர் மிகவும் நோஞ்சான்; கூனல் முதுகும் குறுகிய பார்வையும் கம்பீரமில்லாத வராகவும்தான் இருப்பார். ஆட்களை மேய்ப்பதில், அவர்களை அழைப்பதில் அம்மாளுக்கிருந்த சாமர்த்தியம் ரொம்ப ஆம்பிள்ளைகளுக்குக்கூட வராது.”

“வா அய்யா சம்பந்தம், உட்காரு அப்படி” என்று ஒரு நாற்காலியைக் காட்டினாங்க சுந்தர அம்மாள். ஏதேது, ரொம்பவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டே ஊஞ்சலில் உட்கார்ந்து லேசாக ஆடிக்கொண்டிருந்த அம்மாளை விட்டுக் கண்ணை எடுக்காமல் பார்த்துக்கொண்டே நின்றேன்.

“உங்கள் எதிர்க்கட்சிக்காரரான ராஜவேலுவின் கட்சியிலே இருக்கிற அம்மாள் கூப்பிடுறாங்க என்று தெரிந்தும் தைரியமாக வந்துவிட்டியே சம்பந்தம்!” என்று கேலி செய்கிற மாதிரி சொன்னாங்க.

“என் யசமான் கிட்டே சேவகம் செய்கிறவன் நான். எனக்குக் கட்சி எதிர்க்கட்சி யெல்லாம் ஏதுங்க? நீங்க கூப்பிட்டனுப் பினீங்களேன்னு யசமானரிடம் சொன்னேன். போய்க் கேட்டு விட்டு வா என்று யசமானர் உத்தரவிட்டார், வந்துட்டேன். என் தைரியம் என்ன இதிலே?” என்றேன். இப்படி மறைமுகமாக நான் அங்கு வந்திருப்பது திப்பிலியாருக்குத் தெரியும் என்று அவுங்களுக்குத் தெரிவித்துவிட்டதில் எனக்குப் பரம திருப்தி.

“அப்படியா?” என்ற அம்மாள் ‘காபி கொண்டு வரச் சொல்லட்டுமா? அல்லது வெய்யிலா இருக்கிறதே கூல்டிரிங்க் கொண்டுவரச்

சொல்லட்டுமா?' என்று கேட்டாங்க.

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாங்க எதுக்காக கூப்பிட்டனுப் பினீங்க? விஷயத்தைச் சொல்லுங்க!" என்றேன்.

"அவசரமான ஜோலி ஏதாவது இருக்கிறதா?"

"யசமான் பாங்குக்குப் போயிருக்காரு. பாங்கிலே அரைமணி வேலையிருக்கு என்றாரு. அந்த இருபத்தைந்து நிமிஷ நேரம் நான் இருக்கலாம். அவசரம் ஒண்ணுமிலைங்க" என்றேன்.

"ராஜவேலு சொன்னதிலிருந்து நீ விசுவாசமான ஆள், கெட்டிக்காரன் என்று கண்டு கொண்டேன். நீயும் எங்களுடன் இருக்க வேண்டும் என்று விரும்பினோம்."

"நேரடியாகச் சொன்னதுக்கு நன்றிங்க அம்மா" என்றேன் நான். "திப்பிலியாருடைய மனைவி எனக்கு மகள் போல."

"அவள் எங்க ராஜவேலுக்குத்தானே மகள்?"

"அதுதான் இல்லை என்று உதறிவிட்டு வந்து விட்டதே!" என்றேன் நான். "தவிரவும் திப்பிலியார் யசமான்கிட்ட இப்ப சத்தியாக எனக்கு ஒருவிதமான அதிருப்தியும் இதுவரையில் இல்லை."

"தெரிகிறது" என்றாள் அந்த அம்மா. "உனக்கு என்ன சம்பளம் தருகிறார்கள்?"

"அதையெல்லாம் ஏன் கேட்கிறீங்க வெட்கக் கேடு" என்றேன்.

"அவ்வளவு குறையவா தருகிறார் திப்பிலியார்? அவர் தாராள மனசு படைத்தவர்னு கேள்விப்பட்டிருக்கேன்" என்றாள் சுந்தரி அம்மாள்.

"அவர் எத்தனை வேணும்னு கேட்டாலும் தரத் தயார்தான். நான்தான் வெட்கத்தைவிட்டுச் சம்பளம் இல்லாமே வேலை செய்கிறேன். எனக்கு அப்படி ஒரு விதி" என்றேன்.

"உடனடியாகக் கையில் இருபதினாயிரம் தரச் சொல்றேன். இங்கே டாக்டருக்கு ஒரு நம்பகமான ஆள் வேண்டும்."

"நான் பதில் சொல்லவில்லை. ஒரு நிமிஷம் கழித்து அந்த அம்மாளே சொன்னாள். இருபதினாயிரம் போதாது என்றால்..."

"போதாது என்றா நான் சொன்னேன்?" என்றேன்.

‘‘அப்போ நாளை முதலே வேலைக்கு வந்து விடுகிறாயா?’’

‘‘அதெப்படிங்க முடியும்? நான் திப்பிலியார் வீட்டு வேலையைத் தவிர வேறு வேலை பார்ப்பதில்லை என்று ஏழுமலையான் மேல் சபதம் செய்திருக்கிறேன்’’ என்றேன்.

‘‘எந்த ஏழுமலையான் மேல்? இலங்கையிலிருந்து வந்து திப்பிலியாருடைய ஆஸ்திக்கெல்லாம் அஸ்தி வாரமாக அமைத்து விட்டானே அந்த ஏழுமலையான் மேலா?’’ என்று கேட்டாள் அந்த அம்மாள்.

‘‘ஒரு தம் அடித்து விட்டுப்போக நேரம் இருக்கு, வரட்டுமா?’’ என்றேன்.

‘‘நீதான் தம் அடிப்பதில்லை, குடிப்பதில்லை, ஸ்திரீகள் இருக்கிற பக்கமே திரும்பிப் பார்க்கிறதில்லை என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேனே?’’ என்றாள் அந்த அம்மாள்.

‘‘அதனால்தான் அம்மா எனக்கு இங்கே டாக்டர் கிட்ட வேலைக்கிருக்கப் பயமாக இருக்கிறது’’ என்றேன்.

‘‘அதைக் கேட்டுவிட்டு கலகல வென்று சிரித்தாள் அவள். ‘உங்க யசமானரின் மனைவி மிகவும் அழகாக இருப்பாளாமே!’ என்று கேட்டாள்.’’

‘‘என் மகள் அழகா இல்லையா என்பது பற்றி நான் சிந்திப்பதில்லை. அவள் என் மகள் என்பதுதான் எனக்கு முக்கியம்’’ என்றேன்.

‘‘அப்படியானால் இங்கு வேலைக்கு வருவது பற்றி ஐம்பதினாயிரம் கிடைத்தால்கூட யோசிக்கமாட்டாயா நீ?’’

‘‘லக்ஷம் கிடைத்தாலும் யோசிக்க மாட்டேன், வரட்டுமா? என்று பதிலுக்குக் காத்திராமல் திரும்பிவிட்டேன்’’ என்றான் சம்பந்தம்.

# அத்தியாயம் 34

நான் காபியில் கடைசிவாயை ருசிபார்த்துக் கொண்டே சிந்தித்தேன். இந்த சம்பந்தம் படிக்காதவன் அல்ல – அவனே சொன்னது மாதிரி அவனுக்குக் கவிதை வந்தாலும் வரும். தன்னை உயர்த்திச் சொல்லிக் கொள்ளப் போதிய அறிவும் ஆற்றலும் அவனுக்கு இருந்தது. சுயசரிதம் எழுதுவதில் ஈடு பட்டுள்ள பலருக்கும் உள்ள ஆற்றல் அது. சம்பந்தம் தன் சுயசரிதத்தைச் சற்று சிறப்பாகவே சொல்லி என்னை நம்ப வைத்து விடுவான் என்று தோன்றியது எனக்கு. கதை சொல்லத் தெரிந்தவன் – தன் குணாதி சயங்கள் வெளியாகும்படியாகக் கதையைச் சொல்லிக் கொள்வதில் அவனுக்குத் திறமை இருந்தது.

எனக்கு வெகு நாளாக இருந்த சந்தேகம் ஒன்றைத் தீர்த்துக் கொள்ள இதுதான் சமயம் என்று தோன்றிற்று. கேட்டேன். ‘‘புதுச்சேரிச் சரக்கு புதுச்சேரிச் சரக்கு என்கிறாயே – அது முக்கியமாக மதுவை மட்டும் குறித்தோ அல்லது பட்டு, கடிகாரம், தங்கம், செண்டு, இந்தமாதிரித் தீர்வையில்லாமல் புதுச்சேரியில் வந்திறங்கி மற்ற இடங்களைவிட மலிவாகப் புதுச்சேரியில் கிடைக்கிற எல்லா சரக்குகளையுமே குறிக்குமா?’’ என்றேன்.

‘‘எல்லாச் சரக்குகளையும் தான்.’’

‘‘அவற்றை எப்படிக் கஸ்டம்ஸ் அதிகாரிகள் கண்களில் படாமல் கொணருவது?’’

‘‘அதெல்லாம் எத்தனையோ ரகசியமான வழிகளில் சாத்தியம். அது தெரிந்தால் எத்தனையோ பேர் இந்த இருபது முப்பது வருஷங்களில் கொள்ளைப் பணக்காரர்களாகி யிருப்பார்களே?’’ என்றான் சம்பந்தம்.

‘‘உனக்கே இதுபற்றி வழிவகைகள் தெரியாது என்கிறாயா அல்லது பொதுவாகப் பலருக்குத் தெரியாது என்கிறாயா?’’ என்று கேட்டேன்.

‘‘திப்பிலியாருக்கு ஒரு இருபது வருஷங்கள் லாபம் தந்துவந்த வியாபாரம் இந்தக் கள்ளக் கடத்தல் வியாபாரம்தான். அந்த இருபது வருஷங்களில் ஒரு பன்னிரண்டு வருஷங்களுக்கும் அதிகமாகவே நான் அவருடன் நெருங்கிய விதத்தில் பழகி யிருக்கிறேன். எனக்கே கள்ளக் கடத்தல் வழிகள் ஒன்றிரண்டு தான் தெரியும். உள்ள வழிகள் பலவற்றைப்பற்றி நான் நினைத்துப் பார்த்ததேயில்லை. ‘உனக்குச் சம்பந்தமில்லாததை நீ தெரிந்து கொள்ளாதிருப்பதே நல்லது என்பார்’ யசமானார்.’’

“இந்த வழிகளில் ஒன்றிரண்டு பற்றி மட்டுமே உனக்குத் தெரியும் என்கிறாயா?”

“ஆமாம். அந்த இரண்டில் ஒன்றைப்பற்றி மட்டும் சொல்கிறேன்” என்றான் சம்பந்தம். “புதுச்சேரியில் குறிப்பிட்ட நபர்கள் மூலமே சரக்குகளை வாங்கிச் சௌகரியமான இடத்தில் சேர்த்துக் கொள்வார்கள். அவற்றை உரியபடி பாக் செய்து, வாட்டர் புரூப் கித்தான்கள் போட்டு உள்ளே தண்ணீர் புகுந்து சாமான்கள் வீணாகாதபடி செய்து கொள்வார்கள்.”

“எதற்காக?”

“சொல்கிறேன். இந்தக் கட்டுகளை, கட்டுமரம் அல்லது படகின் அடிப் பாகத்தில் இருக்கும் வளையங்களில் மாட்டித் தொங்கவிட்டு விடுவார்கள். இந்தப் படகுக்கு இந்தக் கனத்துக்கு மேல் தாங்காது என்று தீர்மானித்துச் செய்வார்கள். படகுகள் சாதாரணமாக மிதந்து கொண்டிருக்கும். கள்ளச் சாமான்கள் உண்மையில் படகுக் கடியிலிருந்து கடலுக்குள் தொங்கிக் கொண்டிருக்கும். படகைச் சோதனை போட்டாலும் ஒன்றும் தெரியாது. அடியிலும் சோதனை போடுவார்கள் போல இருந்தால் அடிக் கொக்கிகளைச் சமயம் பார்த்து அவிழ்த்து விட்டு விடுவார்கள். சாமான்கள் இருந்த சுவடே தெரியாமல் கடலில் ஆழ்ந்துவிடும். கள்ளச் சாமானுடன் பிடிபட வேண்டிய தில்லை.”

“சாமான் நஷ்டந்தானே?”

“கள்ளச் சாமானுடன் அகப்பட்டுக் கொள்வதை விட சாமான் போகட்டும் என்று விட்டுவிடுவது நல்லது. நஷ்டப்பட்டதை அடுத்த டிரிப்பில் சமாளித்துவிடலாம் என்கிற தெம்புதான். இலங்கைக்கு அரிசியேற்ற வந்தவன் படகுகள் மூலம் இந்த வழியேதான் ஆயிரக்கணக்கான மூட்டைகளைக் கள்ளத்தனமாகக் கொண்டு போய்ச் சேர்த்தான். ஒரே ஒரு தடவை தான் இப்படி வந்த சாமான்கள் நஷ்டமாயின என்று நான் கேள்விப்பட்டேன்” என்றான் சம்பந்தம்.

“இலங்கையிலிருந்து வந்து ஒன்பது லக்ஷத்தையும் உயிரையும் பறிகொடுத்த அந்த ஏழுமலையால் திப்பிலியாருக்கு எவ்வித தொந்தரவும் ஏற்படவில்லையா? அந்த அரிசி வியா பாரியையோ அவன் கொண்டு வந்த ஒன்பது லக்ஷத்தையோ தேடிக்கொண்டு யாரும் வர வில்லையா?” என்று கேட்டேன்.

“யார் வருவார்கள்? யாருக்கு என்ன நிச்சயமாகத் தெரியும்? இந்த வியாபாரத்தில் எல்லாம் அவரவர் பாடு என்று ஒருவரை விட்டு ஒருவர்

ஒதுங்கியே இருந்து விடுவார்களே தவிர வேறு எதுவும் செய்யமாட்டார்கள். கூட்டுச் சேர்ந்து ஏழுமலையைக் கொன்று கொள்ளையடித்த – அதுதானே அவர்கள் செய்தது? – ராஜவேலுவும் திப்பிலியாரும் சண்டை போட்டுக் கொண்டு ஒருவர் சாவுக்கு ஒருவர் காரணமானது ஒன்றுதான் விளைவு. அவர்கள் இருவருடைய பணத்துக்கும் முடிவுக்கும் காரணமாக, அஸ்திவாரமாக அமைந்தது ஏழுமலைதான்.”

# அத்தியாயம் 35

“பாக்கியையும் சொல்லி முடித்துவிடு, நேர மாகிறது, போகலாம்” என்றேன்.

“பாக்கி சொல்ல என்ன இருக்கிறது? எல்லா வற்றையும்தான் வரிசைப்படுத்தாவிட்டாலும் காமா சோமா என்று சொல்லி முடித்துவிட்டேன். சொல்ல இனி என்ன பாக்கியிருக்கிறது?” என்றான் சம்பந்தம்.

“ராஜவேலு இறந்தது யாரால்?” என்று நேரடி யாகவே கேட்டேன் நான்.

“நான் தான் அவனைக் கொன்றுவிட்டேன் என்று போலீஸார் குற்றம் சாட்டினார்கள். ஆனால் மீசைக் கார நடேசனைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப் பட்டிருந்தேன். இறந்தது மீசைக்கார நடேசன் அல்ல, ராஜவேலுதான் என்று சந்தேகமறத் தெரிந்த பின் என்னைக் குற்றவாளியல்ல என்று விட்டு விட்டார்கள். ஏன் குற்றம் சாட்டினார்களோ – ஏன் விட்டார்களோ – எனக்கே தெரியவில்லை.”

“அதெல்லாம் கேட்கவில்லையே நான், ராஜவேலு இறந்துவிட்டான் – யாராலோ சுட்டுக் கொல்லப் பட்டு. அவன் இறந்துவிட்டது உண்மைதானே?”

“ஆமாம், போய்விட்டான். நான்தான் அவன் செத்துக் கிடந்ததைப் பார்த்தேனே!”

“யார் கொன்றது அவனை?”

“எனக்கு நிச்சயமாகத் தெரியாது, ஆனால் என்னால் ஒருவாறு யூகிக்க முடியும்.”

“என்ன யூகிக்கிறாய் நீ?”

“அந்த டாக்டர் சுந்தர்தான்...”

“என்ன!” என்று ஆச்சரியத்துடன் கூவினேன் நான்.

“அதில் ஆச்சரியம் என்னங்க அவ்வளவு? கூட்டாளியா யிருக்கிறவங்களுக் கிடையே பகை மூளுவது சகஜந்தானுங்களே! திப்பிலியாரும் ராஜவேலுவும் உதாரணமில்லீங்களா?”

“உண்மைதான். ஆனால் டாக்டர் சுந்தர் எதற்காக ராஜவேலுவைக் கொன்றிருக்க வேண்டும்?” என்று கேட்டேன்.

“அதற்கான காரணங்களையும் நான் யூகித்துத் தான் சொல்ல முடியுமே தவிர நேரடியாக அறிந்து சொல்ல முடியாது.”

“சொல்லு.”

“டாக்டர் சுந்தரத்திடம் இருந்த பணத்தில் பெரும் பகுதியும் கரைந்துவிட்டது. ராஜவேலுவுக்கோ புதுசு புதுசாகத் தேவைகள் தோன்றிக் கொண்டிருந்தன. மேலும்...”

“மேலும் என்ன?” என்றேன்.

“இதுதான் கேள்விப்பட்டது. சுந்தரி அம்மாள் மோஹத்தை மறந்துவிட்டு ராஜவேலு வேறு ஒரு சுந்தரியை நாட ஆரம்பித்து விட்டான் என்று டாக்டர் வீட்டு அம்மாளுக்குக் கோபம் வந்துவிட்டது.”

“இந்த வயதிலா?”

“வயது இதிலெல்லாம் ஒரு கணக்குங்களா?”

“அப்படியிருந்தால் அந்த அம்மாள் அன்றே அவனைக் கொன்றிருக்க வேண்டும்.”

“மறைமுகமாக அவுங்கதான் சொன்னாங்க. தன் கணவனிடம் தக்க காரணங்களைச் சொல்லி ராஜவேலுவைத் தீர்த்துவிடா விட்டால் தங்களுக்கு ஆபத்து என்று அவரை நம்ப வைக்கக் கெட்டிக்காரியான அந்த அம்மாளுக்கு எவ்வளவு நேரமாகி யிருக்கப் போகிறது. அதுவும் பணமும் பெரும்பகுதி கரைந்து விட்டபோது அவரை நம்ப வைப்பது மிகவும் சுலபமாகவேதான் இருந்திருக்கும்,” என்றான் சம்பந்தம்.

“நீ எப்படி அந்தக் கொலையைச் செய்ததாக மாட்டிக் கிட்டாய்? இப்படித் துண்டு துண்டாகச் சொல்வதற்குப் பதில் அந்தக் கதையை விவரமாகச் சொல்லு” என்றேன் நான்.

“நான் சாதாரணமாகப் புதுச்சேரி சாமான்களைக் கையாளுகிற கோஷ்டிகளுடன் சேருவதில்லை. அதற்குப் போதுமான சாமர்த்தியக் காரரான, பழக்கப்பட்ட ஆட்கள் திப்பிலியாருக்கு இருந்தார்கள். அவர்களில் ஒருவன் நகரில் தனியாக அகப்பட்டுக் கொண்டான் என்று அவனை ராஜவேலுவும் அவன் ஆட்களும் கழுத்தை முறித்து ஆற்றிலே எறிந்துவிட்டார்கள். அது திப்பிலியாருக்கே பின்னர்தான் தெரியும். அந்தச் சமயம் வண்டி ஓட்டிக்கொண்டு போக ஒரு ஆசாமி குறையவே, எனக்கு வண்டி ஓட்டத் தெரிந் திருந்ததால் எனக்கும் அச்சமயம் முக்கியமான வேலை இல்லாததால் என்னை வண்டி எடுத்துக்கிட்டுப் போகச் சொன்னார்.

அதற்கு முன்னும் சில சமயம் அப்படி நேர்ந்ததுண்டு. நடப்பது எதிலும் பட்டுக் கொள்ளாமல் நான் வண்டி ஓட்டிக்கொண்டு – அது திப்பிலியாருடைய சொந்த பக்கார்டு அல்ல – குறிப்பிட்ட ஒரு இடத்துக்குப் போய் ஆசாமிகளை இறக்கி விட்டுவிட்டு உடனே திரும்பிவிடுவேன். போன ஆசாமிகளை ஏற்றிச் செல்ல வேறு வண்டி வேறு தெருவில், திருப்பத்தில் காத்திருக்கும்.''

``டாக்டர் சுந்தரம் எங்களுக்கு விரோதியாகப் போனபின் சாமான்களைக் கையாள நகரில் வேறு ஒருவர் தேவையாக இருந்தது. ஷாப்புக் கடை வைத்திருந்த ஜெயராம் முதலியாரை நாங்கள் இதற்கு உபயோகித்து வந்தோம். அந்தக் குறிப்பிட்ட ஊரில் ஜெயராம் ஷாப் மூலம்தான் எங்கள் புதுச்சேரிச் சரக்குகள் விலைபோய் வந்தன. கடைவீதிக்குப் பின் பக்கம் ஒரு குறு கலான சந்தில் ஒரு சிறு கேட்டைத் திறந்து கொண்டுபோனால் ஒரு பெரிய கிட்டங்கி இருந்தது. வெளியிலிருந்து பார்க்க அங்கு அவ்வளவு பெரிய கட்டிடம் இருப்பதே தெரியாது. வாசல் பக்கம் யாரோ பிச்சைக்காரர்கள் ஒதுங்கியிருப்பார்கள் – அப்படி அவர்கள் ஒதுங்கி யிருப்பதற்கு அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு ரூபா சம்பளம். பத்துப் பேராவது இருப்பார்கள். சாமான்களைக் கையாளுவதில் அவர்களில் நம்பகமான சிலரும் பங்கு பெறு வார்கள். கார் மட்டும் இல்லை. பெரிய கார் கூட உள்ளே போய் விடலாம். போய்க் கேட்டுக் கதவுகளை மூடிக்கொண்டு விட்டால் யாருக்கும் எதுவும் தெரியாது. அந்தக் கிட்டங்கிக்கும் ஜெயராம் ஷாப்புக்கும் இடையே ஒரு பாதை இருந்திருக்கவேண்டும். நான் அந்தக் கிட்டங்கிக்குள்ளோ, ஜெயராம் முதலியார் கடைக் குள்ளோ என்றைக்குமே போனதில்லை.''

# அத்தியாயம் 36

“அன்று வண்டியை எடுத்துக்கொண்டு அந்தக் கிட்டங்கி கேட்டுக்கு வெளியே என்னுடன் வண்டியில் வந்த ஆசாமிகளை இறக்கிவிட்டேன். உள்ளே போக வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் பெரிய சாமான்கள் எதுவும் வரவில்லை. நூற்றுக்கணக்கான கடிகாரங்கள் மட்டும் கொண்டு வந்திருந்தார்கள். அதைச் சிறு கைப் பெட்டியிலோ, வேறு பாக்கெட் களிலோ மறைத்து வைப்பது சுலபமாக இருந்தது. கேட்டண்டை, உண்மையில் அந்தப் பக்கத்துச் சந்து திரும்பாமல் முனையிலேயே ஆட்களை இறக்கி விட்டேன். அவர்கள் மூவரும் ஒருவர் பின் ஒருவராகக் கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே போனபின் நான் வண்டியைத் திருப்பிக்கொண்டு திப்பிலியாபுரம் போகக் கிளம்பினேன். அநாவசியமாக நகரில் இருந்து, ராஜவேலு அல்லது டாக்டர் வீட்டு அம்மாள் யாருடைய கவனத்தையாவது கவர நான் விரும்பவில்லை. அநாவசியமாக வம்பு எதிலாவது மாட்டிக் கொள்வானேன்? தவிரவும் என் கடமை என் யசமானர் வீட்டைப் பாதுகாப்பதுதான். அது சற்றுச் சுலபமான வேலையும் கூட. ஏனென்றால்

ராஜவேலு தன் மகளைத் தன்பக்கம் இழுத்துக்கொள்ள எப்படி எப்படியோ முயற்சி செய்தான். சமயம் நேர்ந்த போதெல்லாம் சொல்லி யனுப்பினான். ஆனால் திப்பிலியாருடைய மகனைத் தவறுதலாகக் கொன்று தலையைக் கொய்த பிறகு, அந்தக் கமலத்துக்கு எதுவும் ஆபத்து விளைவிக்கும் படியாக எதுவும் செய்யவில்லை. ஆனால் அதுவே போதும் போதும் என்றிருந்தது கமலத்துக்கு. இருந்த ஒரு பிள்ளையோ போய்விட்டான்; கணவனுக்கும் எந்த நிமிஷத்தில் என்ன ஆபத்து நேருமோ என்ற பயமும் கவலையும் வேறு – ஆளே உருமாறிவிட்டாள். பழைய அழகு, உடல் வலு, திடம் எல்லாம் கரைந்துவிட்டது. என் கண் எதிரிலேயே இரண்டு வருஷங்களில் நாற்பது வருஷங்கள் அதிக வயது ஆகிவிட்டது போலக் கிழவியாகிவிட்டாள் அவள். அவளைப் பாதுகாப்பதுதான் என் கடமை.”

“நான் செங்கழுநீர்ப் பிள்ளையார் கோயில் தெரு திரும்பிக் காரைக் கொள்ளிடக்கரை நோக்கி ஓட்டிக் கொண்டிருக்கும் போது என் கண் எதிரே ஒருவன் நடுரோட்டில் துள்ளி விழுவது தெரிந்தது. அடுத்த விநாடியே துப்பாக்கிச் சப்தமும் கேட்டது. குறுகலான தெரு. உயரமான வீடுகள் பல உள்ள தெரு. துப்பாக்கிச் சப்தம் எங்கிருந்து கேட்டு எப்படி எதிரொலித்தது என்று தெரியவில்லை. எங்கேயோ வீட்டுக்குள்ளிருந்து மாடி வராண்டாவில்

நின்றபடியோ, ஜன்னல் வழியாகவோ சுட்டிருக் கிறான் என்று அனுமானிக்க முயன்றேன்.''

''காரைக் கொண்டுபோய் நிறுத்தி நான் இறங்கி ஆசாமியைப் பார்ப்பதற்குள், எதிரிலிருந்த புஸ்தகக் கடை வாசல் கதவைத் திறந்துகொண்டு புஸ்தகக் கடை அய்யா வந்துவிட்டார். கீழே கிடந்தவன் இறந்துவிட்டான். இனி நான் செய்யகூடியது ஒன்றும் இல்லை. போகலாம் என்று திரும்புகிற சமயத்தில் வேறு நாலு பேர் வந்துவிட்டார்கள். அதில் இருவர் டாக்டர் சுந்தரின் ஆட்கள் என்று ஓரக்கண்ணால் கவனித்தேன். அவர்கள் நால்வரும் என்னைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு கூக் குரலிடவே கூட்டம் கூடிவிட்டது. நான் தப்பித்துக்கொண்டு போயிருக்கலாம். அப்படிப் போயிருந்தால் நான்தான் அவனைக் கொன்றுவிட்டு ஓடிவிட்டேன் என்று ஊர்ஜிதம் ஆகியிருக்கும். என் மடியில் துப்பாக்கியிருந்தது. அதை நான் எடுக்கவே யில்லை. எடுத்திருந்தால் துப்பாக்கியைக் குறிபார்த்துச் சுடத்தான் எனக்கு ஆசையிருந்திருக்கும். துப்பாக்கி என் கையிலிருந்தால் என் விரல்களைக் கட்டுப்படுத்த என்னால் முடிந்திருக்காது. கூட்டத்தில் ஒருவன் என்னை அடிக்கக்கூட அடித்துவிட்டான். அதையும் பொறுத்துக் கொண்டு பேசாதிருந்தேன்.''

''போலீஸ் வந்தது. கீழே குப்புற விழுந்து கிடந்த மனிதனை அவர்கள் புரட்டிப் போட்டதும் நான் மீசைக்கார நடேசன்!'' என்றேன்.

''ஃபிரான்ஸிஸ் தான் போலீஸ் கோஷ்டியுடன் வந்திருந்தார். 'இந்த ஆசாமியைத் தெரியுமா உனக்கு?' என்றார்.''

''தெரியும். திருவாலூரான். மீசைக்கார நடேசன் என்று பெயர்'' என்றேன். முதலில் அப்படித்தான் நினைத்தேன். பிறகுதான் மீசையில்லாத நடேசன் அவன் – ராஜவேலுவேதான் – என்று எனக்குத் தெரிய வந்தது. இருவரும் உருவத்தில் ஒத்திருப்பார்கள் – இரட்டையர்கள். இவர்களில் ஒருவருக்குப் பிறந்தவள்தான் அந்தக் கமலம் – யாருக்கு என்று நிச்சயமாக அவர்களுக்கே தெரியாது. அவள் தாயாருக்குக் கூடத் தெரியாது என்று சொல்வார்கள். இரட்டையர்கள் இருவருக்குமே வைப்பாக இருந்தவள் கமலத்தின் தாயார்.

''இதெல்லாம் உங்களுக்குச் சொன்னேன். நான் போலீஸ் காரர்களிடம் வேறு எதுவும் சொல்லவில்லை. 'நீ திப்பிலி யாருடைய டிரைவர்தானே? உன் பெயர் சம்பந்தம், இல்லையா?' என்று கேட்டார்.''

''ஆமாம்'' என்றேன், மறைப்பானேன்?

“இந்த ஆசாமி உங்களுக்கு எதிரியான ராஜவேலுவின் ஆள் இல்லையா?” என்றார் ஃபிரான்ஸிஸ்.

“அது எனக்குத் தெரியாது. ராஜவேலுவும் மீசைக்கார நடேசனும் சகோதரர்கள் – இரட்டையர்கள்” என்றேன்.

“அப்படியா? ஏ 834! போய் ராஜவேலுவை அழைத்துவா!” என்று ஒரு கான்ஸ்டேபிலுக்கு அவர் உத்தரவிட்ட போதுதான் கீழே செத்துக் கிடப்பது ராஜவேலுதான், மீசைக்கார நடேசன் என்று நான் எண்ணியது பிசகு என்று எனக்கே தெரிந்தது. நான் ராஜவேலுவைப் பார்த்தே பல வருஷங்களாகிவிட்டன. அதனால் தான் உடனே அவனை அடையாளங் கண்டு கொள்ள முடிய வில்லை. யசமானுக்குச் சொல்ல நல்ல செய்திதான் இது என்று மனசில் பூரித்துப் போனேன். அங்கிருந்தவர்களிடம் நான் எதுவும் சொல்லவில்லை.

“உனக்குத் துப்பாக்கி சுடத் தெரியுமா?” என்று கேட்டார் போலீஸ் ஹேட்.

“நன்றாகச் சுடுவான். சம்பந்தத்தின் குறி தப்புவதில்லை” என்றார் ஃபிரான்ஸிஸ் எனக்குப் பதிலாக.

“துப்பாக்கி என் மடியில் இருக்கிறது. குறி ஏதாவது சொல்லுங்கள், சுட்டுக் காண்பிக்கிறேன் நான் குறி தப்பாதவன் என்பதை” என்றேன்.

“நாலைந்து வருஷங்களாகவே திப்பிலியார் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கைத்துப்பாக்கியை வைத்துக் கொண்டு மாறி மாறிக் குறிபார்த்துச் சுட்டுப்பார்ப்பதை ஒரு சாதகமாகச் செய்தவன் நான். எந்தப் புள்ளி போன்ற குறியைக் காட்டினாலும் இரு நூறு அடிக்குள் இருந்தால் பிசகாமல் சுட்டுவிடுவேன். அதுபற்றி இன்ஸ்பெக்டர் ஃபிரான்ஸிஸுக்கும் தெரியும் போலும்.”

“என் மடியில் துப்பாக்கி யிருக்கிறது என்று கேள்விப் பட்டதும் கூட்டம் சற்றுக் கலகலத்தது. போலீஸ்காரர்களுக்கே சற்று பயந்தான். ஆனால் நான் அலக்ஷியமாக ‘இன்று இன்னமும் துப்பாக்கியை எடுக்கவில்லை. நீங்களே எடுத்துப் பார்த்துவிட்டு மீசைக்கார நடேசனைக் கொன்றவனைக் கண்டு பிடித்ததும் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்” என்று ஃபிரான்ஸிஸிடம் தந்து விட்டேன்.

“அத்துடனேயே என்னை விட்டிருக்க வேண்டும் இன்ஸ் பெக்டர். அவருக்கு நான் கையில் சிக்கிவிட்டது பற்றிப் பரம சந்தோஷம். ராஜவேலு அவருக்கு அவ்வளவு பணம் தளர்த்தி யிருந்தான் என்றுதானே அர்த்தம்

அதற்கு? என்னை லாக்கப்பில் அடைத்துவிட்டார் – என் துப்பாக்கி அன்று சுடப்படவே யில்லை.

மறுநாள் தகவல் கிடைத்ததும் உடனே திப்பிலியார் வந்து எனக்கு பெயில் வாங்கித் தந்தார். கீழ் போலீஸ் விசாரணையும் செஷன்ஸ் விசாரணையும் அநாவசியமாகவே நடந்தது. ராஜ வேலுவை எங்கும் காணவில்லை எனினும், இறந்தது ராஜ வேலுதான் என்று முதலில் ஃபிரான்ஸிஸுக்குத் தெரியவில்லை. மீசைக்கார நடேசனைக் கொன்ற குற்றத்துக்காகவே என்னை விசாரித்தார்.''

''திப்பிலியாருடைய வக்கீல், அந்த மீசைக்கார நடேசன் எங்காவது உயிருடனிருந்தால் கொண்டு வந்தால் கேஸ் நம் பக்கம் ஜெயமாகிவிடும் என்று யோசனை சொன்னார். நான்தான் அந்த நடேசனைக் கண்டுபிடித்து வந்தேன். அவனுக்கு திப்பிலியார் – ராஜவேலு விவரங்கள் எதுவுமே தெரியாது. கும்பகோணத்திலே எங்கோ ஒரு மூலையில் ஒரு பெட்டிக் கடை வைத்துக் கொண்டு பிழைத்து வந்தான். அவனை ஆஜர் படுத்தினதும், அவன்தான் மீசைக்கார நடேசன் என்று ருஜுப் பித்தும், இறந்தது யார் என்கிற பிரச்னை எழுந்தது. விஷயம் அதற்குள் ஃபிரான்ஸிஸ் கையை விட்டுப் போய்விட்டது. ராஜ வேலுவைக் கொன்றவர்கள் ஏராளமான பணத்தைப் போலீஸுக்குத் தந்து இறந்தது யார் என்கிற பிரச்னை தீராமலே செய்து விட்டார்கள். ராஜவேலுதான் இறந்தது என்று கோர்ட்டார் கேஸ் எடுத்தால், ராஜவேலு உயிருடனிருப்பதாகவும் தங்கள் அலுவலாக அவன் மலேயா போயிருப்பதாகவும், மீசைக்கார நடேசனைப் போலவே அவனைக் கோர்ட்டில் ஆஜர் செய்து போலீஸைப் பார்த்து ஊர் சிரிக்கும் படி செய்து விடுவேன் என்றும், டாக்டரும் அவர் மனைவியும் போலீஸ் துரையிடம் சொன்னதாகக் கேள்விப்பட்டேன். இதை யெல்லாம் வைத்துத்தான் டாக்டர் தம்பதிகள் மூலமாகத்தான் ராஜவேலு இறந்திருக்க வேண்டும் என்று அனுமானித்துக் கொண்டேன்.''

# அத்தியாயம் 37

“அதற்குப் பிறகு நீ டாக்டரைப் போய்ப் பார்க்கவில்லையே!” என்று கேட்டேன்.

“பார்க்காமலிருப்பேனா? நேற்றுக்கூடப் போய்ப் பார்த்தேன். டாக்டர் கண்ணில் படவில்லை. டாக்டர் வீட்டு அம்மாளைத்தான் பார்த்தேன். ‘இப்படி யெல்லாம் நடந்துவிட்டதே. ராஜவேலு அநியாய மாகப் போய்விட்டானே’ என்று அப்போது துக்கமே விசாரித்தேன். ‘நிஜமாகவே நீ துக்கப்படுகிறாயா?’ என்று கேட்டாள் அந்த அம்மாள். ‘நான் துக்கப்பட வில்லை. அப்படிச் செத்தது ராஜவேலுதான் என்று நீ நினைத்தால் அது உண்மையாகவும் இருந்தால், அவன் அப்படித் துப்பாக்கியினால் இறந்தது நியாயமே என்று எனக்குத் தோன்றுகிறது!”

“இருந்தாலும் என் யசமானி அம்மாளின் தகப்பனார் அல்லவா?” என்றேன் நான்.

“திப்பிலியாரும் தீர்ந்துவிட்டால்....” என்று சொல்லி வாக்கியத்தை முடிக்காமலே நிறுத்தினாள் அந்த அம்மாள்.

“அந்த அம்மாளுடைய கெட்டிக்காரத்தனம் எனக்குத் தெரிந்தது. அந்த வழியில் சிந்தனை செய்து எப்படியாவது திப்பிலியாரையும் இல்லாமல் ஆக்கிவிட்டால் இந்த யுத்தமும் அதன் விளைவுகளும் ஒரு வழியாக முடிந்துவிடும். அதற்குப் பிறகும் புதுச்சேரிச் சரக்குகளுக்கும் கிராக்கி யிருந்துகொண்டு தான் இருக்கும் – யாராவது அந்த வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டுதான் இருப்பார்கள். ஆனால் நம்மைப் பிடித்த தொல்லையும் வெறியும் நீங்கிவிடுமே என்ற யோசனை எனக்கு.”

“யோசிக்க யோசிக்க அது ஒன்றுதான் சிறந்த வழி என்று தோன்றிற்று எனக்கு. அதைத் திப்பிலியாரிடமும் சொன்னேன். ‘பெரிய சாம்ராஜ்யம் தான் அது – லக்ஷக் கணக்கில் பணம்தரக் கூடிய சாம்ராஜ்யம் அது. ராஜவேலு எவ்வளவோ முயன்றும், வீணாகிவிடாத சாம்ராஜ்யம்தான் அது. இன்னமும் பல லக்ஷங்கள் வாரிக் கொணர்ந்து தரக்கூடிய வியாபாரம் தான் அது. அவ்வளவையும் விட்டுவிட்டு என்ன பண்ணுவது – எப்படிப் பொழுது போகும் என்று’ திப்பிலியார் வெகுவாகத் தயங்கினார். நான் வற்புறுத்திச் சொல்லச் சொல்ல, கமலம் படுகிற துயரமும், திப்பிலியார் வெளியே கிளம்பிவிட்டால் கவலையும் ஏக்கமும் அவளைப் பீடிப்பதும் தாங்க முடியாத கனமான சுமையாகத்தான் இருந்தன. கமலத்திடம் விரிவாக எங்கள்

திட்டத்தைச் சொல்லவும் முடியாது. எங்களிருவரையும் தவிர விஷயம் யாருக்கும் தெரியாமல் முடிய வேணும்.''

``என்ன திட்டம்? என்ன விஷயம்?'' என்று கேட்டேன்.

# அத்தியாயம் 38

“பெரிய கதாசிரியர் என்கிறீங்க? இத்தனை சின்ன விஷயம் புரியல்லியே உங்களுக்கு” என்று என்னைக் கேலி செய்தான் சம்பந்தம். “எதிரி செத்து மடிந்தான். திப்பிலியாருக்கிருந்த ஒரு பிள்ளையும் போய்விட்டது. யாருக்காக அவர் சம்பாதிக்க வேண்டும்? நாலு நாள் திப்பிலியார் ஈசுவரன் சந்நிதானத்திலே போய் நின்றுவிட்டு வந்து நான் சொன்ன வழி தான் சிறந்தவழி என்று தீர்மானித்து ஏற்றுக் கொண்டார்.”

“திப்பிலியார் செத்துவிட்டதாக நாடகம் ஜோடித்து விட்டு அவரை மறைய வைத்துவிடவேண்டும். கமலத்துக்குக்கூட இது முதல்லே தெரியக்கூடாது. வேறு ஊரில் போய்க் கொஞ்சம் பணத்தை வைத்துக் கொண்டு ஏதாவது ஒரு வீட்டை வாங்கிக்கொண்டு புது வாழ்வு வாழத் தொடங்க வேண்டும். தொந்திர வில்லாமல் ஏதாவது தொடங்கவேண்டும். இதுதான் யோசனை.”

“இதெல்லாம் ஏதோ அமெரிக்கக் கதைப் பத்திரிகையில் படிக்கிறமாதிரி இருக்கிறதே தவிர நம் ஊரில் நடப்பதாகத் தெரியவில்லையே!” என்றேன்.

“நம் ஊர்க்காரர்களைப் பற்றி நீங்கள் மட்டமாக நினைக் கிறீர்கள், அவ்வளவுதான்” என்றான் சம்பந்தம். “நம் ஊரில் அதைவிடவும் அதிசயமாகப் பல விஷயங்கள் நடக்கின்றன, அவற்றைப் பரபரப்பு செய்து நம் பத்திரிகைகளில் போட்டு எழுதுவதில்லை. வெள்ளைக்காரன் எழுதியிருக்கிற கதையையே எழுதிவிட்டுப் பலரும் ஆசிரியர்கள் என்று சொல்லிக்கொண்டு நடமாட வந்து விடுகிறார்கள்.”

“உனக்கு இலக்கிய விமரிசனம்கூட வரும் போல இருக்கு.”

“அப்படியென்றால்....?” என்றான் சம்பந்தம்.

“எனக்கு என்னவோ நம்பிக்கையில்லை” என்றேன்.

“எனக்கு ஒரு கதையை இப்படி ஜோடித்துச் சொல்லத் தெரியுமா சொல்லுங்கள்” என்றான் சம்பந்தம்.

“எனக்கே வராது. நான் தமிழ் நாட்டுத் தொடர் கதை ஆசிரியன் அல்ல என்பதனால் நடக்காத நடக்கமுடியாத சுவாரசிய மான சம்பவங்களை ஜோடித்துச் சொல்ல எனக்கே வராது” என்றேன்.

“நடந்ததைத் தவிர வேறு எதையும் நான் சொல்லலைங்க” என்றான் சம்பந்தம். “போலீஸ் காரனிடம் புளுக வேண்டும். உங்களிடம்

புளுகுவானேன்? உண்மையைத் தான் அப்படியே எனக்குத் தெரிந்தவரையில் சொன்னேன்.''

``உண்மை எது? புளுகு எது? நடந்தது எது என்று யார் சொல்வது? நீ சொன்னதில் நாலைந்து பகுதிகளை நானும் அவ்வப்போது அது நடந்த சமயத்தில் அறைகுறையாகக் கேள்விப் பட்டும் இருக்கிறேன். ஆகவே நீ சொல்வது பூராவும் உண்மை யாகவே இருக்கலாம் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது'' என்றேன் நான்.

``உண்மைதான் பூரணமாக நம்பலாம்'' என்றான் சம்பந்தம்.

# அத்தியாயம் 39

சுற்றுமுற்றும் யாருடைய வரவையோ எதிர் பார்ப்பவன் போலப் பார்த்தான் சம்பந்தம். பிறகு "அதோ இடது பக்கத்தில் மூன்றாவது மேஜையில் தனியாக வந்து உட்கார்ந்திருக்கிறாரே பெரியவர் அவருக்கு உங்களிடம் ஏதோ வேலையிருப்பது போல இருக்கிறது. அடிக்கடி உங்களையே பார்க்கிறார்" என்றான்.

நான் திரும்பிப் பார்த்தேன். வயது அறுபதிருக்கும் – சிவந்த மேனியும், பருத்த தொந்தியும், சட்டை யில்லாத உடம்பும், குறுக்கே போட்டிருந்த அங்க வஸ்திரமுமாக உட்கார்ந்திருந்த மனிதரை எனக்குத் தெரியவில்லை. பளிச்சென்றிருந்த நெற்றியிலே பளிச்சென்று நாலு விரல் படிய விபூதியிட்டு அதன் மேல் சந்தனமும் குங்குமப் பொட்டும் வைத்திருந் தார். அவர் என்னையேதான் பார்த்துக் கொண்டிருந்தார்.

"தெரியவில்லையே எனக்கு... எதற்காக அவர் என்னைத் தேடப் போறார்?" என்றேன்.

"கூப்பிட்டுக் கேட்டு விடுவோமே!" என்றான் சம்பந்தம். கையை, "வா" வென்று அவரை நோக்கி ஆட்டினான்.

அதற்காகவே காத்திருந்தது போல எழுந்து வந்த பெரிய வரிடம் "கமலாவைத் தேடுறீங்களா?" என்றான் சம்பந்தம்.

"இல்லையே!"

"தெரியுமா இவரை யாருன்னு?" என்று சம்பந்தம் மீண்டும் விசாரிக்கவே வந்த பெரியவர் "உன்னோடு பேசிக் கொண்டிருப்பது யார் என்று சின்னையாவை விசாரித்து அறிந்து கொண்டேன்" என்றார்.

"உன்னோடு" என்று அவர் சொன்னவுடனேயே நான் விஷயத்தைப் புரிந்துகொண்டேன். நான் புரிந்துகொண்டேன் என்பதை சம்பந்தமும் கண்டு கொண்டான்.

"உட்காருங்கள் ஐயா, உங்களைப் பற்றித்தான் இத்தனை நேரமும் சம்பந்தம் சொல்லிக்கொண்டிருந்தான்" என்றேன்.

"பேஷ்!" என்றான் சம்பந்தம். "பெயரெல்லாம் சொல்ல வேண்டாமுங்க."

"என்னைப் பத்தியா? என்னைப் பத்திச் சொல்ல என்ன இருக்கிறது? சம்பந்தத்துக்கும் என்ன தெரியும்?"

‘‘அது போவட்டும். ஐயாகிட்ட அந்தத் திப்பிலியாரை எப்படிக் காப்பாத்தி, அவர் செத்துவிட்டதாகப் பிறரை நம்ப வைத்து, அப்புறப் படுத்திவிட்டோம் என்று சொல்லிக் கொண்டிருந்தேன். குறையையும் கேளுங்க. ஒரு நாள் மந்திரி குமாரி கிட்ட வாங்கின காரிலே – அதை இன்னும் வித்துப் போட வில்லை. இனிமே வித்துப்போடலாம் – திப்பிலியார் உட்காருகிற மூலையில் நான் உட்கார்ந்து சவாரி செய்தேன். அதைத்தான் இன்ஸ்பெக்டர் ஃபிரான்ஸிஸ் சொன்னார். என்பக்கத்தில் உட்கார்ந்திருந்த திப்பிலியாரைச் சமயம் பார்த்துச் சுட்டுக் கொன்றுவிடுவது என்று ஏற்பாடு. நிர்மானுஷ்யமான பாதை அது. புது டிரைவர் ஒருவன் காரை ஓட்டிக்கொண்டு வந்தான்.’’

‘‘ஒரு மூலையில் ஒரு போலீஸ்காரனை – கார் ஓட்டத் தெரியாத போலீஸ்காரன் ஒருவனை – வரச்சொல்லி யிருந்தேன். அவன் திரும்பி சைக்கிளில் பாதையில் வருகிற சமயம் பார்த்து நான் துப்பாக்கியெடுத்துச் சுட்டேன். செத்து விழுந்தவர் போலத் திப்பிலியார் காருக்குள்ளேயே விழுந்தார். கார் ஓட்டி வந்தவன் சட்டென்று காரை நிறுத்திவிட்டுத் திரும்பியே பார்க்காமல் ஓடி மறைந்துவிட்டான். அப்படிச் செய்வதற்காக அவனுக்கு ஒரு ஆயிரம் கூலி பேசியிருந்தேன். அவன் ஊருக்குப் புதியவன் – பட்டணத்திலிருந்து வந்தவன். நாங்கள் யார் என்றுகூட அவனுக்குத் தெரியாது. போலீஸ்காரன் துப்பாக்கிச் சப்தம் கேட்டுச் சற்றுத் தயங்கினான். அவன் பக்கம் நான் துப்பாக்கியை நீட்டியதும் அவன் சைக்கிளைத் திருப்பிக் கொண்டு பறந்து விட்டான் – உதவி தேடிக்கொண்டு போலீஸ் படையுடன் வர அவனுக்கு முக்கால் மணி நேரத்துக்கு மேல் வேண்டும்.’’

‘‘அந்த முக்கால் மணி நேரத்தில் மறைவாக நிறுத்தி வைத்திருந்த ஒரு காரில் ஏற்றிக்கொண்டு நான் ஓட்டிவர, சில நாழிக்குள் கும்பகோணத்துக்கு வண்டியேறிவிட்டார். நான் நேரே திப்பிலியாபுரம் சென்று கமலத்தம்மாளிடம் திப்பிலி யாருடைய கடிதத்தை – ஏற்கெனவே யோசித்துத் தயார் செய்து வைத்திருந்த கடிதம் அது – கொடுத்துவிட்டுப் போலீஸ்காரரின் வரவுக்குக் காத்திருந்தேன்.’’

‘‘கமலத்தம்மாவுக்கு திப்பிலியாரே கைப்படக் கடிதம் எழுதியிருந்தார். தான் செத்துவிட்டதாகப் பாசாங்கு செய்து கொண்டு மறைந்திருக்க வேண்டிய அவசியம் இருந்ததாகவும், போலீஸ்காரர்கள் வந்து என்னைத் திப்பிலியாரைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டினால் நம்பிவிடக் கூடாது என்றும், அன்று பகல் பூராவும் நான் வீட்டைவிட்டே போகவில்லை என்றும், கார் எடுத்துப் போகவில்லை என்றும் திடமாகப் போலீஸிடம் சாட்சி சொல்ல வேண்டும் என்றும் திப்பிலியார் எழுதியிருந்தார். ஒன்றிரண்டு வருஷங்களில் கமலம் தன்னுடைய சொத்து சுதந்திரங்களை எல்லாம்

விற்று எடுத்துக்கொண்டு தன்னுடன் வந்துவிடலாம் என்றும், அதுவரையில் விதவையாகி விட்டது போல் நடிக்க வேண்டியது அவசியம் என்றும், கடிதத்தைப் படித்து விட்டு அடுப்பில் போட்டு எரித்துவிடவும் என்றும் எழுதியிருந்தார்.''

''அப்படியே நடந்தது. போலீஸ்காரன் நான் திப்பிலியாரைச் சுட்டதாகச் சாட்சி சொன்னான். கமலத்தம்மாளோ நான் வீட்டை விட்டுப் போகவேயில்லை என்றும், பாகார்டு காரை வேறு யாரோ எடுத்துப் போனான் என்றும், புதுக் காரோட்டியும், புது ஆளும் என்றும் சொன்னாள். பாகார்டு கார் நாங்கள் விட்ட இடத்திலேயே இருந்தது. அதில் ஸீட்டில் ரத்தக் கறை எதுவும் இல்லை.''

''பெரிய துரையே வந்தார்: 'உன்னை அரெஸ்டு செய்யப் போகிறேன். என்ன சொல்கிறாய்?' என்றார்.''

''எதற்காக?'' என்றேன்.

''திப்பிலியாரைக் கொலை செய்ததற்காக'' என்றார்.

''திப்பிலியார் கொலையுண்டு விட்டாரென்றால் அவர் உடல் எங்கே?'' என்றேன். 'முன் ஒரு தரம் யாரையோ கொன்று விட்டேன் என்று என்னை அரெஸ்ட் செய்து நீங்கள் செத்ததாகச் சொன்ன ஆசாமி உயிரோடு இருப்பதைக் கண்டதும் முகத்தில் கரிபூசிக் கொண்டீங்க. அதேமாதிரி ஆகப் போவுது இப்பவும், என் யசமான் சாகவில்லை' என்றேன்.

''அம்மா அழறாங்களே!' என்றார் துரை.''

''நான் பதில் சொல்லவில்லை.''

''மறுநாள் போலீஸ் கண்காணிப்பு சரிவர இல்லாத சமயம் பார்த்து ஏதோ ஒரு கொடும்பாவி கட்டி அதை மயானத்துக்கு இழுத்துச் சென்று கொளுத்திவிட்டு, அன்று மாலையே எலும்புகளைப் பொறுக்கிக் கரைக்கிற சடங்கையும், எலும்போ பிரேதமோ இல்லா விட்டாலும் செய்து முடித்தோம்.''

''ஊரார் மூலம் விஷயம் அறிந்த போலீஸார் கமலமும் திப்பிலியார் கொலைக்கு உடந்தையோ என்று சந்தேகித்து வாட்ட ஆரம்பித்துவிட்டார்கள். ஆனால் அவள் வீட்டை விட்டுக் கிளம்பவில்லை என்பதும் தெளிவாகியது. கணவன் இறந்துவிட்டான் என்று கமலம் அழுதாள். நான் திப்பிலியார் இறக்கவேயில்லை என்று சந்தித்தேன். என்னை அரெஸ்டு செய்து லாக்கப்பில் ஒருவாரம் அடைத்து வைத்தார்கள். ஒரு வாரத்தில் என் குற்றத்தை நிரூபித்து விடுகிறேன் என்று சவால்

கூறினார் துரை. ஆனால் அந்த ஒரு வாரத்திற்குள் அவர்கள் என்னை விடுவித்துவிட்டார்கள்.''

"இந்த நிலைமையில் நீங்கள் இங்கு வருவது நல்ல தல்லவே'' என்று புதிதாக வந்த பெரியவரைக் கேட்டேன் நான்.

"அதிலே தவறில்லை'' என்று சம்பந்தம் கூறினான். அவர் சொன்ன பதிலால் அவர் எவ்வளவு தூரம் சம்பந்தத்தை நம்பி யிருந்தார் என்பது தெரிந்தது.

"என்னங்க தப்பு? போலீஸ்காரங்க திப்பிலியாருடைய சவத்தைத் தேடிக்கிட்டிருக்காங்க! அந்தத் தேடலைக்கூட அவுங்க முன்னரே கைவிட்டிருப்பாங்க. ஒருத்தரே ஒருத்தர்தான் – நம் எதிரிகளிலே ஒருத்தருக்குத்தான் விஷயம் தெரியும் – அதுவும் எனக்கு நேத்துத்தான் தெரிந்தது.''

"யாருக்கு? டாக்டர் வீட்டு அம்மாளுக்கா?'' என்று கேட்டேன் நான்.

"உண்மையிலேயே நீங்க கெட்டிக்காரருதான் ஐயா'' என்றான் சம்பந்தம். எனக்குத் திருப்தியாக இருந்தது.

# அத்தியாயம் 40

“நேற்றுப் போய் அந்த அம்மாளைப் பார்க்கப் போனேன்; கொழுப்புதான். போகாதிருந்தால் நிம்மதியாக இருந்திருக்கும். போனவுடனேயே அம்மா கேட்டாங்க ‘திப்பிலியார் புது இடத்திலே சௌகரியமாக இருக்காங்களா? எப்ப கமலத்தம்மா வெல்லாம் அங்கே போறாங்க?’ என்று கேட்டாள்.”

“எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ‘எங்கே இருக்காங்கன்னு கூடச் சொல்லிடு வீங்களோ?’ என்றேன்.”

“விசாரித்துத் தெரிஞ்சுக்கறது சிரமம் இல்லை. நமக்கு எதற்கு அதைப்பற்றிக் கவலை என்று விட்டு விட்டேன்” என்றாங்க.

“போலீஸிடம் காட்டிக் கொடுக்காதிருங்க. புண்ணிய முண்டு” என்றேன் கெஞ்சினாப் போல.

“போலீஸ்காரங்க எங்களுக்கு மட்டும் வேண்டிய வங்களோ?” என்று கேட்டாள் அந்த அம்மணி. அதற்கப்புறம்தான் எனக்கு நிம்மதியாயிருந்தது.

இப்படிச் சம்பந்தம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஒரு அம்மாள் சின்னையா பின் தொடர

உள்ளே வந்தாள். அவள் அழகும் காம்பீர்யமும் சேர்ந்து அவள் தான் டாக்டர் சுந்தரத்தின் மனைவி சுந்தரியாக இருக்க வேண்டும் என்று புரிந்துகொள்ள எனக்கு நேரமாகவில்லை. ஒருதரம் சம்பந்தத்தை நிமிர்ந்து பார்த்தேன். அவன் முகமே காட்டியது அவன் மனோ நிலையை.

அருகில் வந்ததும் சின்னையா முதலில் என்னை அந்த அம்மாளுக்கு அறிமுகம் செய்து வைத்தான். எழுந்து நின்று நான் “நமஸ்காரம்” என்றேன். “நமஸ்தே” என்று பதில் வணக்கம் தெரிவித்த டாக்டரின் மனைவி “எங்க அண்ணாரு, சம்பந்தம். அவரை உங்களுக்குத் தெரியும்” என்று சின்னையன் சொன்னதைக் காதில் வாங்காமலே எங்களிருவருடன் புதிதாக வந்து உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த பெரியவரை அணுகி “நான் உங்களை இதுவரை நேரில் பார்த்ததில்லை. ரொம்பவும் கேள்விப்பட்டிருக்கிறேன். வணக்கம்” என்றாள்.

“வணக்கம்” என்று தடுமாறினார் பெரியவர்.

“ஊரைவிட்டே போய்விடுவது என்று தீர்மானித்து விட்டீங் களாம். அதுவும், உங்கள் தீர்மானம் என்பதனால் நல்லதுதான். உங்கள் மனைவியையும்

அழைத்துக்கொண்டு போகிறீர்களாமே! அதுவும் நல்ல முடிவு தான். அந்த அம்மா ரொம்பவும் கஷ்டப் பட்டு விட்டாங்க. திப்பிலியாபுரம் வந்ததிலேயிருந்தே அவுங் களுக்கு ஒரு சுகமும் இல்லை.''

''ஆமாம்.''

''திப்பிலியாபுரத்து மில்லை என் தம்பி ஒருவனுக்காக வாங்கித் தர வேண்டும் என்று டாக்டரும் நானும் பேசிக் கிட்டிருந்தோம். விற்பதாயிருந்தால், முதல்லே எங்களுக்குச் சொல்லுங்க. நாங்க வாங்காவிட்டால் வேறு யாருக்காவது தரலாம்'' என்றாள் டாக்டரின் மனைவி.

''விற்கிறதாக இருந்தால் உரியவர்களிடம் சொல்லி உங்களுக்குத் தெரிவிக்கச் சொல்றேன்'' என்றார் பெரியவர்.

''வரட்டுங்களா?'' என்று எங்கள் பக்கம் திரும்பிப் பார்க்காமலே போய்விட்டாள் டாக்டரின் மனைவி.

என் மனத்திலிருந்ததை சம்பந்தம்தான் வாய்விட்டுச் சொன்னான்: ''ராஜவேலுவுக்கும் திப்பிலியாருக்கும் இடையில் நடந்த பத்து வருஷத்து யுத்தத்தில் ஜெயித்தது டாக்டர் மனைவி சுந்தரியம்மாள்தான்.''

அப்படித்தான் எனக்கும் தோன்றிற்று!

★★★